
# கல்கி

KALKI 6.6.99 ரூ. 4.50



சரத்பவார் பேட்டி!

# புகைச்சலா?!



ஒவ்வொரு முறையும் உங்கள் கூந்தல்
முறியும்போதும் நீங்கள் மனம் உடைந்து போகிறீர்களா ?

ஆனால் இப்போது இல்லை.

வழங்குகிறோம் புதிய ஃபார்முலா ஆர்கானிக்ஸ் வேர் போஷாக்கு ஷாம்பூ. கூந்தல் முறிவதையும், உதிர்வதையும் புதிய ஃபார்முலா ஆர்கானிக்ஸ் 50% வரை குறைக்கிறது என்று விஞ்ஞானரீதியான ஆய்வுகள் நிரூபித்துள்ளன. இதில் உள்ள



அட்வான்ஸ்ட் குளூகானில் காம்ப்லெக்ஸ் உங்கள் கூந்தல் வேர்களில் ஆழ்ந்து சென்று போஷாக்கு அளிக்கிறது. புதிய ஃபார்முலா ஆர்கானிக்ஸ் உபயோகிப்பதனால் கூந்தல் முறிவதும், உதிர்வதும் குறைவதுடன் கூந்தலில் உண்மையான அழகும் மிளிர்கிறது.

புதிய ஃபார்முலா
ஆர்கானிக்ஸ்
வேர் போஷாக்கு ஷாம்பூ



வேர்களில் ஆழ்ந்து சென்று
உண்மை அழகு மிளிரச் செய்கிறது.

HTA.2908.1999



# வளர்ப்பு மகன் திருமணம்; வீரப்பன் பேட்டி; ஸ்பெஷல் ரயில்!

புகழ்பெற்ற அரசியல் குடும்பம்தான்! ஆனாலும் கலாநிதி மாறனுக்கு மாணவப் பருவத்தில் அரசியல் ஆர்வம் இல்லை. ஆனால் சக மாணவர்கள் உசுப்பேற்றிவிட்டு, கல்லூரி யூனியன் தேர்தலில் போட்டியிட வைத்து விட்டார்கள்! அதற்கு அவர்கள் சொன்ன வாதம் : "ரொம்பக் காலமாக, காமர்ஸ் மாணவர்கள் யாரும் யூனியன் எலெக்ஷனில் நின்று ஜெயித்தது இல்லை! அதை மாற்றி, நம்மைச் சேர்ந்த ஒருவர், மாணவர் யூனியன் தலைவராகிக் காட்ட வேண்டும்!"

அப்பா, மகனைத் தடுக்கவும் இல்லை; வாழ்த்தி வழியனுப்பவும் இல்லை. தேர்தலில் போட்டியிட்ட கலாநிதி ஜெயித்து விட்டார்!

அப்போது தமிழக முதல்வராக இருந்தவர் எம்.ஜி.ஆர். இலங்கைத் தமிழர் பிரச்னைக்காக அனைத்துக் கல்லூரி மாணவர்கள் சார்பில் ஓர் ஊர்வலத்துக்கு ஏற்பாடானது. கலாநிதி மாறன் தலைமையில் அவர் படித்த லயோலா கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

மாணவர்கள் மீது போலீஸ் தாக்குதல் நடந்தது. பலமான அடி. ஆனாலும் தான் அடிபட்டதை, அரசியலாக்காமல் விட்டு விட்டார் அவர். ஆஸ்பத்திரியில் தங்கி, சிகிச்சை பெற வேண்டியிருந்தது.

"அதுதான் கடைசி! அதன் பின் நான் தேர்தல், அரசியல் என்று தலை வைத்துப் படுத்ததில்லை'' என்று சொல்கிறார், சிறந்த இளம் தொழிலதிபர் விருது பெற்றுத் திரும்பியிருக்கும் கலாநிதி மாறன்.

''பி.காம். முடித்த பிறகு, அமெரிக்கா சென்று மேலே படிக்க விரும்பினேன். அதற்கான நுழைவுத் தேர்வு எழுதினேன். தேர்வான பின்தான் என் அப்பாவுக்கு விஷயத்தைச் சொன்னேன். அவருக்கு இனிய ஆச்சரியம்! (என் அம்மாவுக்கு மட்டும் பரீட்சைக்கு விண்ணப்பிக்கிறபோதே தெரியும். பரீட்சைக்குக் கட்டப் பணம் கொடுத்தவர் அவர்தான்!)

"சிறு வயது முதலே, சொந்தமாக ஏதாவது பிசினஸ் என்பதுதான் என் லட்சியமாக இருந்தது. எனவேதான் அமெரிக்கா சென்று படிப்பைத் தொடர முடிவு செய்தேன். படிக்கிற மாணவர்கள், பகுதி நேரமாக வேலை செய்து சம்பாதிப்பது அங்கே அவசியம் என்பதால், நானும் பல்கலைக் கழக வளாகத்துள்ளேயே இருந்த உணவகத்தில், சில மாதங்கள் வேலை பார்த்தேன். உணவகத்தில் டிஷ் வாஷரில் பாத்திரங்கள்

கழுவும் வேலை. அதன்பின், பல்கலைக்கழக நூல் நிலையத்தில் சில மாதங்கள் வேலை பார்த்தேன். அதனையடுத்து, கம்ப்யூட்டர் டிபார்ட்மெண்ட்டில். அப்போதுதான் நான் கம்ப்யூட்டரின் பயன்பாட்டு வீச்சினை முழுமையாக அறிந்து கொண்டேன்.

''செலவைக் குறைத்து, சம்பாதித்த பணத்தைச் சேர்த்து வைத்து, வார இறுதி நாட்களில், அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளையும் சுற்றிப் பார்க்கப் போய் விடுவேன். வசதியான குடும்பத்தில் பாதுகாப்பான சூழலில் வளர்ந்து விட்ட எனக்கு, அமெரிக்க வாழ்க்கை நிறைய கற்றுக் கொடுத்தது.

''அங்கே வாழ்க்கை முறை, சவால்கள் இன்னபிறவற்றைப் பார்த்தபோது, சென்னை வாழ்க்கையில் குண்டுசட்டிக்குள் குதிரை ஓட்டிக் கொண்டு இருந்து விட்டதாகவே நான் நினைத்தேன். அமெரிக்க வாழ்க்கை என் மனத்தளவில் பெரியதொரு புரட்சியை ஏற்படுத்தியது.

''ஒரு வருடம், எட்டு மாதப் படிப்பை முடித்தபின், நான் மேலே தொடர்ந்து டாக்டரேட் வாங்க வேண்டும் என்பது என் அப்பாவின் விருப்பம். ஆனால், டாக்டரேட் முடித்து பேராசிரியராகவோ, விரிவுரையாளராகவோ போக எனக்கு ஆர்வம் இல்லை. எனவே, மேலே படிக்கவில்லை.

''இந்தியா திரும்பிய பின், அப்பா என்னைக் குங்குமம் பத்திரிகையில் வேலைக்குச் சேர்த்து விட்டார். முதலில் வாசகர் கடிதங்களையும், ஏஜெண்ட்களிடமிருந்து வரும் கடிதங்களையும் படிப்பது தான் எனக்குத் தரப்பட்ட வேலை. கடிதங்களைப் படித்துக் கிடைத்த அனுபவத்தில், ஒரு கதை, கட்டுரையைப் பற்றி ஆத்மார்த்தமான விமர்சனம் எது, பத்திரிகையில் பெயர் வர வேண்டும் என்பதற்காக எழுதப்படும் கடிதம் எது என்பதை என்னால் இனங்கண்டு கொள்ள முடிந்தது. அந்தப் பயிற்சி, ஆரம்பக் காலத்தில் சன் டீ.வி.யில் கூட எனக்கு உபயோகமாக இருந்தது!

''அதன்பின் விளம்பரப் பிரிவு, சர்குலேஷன், அச்சகம் என்று எல்லா டிபார்ட்மெண்ட்களிலும் வேலை கற்றுக் கொண்டேன். இறுதியில் குங்குமம் நிர்வாகம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது.

''அப்போதுதான், கேபிள் டீ.வி. அறிமுகமாகியிருந்த சமயம். பூமாலை என்ற பெயரில் ஒரு வீடியோ பத்திரிகை ஆரம்பித்தேன். ஒரு பத்திரிகையில் என்னென்னவெல்லாம் இடம்பெறுகிறதோ அவை அனைத்தையும் விஷுவலாக்கித் தரும் புதிய முயற்சிக்கு, ஆரம்பத்தில் நல்ல வரவேற்பு. ஆனால், நாளடைவில், திருட்டு வீடியோவினால் விற்பனை பாதிக்கப்பட்டது. உள்ளூரில் விற்பனை குறைந்தாலும், அயல்நாட்டு விற்பனை உயர்ந்து கொண்டிருந்தது. அப்போதுதான் தமிழுக்கென்று உலகளாவிய பார்வையாளர்கள் இருப்பதைப் புரிந்து கொண்டேன்.

''கேபிள் மூலம் ஸ்டார் டீ.வி. வீட்டுக்குள் நுழைந்து ஆக்கிரமிப்பதைக் கண்டதும், நாமும் தமிழில் ஒரு சாடிலைட் சானல் ஆரம்பித்தால் என்ன என்று தோன்றியது. அப்போது இந்தியாவில் ஸ்டார் டீவிக்கு அலுவலகம் கிடையாது. ஜீ டீ.வி.யின் மும்பை அலுவலகத்துக்குப் போய் சாடிலைட் சானல் ஆரம்பிப்பது பற்றிய விவரங்களைத் தெரிந்து கொள்ள முயன்றேன். கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளாத குறைதான்!

''அப்புறம், அவர்களின் போட்டி சானலான ஏ.டி.என்.-ஐ அணுகினேன். மரியாதை கொடுத்துப் பேசினார்கள். அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு சன் டீ.வி.யைத் துவக்கினேன். சன் டீ.வி. வளர்ந்த கதை யாவரும் அறிந்ததுதான். இன்று நேரடி ஒளிபரப்பு வரை வந்து விட்டோம். சன் நெட் ஒர்க்கில், கன்னட உதயா, தெலுங்கு ஜெமினி, மலையாள சூர்யா என்று இப்போது மூன்று சேனல்கள்!''

''சன் டீ.வி.யின் வரலாற்றில் மிக மிகப் பரபரப்பூட்டியவை என மூன்று விஷயங்களைப் பட்டியலிடுங்கள் பார்ப்போம்?''

''வளர்ப்பு மகன் திருமணம், வீரப்பன் பேட்டி, ஸ்பெஷல் ரயில் விட்டது.''

''பெங்காலி சானல், தமிழில் இரண்டாவது சேனல்- வரப் போகிறது என்று ரொம்ப நாளாகச் சொல்லப்படுகிறதே! எப்போது ஆரம்பம்?''

''உலகக் கோப்பை நடக்கிறது. தேர்தல் வரப் போகிறது. இதெல்லாம் முடிந்தபின் தான் புதுச் சேனல்கள்!''

சந்திப்பு : **எஸ். சந்திரமௌலி**

படம் : **ஸ்ரீஹரி**

# அரசியல்வாதிகளே கிரிக்கெட் ஆடுங்கள்!



• உலகிலேயே அதிகம் சம்பாதிப்பவராமே?

"என் விளையாட்டான மல்யுத்தத்தில், அடி தடி, குத்துதான் வெற்றிக்கு வழி. ஆனால் கிரிக்கெட் அப்படியில்லை. ஒரு ஜென்டில்மென் விளையாட்டு.

"இன்று கிரிக்கெட் ஒரு பணம் கொழிக்கும் ஆட்டம். நம்ம சச்சின்தான் உலகத்திலேயே அதிகம் சம்பாதிக்கும் கிரிக்கெட் வீரராமே! அப்படியா?

"நான் கூடச் சிறு வயதில் கொஞ்சம் கிரிக்கெட் ஆடியிருக்கிறேன். 1954-ல் ஸ்ரீலங்காவிற்கு நான், கிங்காங் எல்லாம் மல்யுத்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காகப் போயிருந்தோம். ஒருநாள் போட்டி போல ஒரு கிரிக்கெட் மேட்ச் நடத்தினார்கள் அங்கே. அதில் நான், கிங்காங் இதர பல மல்யுத்த வீரர்கள் ஒரு அணி. ஸ்ரீலங்காவில் ஒரு கிரிக்கெட் கிளப்பைச் சேர்ந்தவர்கள் ஒரு அணி.

மேட்சில் நான் நாற்பத்து எட்டு ரன்கள் எடுத்தேன். "பேசாமல், மல்யுத்தத்தை விட்டு விட்டு, கிரிக்கெட் ஆடப் போய்விடு" என்று தமாஷாகச் சொன்னார் கிங்காங்.

அதன்பின் ஒரு சமயம், இந்தி ஸ்டார் ராஜ்கபூரின் ஏற்பாட்டில், இந்தி சினிமா நட்சத்திரங்கள் இடம்பெற்ற ஒரு அணிக்கும் கல்கத்தாவில் ஒரு கிரிக்கெட் கிளப் அணிக்கும் இடையே கல்கத்தாவில் ஒரு கிரிக்கெட் மேட்ச் நடைபெற்றது. அதில் நான் மிக நன்றாகப் பந்து வீசியதாகச் சொன்னார்கள். (மேட்சில் நாங்கள் தோற்று விட்டோம்) அதைப் பார்த்துவிட்டு, 'நீ தவறிப் போய் மல்யுத்தத்துக்குப் போய் விட்டாய். கிரிக்கெட்டில் இருந்திருந்தால், இந்திய அணியில் கூட இடம்பெற்றிருப்பாய்!' என்று பாராட்டினார்.



• தாராசிங்

"அந்தக் காலத்தில் கிரிக்கெட்டில் இத்தனை பணம் கிடைக்காது. மல்யுத்தத்தில் காசு கொட்டியது. அதனால்தான் நான் மல்யுத்தத்தில் ஆர்வம் கொண்டேன்.

"கிரிக்கெட் விளையாட்டில், எனக்குப் பிடித்ததே, வெற்றிக்காக அணியின் ஒவ்வொரு ஆட்டக்காரரும் பாடுபட்டு, ஒத்துழைப்பதுதான்.

"இந்த உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி வந்தாலும் வந்தது, உலகமே ஸ்தம்பித்துப் போய்விட்டது போல இருக்கிறது. ஸ்டூடியோக்களில் வேலை நடப்பதில்லை. சினிமா தியேட்டர்கள் ஈயடிக்கின்றன. புதுப்பட ரிலீஸ்கள் ஒத்திப் போடப்படுகின்றன.

"நம் ஊர் அரசியல்வாதிகள், கிரிக்கெட்டிலிருந்து ஒரு பாடம் கற்றுக் கொள்ள வேண்டும். தந்திரங்கள் மூலம் காலை வாரி விடாதீர்கள். நேர்மையாக அரசியல் களத்தில் விளையாடுங்கள். வெற்றி பெறுகிறவர்களே பெருமை (ஆட்சி) பெறட்டும்!"

– சொன்னது, மல்யுத்த வீரர் தாராசிங்!

**— சி.எம்.**

படம்: **ரவிசங்கரன்**

# ஜப்பானில் ரஜினி ஜுரம்!

'முத்து' திரைப்படம் ஜப்பானில் வசூலில் பிய்த்துக் கொண்டு போகிறதாம். இந்த சூட்டில் ரஜினிகாந்த்தின் சமீபத்திய படங்கள் அனைத்தையுமே ஜப்பானிய மக்கள் பார்த்து ரசிக்கத் தொடங்கினால் என்னவாகும்? டோக்கியோவில் வசிக்கும் நம் நண்பர் நாலைந்து மாதங்களுக்குப் பிறகு நம்மைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டால் அந்தப் பேச்சுவார்த்தை இப்படித்தான் இருக்குமோ?

"என்னடா காபிதாஸா இப்பவும் 'மெட்ராஸிலே ஒரு நாளைக்கு ஆறு கப் காபி குடிச்சுக்கிட்டுதான் இருக்கியா?"



"என்ன செய்ய, பழகிப் போச்சு. உனக்கென்ன, ஜப்பானில் தினமும் ஏதாவது நண்பன் வீட்டில் 'டீ செரிமனி'க்குப் போயிடுவே இல்லையா?"

"அதெல்லாம் அந்தக் காலம் பிரதர். இப்பல்லாம் வீட்டு வாசலிலே மணியடிச்சபடியே கெட்டிலைத் தூக்கிக்கிட்டு ஒருத்தன் வர்றான். "வந்தேன்டா டீக்காரன்! அடடா மசாலா டீயைப் பத்தி பாடப் போறேன்"னு பாடிக்கிட்டே டீ விநியோகிக்கிறான், அவ்வளவுதான். அப்புறம் நேத்து ஒரு இகேபனா கண்காட்சிக்குப் போயிருந்தேன்."

"ஜப்பானியர்கள் அற்புதமாக மலர்களை வைத்து அலங்காரம்



செய்வாங்களே, அந்தக் கலைதானே அது? ரொம்ப சுவையான அனுபவம்னு சொல்லு"

"உண்மைதான். அதிலே ஒரு க்விஸ் வச்சாங்க. அதிலே முதல் கேள்வி என்ன சொல்லு பார்க்கலாம்."

"தெரியலையே."

"கொண்டையில் தாழம்பூ நெஞ்சிலே வாழைப்பூ, கூடையில் என்ன பூ?" இதுதான் அந்தக் கேள்வி."

"ஜப்பானியர்கள் அவ்வளவு தூரம் தமிழ் கத்துக்கிட்டாச்சா!"

"இல்லே. ரஜினி படப் பாடல்களையெல்லாம் ஜப்பானிய மொழியிலே மாத்தியாச்சு."

"அதிசயமா இருக்கே."

"இதென்ன அதிசயம். உலகத்திலேயே வேகமா ஓடக்கூடிய புல்லட் ட்ரெயின்கள் இங்கதான் இருக்கும்பாங்க. ஆனா 'முத்து' பார்த்த உற்சாகத்திலே ஒரு ஜப்பானிய ரசிகர், ஒரு மாட்டு வண்டியிலே ஏறிக்கிட்டு புல்லட் ட்ரெய்னை ஓவர்டேக் செய்திருக்கார். நேற்று 'டோக்கியோ டைம்'ஸில் அவருடைய பேட்டி வந்தது."

"அட அவராலே இது எப்படி முடிஞ்சது?"

"கேட்டால் 'அந்த கௌதம புத்தர் சொல்றார், இந்த கௌதிகோ கொமுரா செய்யறான்'னு ரத்னச் சுருக்கமா பதில் சொல்றார்."



"நல்ல கூத்து."

"இன்னொண்ணும் கேளு. மாமிச மலை கணக்கா இங்கே சில ஜப்பானியர்கள் சுமோ குத்துச் சண்டை போடுவாங்க இல்லையா? அதையெல்லாம் அவங்க மூட்டை கட்டி வச்சுட்டு, இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்கா குண்டு வீசியதே, அந்த ஹிரோஷிமா – நாகாசகி பகுதிகளுக்குப் போய் தினமும் 'மண்ணின் மீது மனிதனுக்கு ஆசை. மனிதன் மீது மண்ணுக்கு ஆசை. மண்தான் கடைசியில் ஜெயிக்கிறது"ன்னு பாடிக்கிட்டே க்ரூப் டான்ஸ் ஆடறாங்க."

"கண்கொள்ளாக் காட்சிதான்! அப்புறம்?"

"சில தொழிற்சாலைகளிலே இங்கே ஸ்டிரைக் நடக்குது. தொழிலாளிங்க ஒரு மணி நேரம் வேலை செய்துட்டு "நாங்க ஒரு மணி வேலை செய்தா நூறு மணி நேரம் வேலை செய்த மாதிரி"னு அதிகக் கூலி கேட்க, முதலாளிகள் "நாங்க ஒருநாள் சம்பளம் கொடுத்தால் நூறு நாள் சம்பளம் கொடுத்த மாதிரின்னு சொல்றாங்க. ஆனால் ஒரே ஒரு ஊழியர் மட்டும் நேரம் காலம் பார்க்காமல் தொழிற்சாலையிலே மாங்கு மாங்குன்னு உழைக்கிறாராம்."

"ஏன்? அவர் நம்ம தமிழ்ப் படங்களைப் பார்க்கலியா?"

"பார்க்காம என்ன? கேட்டால் தலையை சிலுப்பிக்கிட்டு விரலை நிமிர்த்தியபடி 'என் வழி தனி வழி'ன்றாரு."

**— ஜி.எஸ்.எஸ்.**

---

# குரங்கு பொம்மைகள் உணர்த்தும் நான்காவது பாடம்!

**பா**ர்வதி தேவி, பரமேஸ்வரனைத் திருமணம் செய்துகொள்ளும் நோக்கத்துடன் தவம் இருந்தபோது, பரமசிவன், பார்வதியை சோதித்துப் பார்க்க நினைத்தார். ஓர் அழகான இளைஞன் உருவில், பார்வதி தவம் செய்து கொண்டிருந்த இடத்துக்கு வந்தார். பார்வதியின் காதில் விழும்படியாக, பரமசிவனைப் பற்றித் தகாத வார்த்தைகள் சொல்லி கேலி செய்தார். அழகான, இளைய வயதுடைய தன்னைக் கல்யாணம் செய்து கொளும்படிக் கேட்டார்.

இதைக் கண்டு கோபமடைந்தார் பார்வதி. இந்த இளைஞனிடம் நேரிடையாகப் பேசுவது கூடப் பாவம் என்று நினைத்து, தன் தோழியிடம் "அந்த தகாத வார்த்தைகள் பேசும் இளைஞனை உடனடியாக இந்த இடத்தை விட்டுப் போகும்படிச் சொல்" என்றார்.

அந்தத் தோழியும் அப்படியே செய்து விட்டு, பார்வதியிடம், "அவன் என்ன வேண்டுமோ சொல்லி விட்டுப் போகட்டுமே! நாம் எதற்கு அவனைப் போகச் சொல்ல வேண்டும்? அவன் பேசுவதைக் கேட்டுக் கொண்டு, சும்மா இருந்தால் போதுமே!" என்றாள்.




அதற்குப் பார்வதி சொல்கிறாள்: "அந்த இளைஞன் பேசும் அபசாரமான சொற்களைக் கேட்பது பாவம். அவனை விரட்டி அனுப்பாமல் சும்மா இருந்தால், அது அவனை மேலும், மேலும் இதுபோலவே பேசும்படித் தூண்டும். அதனால் இன்னொரு மடங்கு பாவம் நமக்கு வந்து சேரும்" என்றார் பார்வதி.

ஆக, கெட்ட விஷயங்களைக் கேட்பதும், அவர்கள் மேலும் மேலும் அப்படி பேசுவதற்குத் தூண்டுகிறாற்போல, அதைத் தடுக்காமல் விடுவதும் இரு மடங்கு பாவ காரியம் செய்ததற்கு ஒப்பாகும்!

**ம**காத்மா காந்தியின் குரங்கு பொம்மைகளைப் பார்த்திருப்பீர்களே! இரண்டு காதுகளையும் மூடிக் கொண்ட பொம்மை, "தீயதைக் கேட்காதே" என்கிறது. இரண்டு கண்களையும் மூடிக் கொண்ட பொம்மை, "தீயதைப் பார்க்காதே" என்கிறது; இரண்டு கைகளாலும் வாயைப் பொத்திக் கொண்டிருக்கும் பொம்மை, நமக்கு "தீயதைப் பேசாதே!" என்று மட்டும் சொல்லவில்லை – இன்னொரு விஷயத்தையும் சொல்லுகிறது! "தீயதைக் குடிக்காதே!" (மது விலக்கு காந்திஜிக்குப் பிடித்த கொள்கையாயிற்றே!)

– ஸ்ரீ ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஒரு கூட்டத்தில் பேசக் கேட்டவர் : கௌதம்



# ஸ்ரீ சாரதா சக்தி பீடம்



16,காமராஜ் சாலை,பழையபெருங்களத்தூர்,
(வழி) தாம்பரம்,சென்னை-600063.
Tel&FAX : 2376129,Cell Ph : 9841050464
E-mail: sspeetam@md3.vsnl.net.in
& sspeetam@hotmail.com
WEB SITE: www.intamm.com / sspeetam

## ஏழைமாணவர்களுக்கு உதவுங்கள்

பேரன்புடையீர்! வணக்கம்

நம் சக்தி பீடத்தின் சார்பில் கடந்த ஒன்பது ஆண்டுகளாக நடைபெற்று வரும் "ஸ்ரீ ராமகிருஷ்ண சேவா குருகுலத்தில்" தாய், தந்தையற்ற, வசதியற்ற, திக்கற்ற 75 மாணவர்களும் 25 மாணவிகளும் தங்கி படித்து வருகின்றனர்.

நாள்தோறும் இறைவழிபாடு, கூட்டு பிரார்த்தனை, பகவத்கீதை பாராயணம் ஆகியவைகளுடன், நல்ல கல்வி, காலை, மாலை உடற்பயிற்சி ஆகியவைகள் அளிப்பதுடன் உணவு, உடை, தங்குமிடம் ஆகியவைகளும் இலவசமாக வழங்கப்பட்டு நல்ல முறையில் வளர்த்து வருகிறார்கள்.

மேலும் பகவான் ஸ்ரீ ராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர் ஆகியோர்களின் உயர்ந்த லட்சியங்கள் போதிக்கப்படுவதுடன், சமுதாய சேவை பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இக்குருகுலத்தின் பராமரிப்பு செலவு முழுவதும் நன்கொடையாளர்கள் அளிக்கும் உதவிகள் மூலம் மட்டுமே நடைபெற்று வருகிறது. ஆகவே, தாங்கள் இப்புனிதப் பணிக்கு தங்களால் இயன்ற உதவியை செய்யும்படி பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

| | | |
|---|---|---|
| காலை சிற்றுண்டி ( 100 பேருக்கு ) | ரூ. | 750/- |
| மதிய உணவு ( இனிப்புடன் ) | ரூ. | 1,500/- |
| இரவு சிற்றுண்டி | ரூ. | 1,000/- |
| இனிப்பு மற்றும் பால் வழங்குதல் | ரூ. | 500/- |
| ஒரு மாணவனுக்கு ஓரண்டிற்கு கல்வி உதவித் தொகை | ரூ. | 1,000/- |
| ஒரு மாணவனுக்கு பராமரிப்பு செலவு ஓராண்டிற்கு ( உணவு, உடை, கல்வி ) | ரூ. | 6,000/- |
| குருகுலத்தின் ஒரு மாதத்திற்கான பராமரிப்பு செலவு | ரூ. | 75,000/- |

தாங்கள் அளிக்கும் தொகை எவ்வளவு சிறியதாக இருந்தாலும் அன்புடன் ஏற்றுக்கொள்கிறோம்.

உங்கள் நன்கொடைகளை "ஸ்ரீ சாரதா சக்தி பீடம்" என்ற பெயருக்கு Cheque/DD/MO மூலம் அனுப்பி வைக்கும்படி பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நன்கொடைகளுக்கு 80 G பிரிவின்படி
வருமானவரி விலக்கு உண்டு

இறைவன் தொண்டில்
சுவாமி சர்வாத்மானந்தர்.

மீண்டும் ஒரு வெற்றிக்கனி சாப்பிட்டிருக்கிறார் கே.எம். விஜயன். ஜெயலலிதா மீதான வழக்குகளைச் சிறப்பு நீதி மன்றங்களிலிருந்து, பொது நீதி மன்றங்களுக்கு மாற்றி, மத்திய அரசு வெளியிட்ட உத்தரவை எதிர்த்து சுப்ரீம் கோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார் விஜயன்.


உயர்நீதி மன்ற உத்தரவின்படி, சிறப்பு நீதிமன்றங்களுக்கு ஒதுக்கப்பட்ட வழக்குகளை நீதி மன்றத்தைக் கலந்து ஆலோசிக்காமல், தன்னிச்சையாக மாற்ற மத்திய அரசுக்கு அதிகாரமில்லை என்பது உட்பட, சில சட்ட நுணுக்கங்களைச் சுட்டிக் காட்டி, வாதிட்டதன் விளைவு தனிக் கோர்ட்களில் ஜெ. வகையறாக் களின் மீதான வழக்குகளைத் தொடர்ந்து நடத்தலாம் என்ற சுப்ரீம் கோர்ட் தீர்ப்பு!

இதற்கு முன்னதாக, கிரிமினல் வழக்கில் ஆஜராக வேண்டிய சேடப் பட்டி முத்தையா, மத்திய அமைச்சராக இருப்பதற்குத் தகுதி இல்லாதவர் என்று சுப்ரீம் கோர்ட்டில் ஒரு ரிட் மனு தாக்கல் செய்திருந்தார், விஜயன். அந்த மனு விசாரணைக்கு வரும் முன்னரே, பிரச்னை பெரிதாகி, சேடப்பட்டியிடம் அமைச்சர் பதவியை ராஜினாமா செய்யும்படி வாஜ்பாய் கூறிவிட்டார்.

இதற்கு முன்பு இவர் போட்ட தீபாவளி மலர் பம்பர் பரிசுகளைத் தடை செய்யச் கோரும் மனுவும் பெரும் பரபரப்பு ஏற்படுத்தியது. தீபாவளி மலர் வெளியிட இருந்தவர்களில் சிலர் விஜயனை மிரட்டிப் பார்த்தனர். சிலர் பணம் கொடுத்து சரிகட்டப் பார்த்தனர். இன்னும் சிலர், நட்பு ரீதியாகப் பிரச்னையை அமுக்கப் பார்த்தார்கள். ஆனால் விஜயன் அதற் கெல்லாம் மசியவில்லை.

"எழுபத்தி ஐந்து ரூபாய்க்கு தீபாவளி மலர் வாங்கினால், ஏழரைக் கோடி ரூபாய் மதிப்புள்ள பரிசு தருவது என்பது எந்த விதத்தில் நியாயம்! சிறு வயது முதலே, தீபாவளி மலர்கள் மீது எனக்கு ஒரு மதிப்பும் மரியாதையும் உண்டு. அவற்றை இலக்கியப் பொக்கிஷங்களாகக் கருதுபவன் நான்! அத்தகைய தீபாவளி மலர்களின் பெயரில், லாட்டரி நடத்த முற்பட்டது, வாசகன் என்ற முறையில் என்னை வேதனையடையச் செய்தது. அதனால்தான் சட்ட ரீதியாக நான் அதற்கு முற்றுப்புள்ளி வைக்க முயன்றேன். அடுத்த வருடம் இது போன்ற தீபாவளி மலர் பம்பர் பரிசுகள் நடத்த இயலாது என்ற அளவில், என் முயற்சிக்கு வெற்றிதான்" என்கிறார் விஜயன்.

அநீதிகளை எதிர்க்கும் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் 'வாய்ஸ்' என்ற அமைப்பைத் தொடங்கினார். இட ஒதுக்கீடு எதிர்ப்பு முதல், சிறப்பு நீதிமன்ற விவகாரம் வரையிலான அனைத்து கேஸ்களையும் இந்த வாய்ஸ் அமைப்பின் மூலமே



நடத்தியிருக்கிறார் விஜயன்.

"அரசியல்வாதிகளை எதிர்த்து வழக்காடும்போது, அச்சுறுத்தல்கள் அதிகம் இருக்குமே! எதற்கு இந்த வீண் வம்பெல்லாம் என்று நீங்கள் இல்லாவிட்டாலும், உங்கள் குடும்பத்தினரும், உறவினர்களும் நினைப்பார்கள் அல்லவா?"

"அது உண்மைதான். ஆனால், இது போன்ற சலசலப்புகளுக்கெல்லாம் நான் பயப்படுவது இல்லை. இட ஒதுக்கீடு எதிர்ப்பு விவகாரத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன்! அதிகாலையில் வீட்டை விட்டு டெல்லி புறப்படுகிறபோது தெலுங்குப் பட சீன் போல ஐந்தாறு ரௌடிகள். உருட்டுக் கட்டை சகிதம் வந்து சரமாரியாகத் தாக்கினார்கள். ஐந்து நிமிடங்களாவது தொடர்ந்து அடித்திருப்பார்கள். என் மண்டையில் பலமான அடி. மண்டையில் மேலும் அடி விழாமலிருக்க, கைகளால் மறைத்துக் கொண்டதால் கைகளை உண்டு இல்லை என்று பண்ணி விட்டார்கள்.

"உடல் ரீதியாக என்னை அவர்கள் தாக்கினாலும், என் மனம் அதைக் கண்டு சோர்வு அடையவில்லை. முன்னிலும் அதிகமான. ஒரு வெறியைத்தான் எனக்குள்ளே அது ஏற்படுத்தியது. ஆரம்பக் கட்டங்களில் தோல்வி அடைந்தாலும், மனம் சோர்ந்து போய் விடக் கூடாது. தொடர்ந்து முழுமையான ஈடுபாட்டுடன் கூடிய போராட்டம்தான், சற்றுக் காலதாமதமானாலும் வெற்றியைப் பெற்றுத் தரும் என்று உறுதியாயிருந்தேன். நான் மரணத்தின் விளிம்பைத் தொட்டு விட்டு, மீண்டு வந்தவன். எனவே அது வருகிறபோது வரட்டும். அதைப் பற்றி தினம் தினம் ஏன் பயந்து செத்துக் கொண்டிருக்க வேண்டும் என்று நினைக்கும் அளவுக்கு மனது பக்குவப் பட்டு விட்டது" என்கிறார் சிரித்தபடி.

"69% இட ஒதுக்கீட்டை எதிர்த்து நான் போட்ட வழக்கில் இன்னும் இறுதித் தீர்ப்பு வரவில்லை என்றாலும் இடைக்கால நிவாரணமாகக் கடந்த ஆறு வருடங்களாக, மருத்துவம், இஞ்சினீயரிங், சட்டம் போன்ற பல படிப்புகளுக்கும் கூடுதலான சீட்கள் உருவாக்கப்பட்டிருப்பதே ஒரு வெற்றிதான்!"

# போயே போச்சு, பயம்!

**வி**ஜயன், அரசியல் சட்டம், மற்றும் ஆட்சியியல் சட்டங்களில் கைதேர்ந்தவர். பி.எஸ்ஸி ரசாயனம் முடித்த பிறகு, அவரது தந்தை, "சொந்தக்காலில் நிற்கிறாற் போலப் படிப்பைத் தேர்ந்தெடு" என்றார். அதன்படி, விஜயன் தேர்ந்தெடுத்ததுதான் சட்டப்படிப்பு.

படிக்கிற காலத்தில், சட்ட நுணுக்கங்களை எளிதில் புரிந்து கொண்டு சக மாணவர்களுக்குக் கைதேர்ந்த ஆசிரியர் போலப் பாடங்களைச் சொல்லிக் கொடுப்பார் விஜயன் என்பதால், அவர் சட்டக் கல்லூரி ஆசிரியராகத்தான் ஆகப் போகிறார் என்று கூறியவர்களும் உண்டு!

"பத்திரிகைகள் நிறைய படிப்பேன். பல பத்திரிகை ஆசிரியர்கள் என் நண்பர்கள். அவர்களுடன் நேரம் போவது தெரியாமல் பல விஷயங்கள் குறித்தும் விவாதிப்பேன். இதுதான் என் பொழுது போக்கு" என்று சொல்லும் விஜயனுக்கு இரண்டு பெண்கள். மூத்த பெண் தன்னைப் போலவே, சட்டம் படித்து வழக்குரைஞர் ஆவாள் என்கிறார் விஜயன்!

சந்திப்பு : **கௌதம்**

## பவார் கிளப்பிய 'வார்'

சமயம் பார்த்து சோனியாவின் காலை வாருவதற்கு பவாரும் அன்வரும் சங்மாவும் சேர்ந்து கொண்டார்களா? இங்கே பவாரின் 'பவர்' நிலை இரண்டு பட்டுப் போய் விட்டது. சகன் புஜ்பல் தலைமையில் பவாரின் ஆதரவாளர்கள் அவரின் ஒரு காலை கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்க, சோனியா அனுதாபிகள் மற்றொரு காலை இழு இழுவென்று இழுக்கிறார்கள். இவர்கள் பவாரை தேசப்பற்று மிக்க தலைவன் என்று கோஷிக்க, அவர்கள் தேசத் துரோகி என்று தூஷிக்கிறார்கள். அந்நியருக்கு அடிமைப்படலாகாது என்ற பாட்டை இவர்கள் பாடினால், 'பெப்ஸி, என்ரான், ட்யூபாண்ட்.... வகையறாக்களை இங்கே வெற்றிலை பாக்கு வைத்து அழைத்தது யார்' என்று அவர்கள் எதிர்பாட்டுப் பாடுகிறார்கள். சுயமரியாதையோடு வாழ்வோம் என இவர்கள் மார் தட்டினால், 'காங்கிரஸைக் காப்பாற்று என சோனியா காலில் விழுந்த போது மரியாதையை எல்லாம் காற்றில் பறக்க விட்டாரா?' என அவர்கள் ஆக்ரோஷிக்கிறார்கள். பவாரின் போஸ்டர், பொம்மைகளை அவர்கள் கொளுத்த, கொளுத்தியவர்களின் கை கால்களை இவர்கள் முறிக்க, ஒரு காங். பெண் புலி தன் தாலியை யாரோ பிடித்திழுத்து விட்டதாக டயலாக் அடிக்க – கொஞ்ச காலத்துக்கு ஒரே அமளி, குடுமிப்பிடிதான்! மந்த்ராலயாவுக்குச் சமமாக, பக்கத்திலேயே ஒய்.பி.சவாண் பிரதிஷ்டானத்தில் தினமும் பவார் சபை கூடி அமர்க்களப்படுவதைப் பார்த்தால், 'பாரலல் கவர்ன்மெண்ட்' துவங்கி விட்டார்களோ எனப் பலருக்குச் சந்தேகமாகி விட்டது! இத்தனை கலாட்டாவையும் மனதுள் ரசித்து மகிழ்வதென்னவோ சிவசேனை – பி.ஜே.பிகாரர்கள்தான்! அவர்கள் நடத்த இருந்த 'ராமா? ரோமா?' பட்டிமன்றத்தை, இவர்களே அல்லவா விவாதித்து, நார் நாராகக் கிழித்து, குதறி அடித்து மடிகிறார்கள்? ஹூம்... ராணேவுக்கு மச்சம்தான்!

## இறுதி வரையில் உறுதி!

சும்மா சொல்லக் கூடாது. பிள்ளையின் பணமோ, புகழோ 68 வயது ரமேஷ் டெண்டுல்கரைக் கொஞ்சமும் பாதித்ததில்லை! உலகமே அவர் பிள்ளையின் ஆட்டத்தைப் பார்க்க ஆர்வமுடன் இருக்க, இவர் மட்டும் சச்சின் விளையாடும்போது, டென்ஷனைத் தவிர்க்க ஸ்டேடியத்திற்கும் செல்ல மாட்டாராம், டீவியையும் பார்க்க மாட்டாராம்! பிள்ளை செஞ்சுரி அடித்தது மற்றவர்கள் வாயிலாகத் தெரிய வந்தால் உடனே சின்ன பார்ட்டிக்கு ஏற்பாடு செய்து விடுவாராம்! சின்ன வயதில், கிரிக்கெட் பயில சச்சின் தன் மாமா வீட்டில் தாதரில் தங்கியிருந்தபோது, தினமும் மாலையில் சென்று பிள்ளையைப் பார்த்து விட்டு வருவாராம். அதை மறக்காமல், சச்சினும் தனக்கு நேரம் கிடைத்த போதெல்லாம் அப்பாவை, 'ஈவ்னிங் வாக்' அழைத்துச் செல்வதை பாந்த்ராவில் பலர் பார்த்திருக்கின்றனர். பிள்ளை பரிசளித்த மாருதியை இப்போதுதான் ஓட்டக் கற்றுக் கொண்டிருக்கிறார். லிஃப்ட் கொடுப்பதில் மன்னனாம்! கீர்த்தி காலேஜில் பயிற்றுவித்துக் கொண்டிருந்தவருக்கு, மராத்தியக் கவிதைகளில் ஈடுபாடு அதிகம்! அவர் எழுதிய 'கிதாபான்' மராத்திய அரசின் பரிசைப் பெற்றிருக்கிறது! கவிஞர்களுக்கே உரிய மிருதுவான உள்ளம். இரண்டு மாதம் முன்பு ஆன்ஜியோ பிளாஸ்டி செய்து கொண்டிருக்கிறார். இப்போதும், பிள்ளையின் மீது இந்தியர்கள் வைத்திருக்கும் நம்பிக்கையைப் பற்றிய டென்ஷனோ என்னவோ? ஹார்ட் அட்டாக்கில் முடிந்திருக்கிறது! மனைவி அஞ்சலி வாயிலாகச் செய்தியை சச்சினின் காதில் போட்டிருக்கிறார் அன்ஷுமன் கெய்க்வாட்! தந்தையிடம் மிகுந்த அன்பை வைத்துக் கொண்டிருந்தவரால், நிம்மதியாக அவருக்கு அஞ்சலி கூட செலுத்த முடியவில்லை! செவ்வாய் இரவு தந்தை மரிக்க, புதனிரவு வந்த சச்சின், வீட்டு வாயிலில் கூடியிருந்த விசிறிகள், மீடியாக்காரர்களைப் பார்த்து பயந்து போய், இறுதி யாத்திரையை வியாழனன்று அதிகாலையிலேயே வைத்துக் கொள்ளச் சொல்லி விட்டார். சொந்தத் துயரை மனத்தில் புதைத்துவிட்டு, பிறந்த மண்ணுக்

# கிரிக்கெட் 'ஜுரம்'



• குடும்பத்துடன் சச்சின்

காக மறுநாளே இங்கிலாந்து பறந்து விட்டார்! தந்தை தெய்வமாக இருந்து, சச்சின் மூலம் இந்தியாவைப் பிழைக்க வைப்பார் என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக் கிறார்கள்!

## 'கப்' சிப்!

முதலிரண்டு மாட்ச்களில் இந்தியா 'ஊத்திக்கிட்ட'தை அடுத்து இங்கே எக்கச்சக்க வதந்திகள். தலையாயது, 'அசார் ராஜினாமா செய்து விட்டார் - செய்யச் சொல்லி வற்புறுத்தியது சங்கீதாதான்' என்பது. புக்கிகளெல்லாம் 'பெட்டிங்'குக்கே தலைமுழுகத் தயா ராயினர். லண்டனில் ஒரு பெண், தனக்கு ரோஹன் கவாஸ்கர் பரிசளித்திருந்த வர்ல்ட் கப் மாட்சுகளுக்கான எல்லா டிக்கெட்டுகளையும் தானம் செய்து விட்டார் என்ற செய்தி வேறு கலக்கியது! இது ஒருபுறமிருக்க, திடீர் கர்ணன்கள் மூலை முடுக்குகளிலெல்லாம் முளைக்க ஆரம்பித்து விட்டனர். ஒரு நட், போல்ட் கடைக்காரர், இந்தியா ஜெயிக்கும் ஒவ்வொரு மாட்சுக்கும், தன் விற்பனையில் 10% தள்ளுபடி தருவதாக அறிவித்தார். ஒரு நகைக் கடைக்காரர், வெற்றிச் செய்தியைக் கேட்டால், 15 கிராம் வாங்குவோருக்கு 2 கிராம் இலவசமாகத் தருவதாக அறிவித்தார்! ஒரு பால்காரர், தன் வாடிக்கையாளர்களுக் கெல்லாம் அரை லிட்டர் ஃப்ரீயாகத் தருவதாக உறுதி கூறினார். க்கும்... இவர்கள் எங்கே ஜெயிக்கப் போகிறார்கள் என்ற தைரியத்தில் பினாத்து பவர்களை 'கப்சிப்'பாக ஆக்குவதற்காகவாவது நாம் 'கப்'பை ஜெயிக்க மாட்டோமா என்று ஏங்கத் தோன்ற வில்லை?

## ரகசிய போலீஸ் – 100

முதலில் ஒரு 'வெப்ஸைட்டை' உரு வாக்கினார்கள்; அடுத்து 103 என்ற இலவசத் தொலைபேசியை வழங்கினார் கள். அப்படியும் கொலை, கொள்ளைகள் குறைந்ததாகவோ, அது பற்றிய தகவல்கள் வெளிவருவதாகவோ தெரியவில்லை! பார்த்தார்கள் போலீசார். ஒரு தனி தபால் பெட்டியை, (த.பெ. எண் 100) நிறுவி, பொது மக்களிடமிருந்து தங்களுக்குத் தேவையான தகவல்களை எதிர்பார்க்கத் துவங்கியுள்ளார் கள். அனாமதேயக் கடிதங்களானாலும் பரவாயில்லை; துப்புத் துலக்க உதவினாலோ, வருமுன் காக்க எச்சரிக்கை செய்தாலோ போதுமானது என நினைக் கிறார்கள். தற்சமயம் Zone - II (மலபார்ஹில், தார்தேவ் கம்தேவி, அக்ரிபாபி, நவ்பாபி, வி.பி. ரோட்)வுக்கு மட்டும்தான் இந்த வசதி! இது வெற்றி பெற்றால் மற்ற இடங்களிலும் ஸ்பெஷல் எண்கள் பொருந்திய தபால் பெட்டிகள் வந்து விடும்!

— ஜெயஸ்ரீ ராஜ்

# 3

என் முகம் போன போக்கை என் சகாக்கள் பார்த்து விட்டு அந்தக் கூட்டத்திலும் திருகிக் கொண்டு என்னை சமீபித்தனர்.

"என்னா குமாரு... என்னா சொல்றான் டாவ்? லட்சம் விழுந்த மப்புல எங்களையெல்லாம் பார்க்கக் கூட மாட்டேங்கறான்."

"அப்படியா... இதை தமிழ்கிட்டயே கேட்ற வேண்டியதுதானே?"

"எதுக்கு... இல்ல எதுக்குங்கறேன்? புனுகு பூனைகிட்ட மருந்து கேட்டா மரத்துக்கு மரம் தாவுமாம். இவன் அத விட மோசம்ல..."

"நீ வேணா பார்... இதான் சாக்குன்னு எழுதிக் கொடுக்கப் போறான். கேட்டா நான் இனிமேட்டு முதலாளி – கைகட்டி வேலை பாக்க எனக்கு தலையெழுத்தான்னு கேப்பான்..."

பஸ்சுக்குள்" என் சகாக்கள் கணித்தது அகத்தியர் நாடியில் கணித்து ஓலையில் எழுதினது போல நடக்கத் தொடங்கியது. பஸ்ஸை விட்டு இறங்கும்போதே தமிழ்மணியிடம், 'உஸ்ஸ்.... ஆ... என்னா ஈனப்பொழப்புடா இது..' என்று சிலாகிப்புகள்.

உள்ளே நுழையும்போதோ, நடையிலேயே திருவிளையாடல் சிவாஜியாட்டம் மகா மிடுக்கு.

கார்டு பஞ்ச் பண்ணாமல் நேரே டிபார்ட்மெண்ட்டுக்குள்தான் நுழைந்தான்.

"வாய்யா லட்சாதிபதி... கேள்விப்பட்டோம் எல்லாம்" என்று டிபார்ட்மெண்ட் ஹெட் கைகுலுக்கக் கையை நீட்டினார். ஆனால் பதிலுக்கு தமிழ்மணியின் கைகள் நீளவில்லை. உதட்டில் மட்டும் ஒய்யாரமான சிரிப்பு.

"நீ உழைச்சது போதும். இந்தா பிடின்னு ஆசாமிங்க நீங்கதான் சொல்லலை. ஆனா அந்த குபேரசாமி சொல்லிடிச்சு. எனக்கு இனி மேட்டு இந்த பொழப்பு வேணாம் சார். குட்பை சொல்லத்தான் வந்துருக்கேன்."

அவன் அப்படிச் சொன்ன மறுநொடி ஒரு வெள்ளைத் தாளை எடுத்து மேஜை மேல் வைத்தார் அவர்.

"எதுக்கு... எல்லாம் வீட்லையே எழுதி எடுத்துக்கிட்டு வந்துட்டேன்..." – பாக்கெட்டில் இருந்து ராஜினாமா கடிதம் அவர் எதிரில் நான்காய் மடங்கி நீண்டது.


உடனேயே வாங்கி அதில் ஃபார்வேர்ட் என்று எழுதி கையெழுத்திட்டு தனது அசிஸ்டென்ட்டை அழைத்து பர்சனல் டிபார்ட்மெண்ட்டில் சேர்க்கச் சொன்னார் அவர்.

காலையில் பேப்பரில் தனது ராசி பலனில் 'ஏழரை சனி கழிவிடை' என்று எழுதியிருந்ததையும் நினைத்துக் கொண்டாரோ என்னவோ?

ஃப்ளோருக்குள் காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு ஒரு நடை நடக்க ஆரம்பித்தான் தமிழ்மணி. நான் பார்த்துக் கொண்டேயிருந்தேன்.

'தமிழ்... கத்தாதே... உன் ப்ளோசுக்கு போ. அங்க என்ன பேச்சு...? ஒழுங்கா வேலைய பாக்கற வழியப் பாருய்யா' என்று சீறல் விழுந்த

இந்திரா செளந்தர்ராஜன்



ரிக்கார்டாட்டம் சதா சர்வகாலமும் முணு முணுக்கும் சூப்பர்வைசர்கள் அவனை நெருங்கி வந்தார்கள்.

"கத்தாதே... பேசாதே... அங்க நிக்காதே... இங்க உக்காராதே பருப்பெல்லாம் இனி வேகாது சார். நீங்கள்லாம்தான் இனி இங்க கெடந்து சாகணும். எனக்கு அப்படி யில்லை. கடவுள் கண்ணைத் திறந்துட்டான்'' என்றபடி ஒவ்வொருவராகப் போய்ப் பார்க்க ஆரம்பித்தான்.

''என்னா டாவ் எழுதிக் கொடுத்துட்டியா?''

"பின்ன... இன்னும் கிடந்து சிரழியச் சொல்றியா?"

"லட்சத்தை என்ன பண்ணப் போறே?''

"கோடியாக்குவேன்!''

"பிசினஸா... என்னா பிசினஸ்?''

"கந்து வட்டிதான். வேணுமா, நூத்துக்கு பத்து ரூவாதான் வட்டி."

"ஐயோ.... அதெல்லாம் உனக்கு அடங்கி வருமா?''

"வருமாவா.... வந்தாகணும். நம்ம மக்கள் யாருக்காவது அவசரம் ஆத்திரம்னா அஞ்சு வட்டிக்குத் தருவேன். சொல்லு எல்லார்கிட்டேயும். என்ன?''

"சரி டாவ். பார்த்து!''

"பாக்கத்தானே போறே... அடுத்து இந்தக் கம்பெனிக்கு இப்படி பஸ்ஸுல புளி மூட்டை யாட்டம் நசுங்கிக்கிட்டு வர மாட்டேன். மாருதிதான்!''

"அது சரி... விடு. ஆமா எழுதிக் கொடுத்துருக்கியே, பிடித்தம் எவ்வளோ தேறும்?''

"என்னா ஒரு எம்பது வரும்னு நினைக்கறேன். அதை அப்படியே ரஜினி படம் எடுக்க பார்ட்னர் ஒருத்தருக்கு ஒதுக்கப் போறேன். வா தம்மடிப்போம்."

''இப்பத்தான் அடிச்சுட்டு வந்தேன். கோழிக்காலன் பாத்துக்கிட்டேயிருக்கான். நீ

ளம்பு."

"பாத்தாபாக்கட்டும் நீ வா. எதுனா கேட்டா கண்ணு முழியை நோண்டிபிட றேன்."

அவர்கள் அப்படியே தொழிற்சாலையின் வசந்த மண்டபமாகக் கருதப்படும் டாய்லெட் அறை நோக்கி நடந்தனர். வழியில் என்னையும் அழைத்தனர். "குமாரு வர்றியா?"

நானும் கிளம்பினேன்.

உள்ளே கவளம் கவளமாகப் புகைக் கொட்டாரம்.

ஊதும் போது பூமிப் பந்தையே ஊதிப் பார்ப்பது போல் ஒரு நினைப்பு. உதட்டைக் குவித்து புகை பிரிக்கும் போது தனக்கு அடிமைப்பட்ட ஒன்றை விடுவித்துப் பார்க்கும் உணர்ச்சி.

"வா டாவ்... ஃபைனான்ஸ் கம்பெனி நடத்தப் போறியாமே?" என்று ஒருவன் அதற்குள் கந்து வட்டித் தொழிலுக்கு ஒரு கிரீடம் சூட்டிக் கேட்டான்.

"அ.... ஆமாம்ப்பா! உனக்கு எதுனா தேவைப்பட்டா வந்து பாரு..."

"கம்பெனிக்கு என்ன பேர்?"

"குபேரசாமி ஃபைனான்ஸ்னு வைச்சுக் கோயேன்."

"நல்லாருக்கு. நீயும் குபேரனாயி எல்லாரையும் குபேரனாக்கணும். ஆமா தேக்கு பாக்குன்னு எதுனா பிளான் உண்டாம்மா...?"

"எதுக்கு... இல்ல எதுக்குன்னேன். என்னை என்ன மெட்ராஸ்காரன்னு நினைச்சியா? நான் மதுரைக்காரன்டா! தேக்கு வைக்கறேன்னு சொல்லி பின்னால சிக்கிக்கக் கூடாது. மரம் வைக்கறேன்னு சொல்லி பின்னால சிக்கிக்கக் கூடாது. மரம் வெட்டிக்கிட்டிருக்கற காலத்துல ஒருத்தன் மரம் வைக்கறேன்னு சொல்றான்னா அவன் எவ்ளோ பெரிய டுபாக்கூர்னு தெரிய வேண்டாம்.

"அதான் கவுத்து மூடிட்டு ஓடிட்டாங்களே... என் ரூட் வேற! பிளாக் தண்டர் மாதிரி எதுனா பண்லாமான்னு பாக்கறேன்."

"அதுக்கு பல கோடி ஆகுமேப்பா."

"என்னா பெரிய கோடி. ஆளுங்கட்சி வட்டச் செயலாளராகி அப்படியே எம்.எல்.ஏக்கு ஒரு முட்டு முட்டி சட்டசபைக்கு போய்ட்டா தானா வந்துட்டுப் போகுது கோடிங்க."

– தமிழ்மணி புகையைக் கக்குவது போலவே நகைகளையும் கக்கிய வண்ணமிருக்க, அந்த பிரதாபத்தில் மற்றவர்களும் கரைந்த வண்ணமிருக்க, ஒருவன் மட்டும் பெரிய புத்திசாலி போல சற்றுச் சிரித்தான்.

"என்னாடா இளிப்பு?"

"இல்ல... எம்எல்ஏ, கோடின்னு நீ பாட்டுக்கு பங்களாவா கட்டிக்கிட்டு போறியே அத நினைச்சேன். என் மாமா முப்பது வருசமா கட்சில இருக்கார். கவுன்சிலரா கூட ஆக முடியலை...!"

"அப்படீங்களா... நீ கூடத்தான் பத்து வருஷமா சீட்டு வாங்கறே? உழுந்திச்சா. எனக்கு உழுவலை? அதுக்கெல்லாம் சுழி இருக்கணும்டா. எனக்கு இருக்கு. அதான் அடி போடறேன். ஏண்டா சினிமால அஞ்சு நிமிசத்துல ஒரு பாட்டுல ரஜினி கோடீஸ்வரனாகறத ஒத்துப்பீங்க. நான் சொல்றத ஒத்துக்க மாட்டீங்களோ?"

"அப்ப ஒரு பிடி பிடிக்கப் போறே... அப்படித்தானே?"

"பின்ன... மோதிப் பாத்துர வேண்டியது தான்."

"எங்களையெல்லாம் மறந்துராதே தமிழு!"

"எப்பவும் பழச மறக்கறவன் இல்ல இந்த

---

**"தலைவருக்கு இருவத்திநாலு மணி நேரமும் கூட்டணி ஞாபகம்தான்."**

**"எப்படிச் சொல்றே?"**

**"பாரேன், பையன் அட்மிஷனுக்காக காலேஜுக்குப் போனவர், பிரின்ஸிபால் கிட்டே, 'என் பையனுக்குக் குறைஞ்சது நாலு சீட்டாவது ஒதுக்கணும்'னு கேட்டிருக்கார்."**

**– ஜின்டு**



தமிழ். நம்ம யூனிஃபார்ம் டிரஸ்ஸை சர்வர் சுந்தரம் நாகேஷ் மாதிரி எப்பவும் வைச்சிருப்பேன். தெரிஞ்சுக்குங்க. வரட்டா?"

"அப்ப அடுத்து மாருதியிலதான் வருவே."

"பாக்கத்தானே போறே?"

**ம**றுநாள் –

வழக்கம் போல பஸ்ஸுக்கு நின்று கொண்டிருந்தபோது அந்த லாட்டரி சிறுவன் வந்து சேர்ந்தான்.

"சார்... தமிழ்மணி சார் வர்லீங்களா?"

"இனிமேட்டு வர மாட்டான் தம்பி. பிரைஸ்ல பாதிய தருவான்னு நம்பிகிட்டிருக்கியா?"

"சேச்சே... அதெல்லாமில்ல சார்" என்று அவன் சாதாரணமாக மறுத்து பதிலளித்த போது எனக்கு ஆச்சர்யமாகத்தானிருந்தது.

"அப்ப எதுக்கு அவனைத் தேடறே?"

"ஒரு போட்டோ படம் எடுத்துக்க சார்... நான் வித்த சீட்டால ஒருத்தர் லட்சாதிபதியாகியிருக்கார். அதைக் காட்டி வித்தா நிறைய சீட்டு விக்கலாம்ல..."

அவனது ஆசை நியாயமாகப் பட்டது. அதே சமயம் எப்படி அந்தப் பாதித் தொகை மேல் துளிக்கூட ஆசையில்லாமல் பேசுகிறான் என்கிற ஆச்சரியம் தாடையைச் சொறிய விட்டது.


"தமிழ் சார் மாதிரி ஒருநாளைக்கு எவ்வளவோ பேர் வாங்கறாங்க சார். பரிசும் விழுந்திருக்கு. ஏதோ ஒரு வேகத்துல சீட்டு விக்கச்சே பேசற பேச்சு சார் அது. அவ்வளோதான். அது சரி, அவர் ஊடு எங்க இருக்கு தெரியுமா சார்..."

– தயக்கத்தோடு அட்ரஸைக் கொடுத்தேன். கொடுக்கும்போது பஸ்ஸில் தமிழ்மணி காதில் சொன்னது எதிரொலித்தது.

"லட்சத்துல பாதிய கொடுக்க நான் என்ன இளிச்சவாயனா! என்னை வெச்சு அவனுக்குல்ல பேர். போட்டோ பிடிச்சுக்கறேன், வீடியோ எடுக்கறேன்னு எப்படியும் வீட்டுக்கு வந்து நிப்பான். ஒரு போசுக்கு நூறு ருவான்னா போஸ் தரேன், இல்லாட்டி போயிரும்பேன்! லட்சுமி வர ஆரம்பிச்சுட்டா கொமாரு. அவ வர்ற வழியை அடைக்கக் கூடாது. நாலா பக்கமும் வர உடணும். என்ன சொல்றே?"

என்னத்தைச் சொல்வது?

(அடுத்த இதழில் முடியும்)




1999 ஜூன் 6
பிரமாதி வைகாசி 23
மலர் : 57
இதழ் : 45

# கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்.

## செண்டிமெண்ட் நாடகம்!

உணர்வுகளைத் தூண்டும் அரசியல், வெற்றிக்குக் குறுக்குவழியாக இருந்து வந்திருக்கிறது.


இது தெரிந்துதான் சோனியா பேசியிருக்கிறார்: "இந்த நாட்டில்தான் நான் மணமகளானேன்; தாயானேன்; நான் விதவையானதையும் பார்த்தீர்கள்; இந்தியாவின் தலைசிறந்த புதல்வி அன்னை இந்திரா என் கரங்களில்தான் உயிர் நீத்தார். என் உடலில் ஓடும் ஒவ்வொரு துளி ரத்தமும் 'இதுவே என் நாடு' என்கிறது. இதுதான் என் பூமி..."

- இந்தக் காரணங்களால் சோனியா பிரதமராவதற்கு எவ்வாறு தகுதி பெறுகிறார் என்பதுதான் நமக்குப் புரியவில்லை!

"அதை மக்கள் தீர்மானிக்கட்டும்; அவர்கள் தேர்ந்தெடுத்து அனுப்பும் எம்.பி.க்கள் தீர்மானிக்கட்டும்..." என்பது சோனியாவின் பதில்!

எதிர்ப்புத் தெரிவித்தவர்களை வெளியேற்றிவிட்டு, மேலும் எதிர்ப்புத் தெரிவிக்க நினைப்பவர்கள் வெளியேறலாம் என எச்சரித்து விட்டு, எஞ்சியிருப்போர் தீர்மானிக்கட்டும் என்று கூறுவது எந்த நியாயத்தில் சேர்த்தி?

இந்த பதில் மூலம் காங்கிரஸின் வெற்றி - தோல்விகளுக்கெல்லாம் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்றுக் கொள்ளும் மாபெரும் தவறையும் செய்திருக்கிறார் சோனியாகாந்தி! அவர் தேர்ந்தெடுத்திருக்கும் குறுக்குவழிப் பாதை அதல பாதாளத்துக்கே அவரை அழைத்துப் போகும்!




'பிரதமர் பதவிக்கு ஆசைப்பட்டு நான் காங்கிரசுக்கு உழைக்கவில்லை. கட்சியின் வலிமை அதன் ஒற்றுமையில்தான் இருக்கிறது. பிரிந்து சென்ற மூவரைத் திரும்ப அழைப்போம். ஒருங்கிணைந்து பி.ஜே.பி.யை எதிர்ப்போம்...' என்று காங்கிரஸ் தலைவர் கூறியிருந்தால் கட்சியினுடைய வெற்றி தோல்விக்குப் பிற தலைவர்களையும் பொறுப்பாக்கியிருக்கலாம். ஆனால் அவ்வாறு செய்யாமல், 'உங்களுக்காக காங்கிரஸ் தலைமையை மீண்டும் ஏற்கிறேன்' என்று அறிவித்திருப்பவர், வரவிருக்கும் தேர்தலில் ஜெயித்துக் காட்ட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்.

எந்தத் தொகுதியில் நின்றாலும் சோனியா ஜெயித்தாக வேண்டும்; எப்படிப்பட்ட அரசியல் வியூகங்கள் அமைக்கப்பட்டாலும் காங்கிரஸ் வென்றாக வேண்டும். இல்லையேல் 'பூ! இத்தனை நாடகத்துக்குப் பிறகு இந்த கதிதானா!' என்று சோனியாவுக்கு ஏகப்பட்ட அவப்பெயர்தான் வந்து சேரும்!

இன்று நிலவுகிற சூழ்நிலையைப் பார்க்கும்போது, காங்கிரஸுடைய வெற்றிக்கான சாத்தியக்கூறுகள் வலுவாக இல்லை. ஆகவே சோனியாவின் எதிர்காலமும் பிரகாசமாக இல்லை.

மாநிலக் கட்சிகளுடன் மானாவாரியாகக் கூட்டணி அமைத்துக் கொண்டு காங்கிரஸ் தப்பித் தவறி ஜெயித்து விட்டால் என்ன ஆகும் என்பதை எண்ணிப் பார்த்தாலோ, அச்சமே ஏற்படுகிறது! அக் கட்சியில் பிரதமர் பொறுப்புக்கு சோனியாவைத் தவிர வேறு நபர் இல்லை. சமீப காலம் வரை 'அரசியலுக்கு வீசை என்ன விலை?' என்று கேட்டவர், அரசியல் பிரவேசத்துக்குப் பின் கேட்பார் பேச்சைக் கேட்டு தப்பும் தவறுமாக முடிவுகள் எடுத்தவர், ஜெயலலிதாவை நம்பி பி.ஜே.பி ஆட்சியைக் கவிழ்த்துவிட்டு மாற்று அரசு அமைக்கத் தெரியாமல் கையைப் பிசைந்தவர், அதன் பிறகும் ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்துக் கொள்ளத் துணிந்தவர் - சுருக்கமாகச் சொன்னால் ஓர் அரசியல் அஞ்ஞானி - பிரதமராக அமர்த்தப்படுவார்!

'தாயே, திரும்பி வா!' என்று தெருவில் படுத்து தர்ணா செய்தவர்களும் ரத்தத்தில்




கோரிக்கை எழுதி அனுப்பியவர்களும் ஆட்சி சிறக்க உதவக்கூடியவர்கள் அல்ல. தேர்தல் வெற்றியின் பலன்களை அனுபவிக்கக் காத்திருப்பவர்கள். சோனியாவுக்குப் புத்திசாலித்தனமாக அறிவுரை வழங்கக்கூடிய மூத்த தலைவர்களும் காங்கிரஸில் இல்லை என்பது கடந்த சில வாரங்களில் நிரூபணமாகியிருக்கிறது.

ஒன்பது நாள் பிணக்குக்குப் பிறகு தலைமைக்குத் திரும்பிய சோனியா பேசிய பேச்சுக்களில் தொனித்த அகந்தை, இந்திய அரசியல் வரலாற்றில் இதுவரை ஒலித்தறியாத உச்சத்தைத் தொட்டது என செய்தித்தாள்கள் விமர்சிக்கின்றன.

அறியாமையுடன் அகந்தையும் சேர்ந்து கொள்ளும்போது எத்தனை கொடுமைகள் விளையும் என்பதைத் தமிழ்நாட்டில் அனுபவித்துத் தெரிந்து கொண்டோம்.

வாரிசு அரசியலை நம்பி வீணாகிப் போன கட்சி காங்கிரஸ். வோட்டுப் பிடிப்பதற்காக நேரு-காந்தி குடும்பத்து நபர்களை முன் நிறுத்தி உட்கட்சி ஜனநாயகத்தைக் காவு கொடுத்து விட்டது. இன்று காங்கிரஸ் தலைவியாக இருக்கும் சோனியாகாந்தி கூட படிப்படியாக உயராமல் திடீர்த் தலைவி ஆனவர்தான். முறைப்படி தேர்ந்தெடுக்கப்படாமல் உயர்மட்ட அபிப்பிராயங்களின் அடிப்படையில் மட்டுமே தலைவராகியிருக்கிறார்.

ஒரு தேசியக் கட்சியின் சீரழிவு என்பது நாட்டினுடைய சீரழிவுக்கும் காரணமாக அமையக்கூடும் என்பதை அரசியல்வாதிகள் மட்டுமின்றி பொதுமக்களும் உணர வேண்டிய கட்டத்தை நாம் அடைந்திருக்கிறோம்.

பி.ஜே.பி.க்கு எதிரான மாற்று சக்தியாகப் போட்டியிட வலுவான தனிக்கட்சி இன்று இல்லை. மூன்றாவது அணி என ஒன்று உருவானால் அது காங்கிரஸின் வாக்குகளைச் சிதறடித்து பி.ஜே.பி.க்குத்தான் உதவப் போகிறது.

நீண்ட காலமாக நிலவிய ஜனநாயக சோஷலிஸ கொள்கைக் குழப்பங்களுக்குப் பிறகு சுதந்தரப் பொருளாதாரம், அயல்நாட்டு முதலீடு என்று புதிய பாதையில் பாரதத்தைச் செலுத்திய காங்கிரஸ், இன்று சிதறிப் போய் சக்தியிழந்து விட்டது. அது மேலும் பலவீனமடைந்து உருப்படாமல் போகச் செய்வதுதான் சோனியாவின் சாதனையாக இருக்கும். ○



• பாலாஜி

# 'தடா'லென்று உயர்ந்த தபால் கட்டணங்கள்!

"இப்படி தபால் கட்டணத்தை உயர்த்திக் கொண்டே போனால் போஸ்டல் டிபார்ட்மெண்ட் ஊத்தி மூடிக்கும். கூரியர் கம்பெனி வியாபாரம்தான் நல்லா நடக்கும்" என்கிறார் பெயர் சொல்ல விரும்பாத தபால்துறை அதிகாரி ஒருவர்.

பதிவுத் தபால்களுக்குத் தபால் துறை வசூலிக்கும் கட்டணம் 12 ரூபாயிலிருந்து 14 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இதற்கும், தனியார் கூரியர் சேவை நிறுவனம் வசூலிக்கும் கட்டணத்திற்கும் அதிக வித்தியாசமில்லை. அதுவுமில்லாமல், மூன்று நாட்களில் போய்ச் சேரும் பதிவுத் தபால்கள், கூரியர் கம்பெனி மூலம் அனுப்பப்பட்டால் ஒரே நாளில் போய்ச் சேர்ந்து விடும்.

"ஒரு ரூபா வித்த கவர் இப்போ ரெண்டு ரூபா ஆய்டுச்சு. எழுபத்தி ஐந்து பைசா வித்த இன்லேண்ட் லெட்டர் ஒண்ணரை ரூபா ஆச்சு, இப்போ – இரண்டு ரூபாய்க்கு வந்துடுச்சு. ஒரு ரூபா, ஒண்ணரை ரூபாயெல்லாம் பெரிய விஷயம் இல்லேன்னு நினைக்க முடியாது. சாதாரண கூலித் தொழிலாளிங்க ஏழைகளுக்கெல்லாம் இந்த விலை உயர்வு ரொம்ப கஷ்டத்தைக் கொடுக்கும். கவர்மெண்டுக்கு வரி கட்டாம ஏமாத்தற எத்தனையோ பேர்கிட்ட கறாரா வசூல் பண்ணினாலே போதும். அரசாங்கத்துக்கு இந்த மாதிரி அத்யாவசியப் பொருட்கள் மேல விலையேத்த வேண்டிய அவசியம் ஏற்படாது" என்கிறார் பாலவாக்கத்தைச் சேர்ந்த நாராயணசாமி.


ஒரு நூல் வெளியீட்டகத்தில் வேலை பார்க்கும் பாலாஜி சொல்கிறார் :

"சாதாரணமாவே நாங்க அனுப்பற பார்சலுக்குச் சரியான ரேட்டை போஸ்டாபீஸ்ல சொல்றதில்லை. பதினேழு ரூபான்னு கம்ப்யூட்டர் ரேட் காமிக்கும். உக்காந்திருக்கறவங்க ஒரு ரேட் சொல்வாங்க. இப்போ பார்சல் கட்டணம் கூட ஏறியிருக்கு. சரியான ரேட் என்னன்னு அவங்க சொல்லி, நாங்க சரிபார்த்து பார்சல் அனுப்பறதுக்குள்ளே போதும் போதும்னு ஆய்டும்."

கண்ணன் என்கிற பிஸினஸ்மேன், "பொது மக்களுக்குப் பயன்படற, அவசியமான இந்த மாதிரி ஐட்டங்களில் அரசாங்கம் விலையேத்தக் கூடாது. நியாயமா பார்த்தா விலையைக் குறைக்க முயற்சி பண்ணணும். சிகரெட், டிரிங்க்ஸ், ஃபைவ் ஸ்டார் ஹோட்டல் மாதிரி ஆடம்பர விஷயங்களில் இன்னும் அதிகமாகக் கூட வரி போடலாம்" என்கிறார்.

போரூரில் பிளம்பராக வேலை பார்க்கும் பன்னீர் செல்வம், "இந்த விலை உயர்வு பெரிய பெரிய கம்பெனிங்க, ஆபீஸ்ங்களுக்குப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தாதுன்னாலும், எங்களை மாதிரி ஆளுங்களுக்கு ரொம்பக் கஷ்டம்தான். எனக்கு மூணு பசங்க. ஒரு பையன், தஞ்சாவூர்ல பி.ஏ. ரெண்டாவது வருசம் படிக்கிறான். இரண்டாவது பையன் பிளஸ் டு முடிச்சிருக்கான்.


மூணாவது பையன் பத்தாவது எழுதிட்டு ரிசல்ட்டுக்காகக் காத்துட்டிருக்கான். மூணு பசங்களுமே மேற்கொண்டு படிக்கணும்னாலும், வேற ஏதாவது வேலைக்கு மனு போடணும்னாலும் சர்வீஸ் கமிஷன் பரீட்சை எழுதணும்னாலும் ஆகிற தபால் செலவை நினைச்சாலே பயமாருக்கு. நிறைய காலேஜ்லயும், ஐ.டி.ஐ., பாலிடெக்னிக்லயும் ஃபீஸை போஸ்டல் ஆர்டர் மூலமா அனுப்பச் சொல்றாங்க. முந்தி அஞ்சு பர்சன்ட்டா இருந்த போஸ்டல் ஆர்டர் கமிஷன் இப்போ பத்து பர்சன்ட் ஆயிருக்கு. பர்சன்டேஜ்படி கணக்குப் பார்த்தா இந்த விலை உயர்வு ரொம்ப அதிகம்ங்க."



* பன்னீர்செல்வம்



* நாராயணசாமி



* கண்ணன்

நூல் அஞ்சல் (Book Post) கட்டணம் ஒரு ரூபாயிலிருந்து இரண்டு ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. அச்சிடப்பட்ட தபால் அட்டை (Printed Post Cards) ஒண்ணரை ரூபாயிலிருந்து இரண்டு ரூபாயாகியிருக்கிறது. என்றாலும், மணியார்டர் கமிஷன், சாதாரண தபால் கட்டணம் உயர்த்தப்படவில்லை. சாதாரண போஸ்ட் கார்டு விலை அதே 25 பைசா என்பது ஆறுதல்.

"தபால் கட்டணம் உயர்ந்தது ஒருபுறம் இருக்கட்டும். டெலிவரி செய்யப்படாமல், குவிந்து கிடக்கும் தபால்களைப் பட்டுவாடா செய்யவும், வேறு வேலைகளுக்கும், இன்னும் நிறைய ஊழியர்களை அரசாங்கம் நியமித்தால் போதும்" என்கிறார் ஸ்டாம்ப் வாங்குவதற்காக அண்ணாசாலை போஸ்டாபீஸில் நீண்ட க்யூவில் காத்திருந்த ஒருவர்.

— கே. பாலசுப்ரமணியன்

படங்கள் : எம். சண்முகம்

## வி.ஐ.பியைத் தெரிஞ்சுக்கங்க!

# கோட்டைத் தாண்டாத

மகாத்மா காந்தி கொலையைத் தொடர்ந்து நாடு முழுவதும், ஆர்.எஸ்.எஸ். இயக்கம் தடை செய்யப்பட்டது. தடையை நீக்கக் கோரி ஆங்காங்கே இயக்கத்தினர் மறியல், சத்தியாகிரகம் என்று ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். சேலத்தில் அப்படிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை போலீஸ் கைது செய்தது. அதில் பதினெட்டு வயது இளைஞன் ஒருவனும் அடக்கம். அந்த இளைஞனைக் கைது செய்வதற்கு முன் போலீஸ் அதிகாரி அவனிடம், "தம்பி உன்னை இப்படியே விட்டுடறேன். சிறைக்குச் சென்று எதிர்காலத்தைப் பாழாக்கிக் கொள்ளாதே" என்று அக்கறையுடன் புத்தி சொன்னார்.

ஆனால் அந்த இளைஞன் கேட்கவில்லை. 'கைது செய்யுங்கள் பரவாயில்லை' என்று சொல்லிவிட்டு மூன்று மாதம் தண்டனையை அனுபவித்துவிட்டே வெளியே வந்தான்!

அதற்குப் பின் எத்தனையோ போராட்டங்கள். எத்தனையோ சிறைகள்.

அந்த இளைஞர்தான் இன்று பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு தலைவராக இருக்கும் கொன்டியான் நாகேந்திரய்யா லட்சுமணன்.

சேலம் செவ்வாய்ப்பேட்டை மார்க்கெட் பகுதியில் தம்பியுடன் சேர்ந்து தங்கம் - வெள்ளி வியாபாரத்தில் இறங்கினார் நாகேந்திரய்யா. மார்க்கெட் வட்டாரத்தில் பிரபலமானவர். அதே ஏரியாவிலேயே வீடு. அருகேயிருந்த விளையாட்டு மைதானத்தில் காக்கி அரை நிஜாரும், வெள்ளைச் சட்டையுமாக டிரில் பிராக்டீஸ் செய்து கொண்டிருந்த ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினரின் நடவடிக்கைகள் நாகேந்திரய்யாவின் மகன் லட்சுமணனுக்குப் பிடித்துப் போய் விட்டது.

"எனக்கு அப்போது பதினான்கு வயது. விளையாட்டுப் புத்தி. இயக்கத்தினர் பயிற்சிக்கு முன் பல கேம்ஸ் விளையாடுவார்கள். அவை என்னைக் கவர்ந்தன. நானும் விளையாட்டுக்களில் சேர்ந்து கொண்டேன். என்னை முக்கியமாகக் கவர்ந்தது, அந்த 'டிசிப்ளின்'தான். அப்படியே கொஞ்சம், கொஞ்சமாக ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் ஐக்கியமாகி விட்டேன். இயக்கம் கிழிக்கும் கோட்டைத் தாண்டுவதில்லை!" என்று ஐம்பத்தைந்து வருடத்துக்கு முந்தைய கதையை நினைவு கூர்கிறார்.

அப்பா நாகேந்திரய்யாவுக்கு, மகன் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் ஆக்டிவ்வாக இருப்பது குறித்து வருத்தமில்லை. ஆனால் படிப்பைக் கோட்டை விட்டு விடப் போகிறானே என்றுதான் பயம். ஆனால் லட்சுமணன் படிப்பை விடாமல் அரசுக் கல்லூரியில் பட்டப் படிப்பை முடித்தார்.

1951-ம் ஆண்டிலேயே ஜனசங்கக் கட்சி துவக்கப்பட்டாலும், தமிழ்நாட்டில் 1957-ல் தான் அதற்குக் கிளை முளைத்தது. கட்சியின் மூத்த தலைவராக இருந்த 'தத்தோபந்த் தெங்கடி'தான் சேலத்தில் கட்சியைத் துவக்கினார். லட்சுமணனும் கட்சியில் இணைந்தார்.

"அந்த ஆண்டு பெங்களூரில் கட்சி மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் கலந்து கொண்டேன். ஊர்வலத்தின்போது எங்கள் சேலத்துத் தோழர்கள் வட இந்தியப் பிரமுகர் ஒருவருடன், இயக்க நடவடிக்கைகள் குறித்துப் பேசிக் கொண்டே மணிக்கணக்கில் நடந்து சென்றோம். அந்தப் பிரமுகரின் எளிமை எங்களைக் கவர்ந்தது. அவர் வேறு யாருமல்ல; வாஜ்பாய்ஜி அவர்கள்தான்."

சேலம் மாவட்டத்தைப் பொறுத்த வரை பல்வேறு கட்சிப் பிரமுகர்கள் எந்தவித அரசியல் வன்மமும் இல்லாமல் மிகவும் நட்பாகவே பழகுவார்கள் என்கிறார் லட்சுமணன்.

"மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்ற அடிப்படையில் நல்ல விஷயங்கள் எங்கிருந்தாலும் அதை



# லட்சுமணன்!

எடுத்துக் கொள்வது ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தினருக்குச் சொல்லித் தரப்பட்ட பாலபாடம். 1957-ல் எங்கள் கடையில் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டிருந்தேன். சைக்கிள் ரிக்ஷாவில் கணவனும், மனைவியுமாக இருவர் வந்து இறங்கினார்கள். வந்தவர்கள் கடைக்குள் வந்து 'இங்க பாத்திரக் கடை எங்கிருக்கிறது' என்று கேட்டார்கள். நானே அவர்களை அருகிலுள்ள பாத்திரக் கடைக்கு அழைத்துச் சென்றேன். அங்கு சமையலுக்கு வேண்டிய அலுமினியப் பாத்திரங்களை அவர்கள் வாங்கினார்கள். மோகன் குமாரமங்கலமும், அவர் மனைவியும்தான் அந்தத் தம்பதி! கம்யூனிஸ்ட் கட்சி சார்பாகச் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிட சேலத்துக்கு வந்திருந்தார் மோகன். வசதிமிக்கக் குடும்பத்தைச் சேர்ந்த அவர், எளிய வாழ்க்கைக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டவிதம் எனக்குள் பதிந்து விட்டது. எங்கள் இயக்கத் தலைவர்கள் பலர் தங்கள் உடைகளைத் தாங்களே துவைத்துக் கொண்டு வெறும் தரையில் படுத்துக் கிடந்து இருந்ததையும் பார்த்திருக்கிறேன்."

எமர்ஜென்ஸி சமயத்தில் லட்சுமணனைக் கைது செய்யாவிட்டாலும், இந்திரா காந்தி தென் மாநிலங்களுக்கு விசிட் செய்த நேரங்களில் பிடித்து தடுப்புக் காவலில் வைத்திருப்பார்களாம். இதுபோல அந்த இருபது மாத காலங்களில் பலமுறை 'உள்ளே' இருந்திருக்கிறார்.

"அப்போது ஜெ.பி.யின் இரண்டாவது சுதந்தரப் போர் அழைப்பைத் தொடர்ந்து, காமராஜரைச் சந்தித்து, "நீங்கள்தான் தமிழகத்தில் தலைமைதாங்க வேண்டும்" என்று கேட்டுக் கொண்டேன். நாளுக்கு நாள் நலிந்து வரும் தம் உடல்நலத்தைக் குறித்து விளக்கி, போராட்டங்களில் தீவிரமாக இறங்க முடியாத நிலையைச் சொன்னார். அப்போது இந்திரா காந்தியின் செயல்பாடுகள் குறித்து அவர் வெளியிட்ட கருத்துக்கள், எமர்ஜென்ஸியால் எவ்வளவு ஆழமாக அவர் பாதிக்கப்பட்டிருந்தார் என்பதைத் தெளிவாகக் காட்டியது. அப்போது, தமிழகத்தில் எங்களைப் போன்றோர் சுதந்திரக் காற்றை சுவாசித்துக் கொண்டிருந்ததற்கு காரணம் கலைஞர் தலைமையிலிருந்த தமிழக அரசுதான்."

**1971**-ல் ஒருமுறை பாராளுமன்றத் தேர்தலில் நின்று தோற்ற அனுபவமும் இருக்கிறது இவருக்கு.

"ஆர்.எஸ்.எஸ். இயக்கமோ, பா.ஜ.க.வோ மைனாரிட்டி மக்களுக்கு எதிரானதல்ல. தமிழகத்தில் ஜனசங்கத்தின் முதல் மாநிலத் தலைவரே வி.ஜெ. ஜான் என்பவர்தான். என் நண்பர் அமானுல்லாகான் தான் பலமுறை நான் சிறைப்பட்டபோது ஜாமீனில் எடுத்திருக்கிறார். இன்னும் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் பல கிறிஸ்துவர்களும் - முஸ்லீம்களும் இருக்கிறார்கள்" என்று சொல்லும் லட்சுமணன், குடும்ப வியாபாரத்தைக் கவனித்துப் பல வருடங்கள் ஆகிவிட்டன. அடுத்த தலைமுறை பார்த்துக் கொள்கிறது. இப்போது வெள்ளிக் கொலுசுகளும் உற்பத்தி செய்கிறார்கள். இரண்டாவது முறையாகத் தலைவர் பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு தொடர்கிறார், அறுபத்தெட்டு வயதாகும் லட்சுமணன்.

சந்திப்பு : **ஸ்ரீநிவாசன்**
படம் : **ஸ்ரீஹரி**

'நெமோ'ன்னா என்னன்னு தெரியுமா? மனசோட ஒரு எதிர்நிலை குணாதிசயத்துக்கு 'Nemo'ன்னு பேர். மாத்ருபூதம், ருத்ரன் மாதிரியானவர்களைக் கேட்டா இது பத்தி விவரமா சொல்லுவாங்க.

எல்லா மனுஷனுக்கும் ஈகோ இருக்கு இல்லையா? 'Nemo'வை ''Anti Ego''ன்னு சொல்லலாம்!

''இவன் யார்றா என்னைப் பத்திக் கேவலமா பேசறது?''ன்னு எப்பவாச்சும் மனசுக்குள்ள ஒரு பொறி கிளம்பிச்சின்னா, அது ஈகோ.

''கரெக்ட். நான் என்ன பெரிசா சாதிச்சுட்டேன்? என்னைக் குறை சொல்றது சரிதானே''ன்னு சில சமயம் மனசுல தோணுமில்லையா? அந்த 'ஆன்ட்டி-ஈகோ'வுக்குத்தான் 'நெமோ'ன்னு பேர்.

'நெமோ' பத்தி ஜான் பவுல்ஸ் எழுதின ஒரு கட்டுரையோட டிரான்ஸ்லேஷன் 'வேர்கள்'ல வந்திருக்கு. (வேர்கள், ஒரு சிறு பத்திரிகை. பட், பெரிய சைஸ்!) ரெண்டே பக்கக் கட்டுரைன்னாலும் ரொம்ப இன்ட்ரஸ்டிங்!

பிரச்னை என்னன்னா, இது மாதிரி தீவிரமான விஷயங்களைப் பத்தி எழுதற சிறு பத்திரிகைகள் கையாள்ற மொழி, லூப்ரிகன்ட் இல்லாம ஓடற மிஷின் மாதிரி ஒருவித இரைச்சல் தர்றதுதான்.

# நெமோ தெரியுமா, நெமோ?

ஒரு உதாரணம் பாருங்க.

''நெமோவானது, அபாயத்தைப் போலத் தனி மனிதனை அலட்சியப்படுத்தும் நிகழ்வுப் போக்கைப் போல, அது மனிதனுக்குத் தவிர்க்க இயலாத தேவையாகும். அது மானுட இருப்பானது சமனற்றது என்பதனையறிந்திருக்கும் அவனுள்ளேயான விளைவாகும்.''

காதுல 'லொய்'னு ஒரு சவுண்ட் கேக்கலை?

சீரியஸான விஷயங்களை, படு சீரியஸா மட்டுமே சொல்லணும்னு அவசியமில்லைன்னு நினைக்கறேன்.

பட், இந்த வாரம் சுமியைக் கூட கொஞ்சம் சீரியஸா மாத்திட்ட நிகழ்ச்சி கார்கில்ல நடக்கற போர். என்னதான் காரணமாயிருந்தாலும் சரி, தாக்குதல், போர் இதெல்லாம் ஒரு பிராப்ளமுக்கு சொல்யூஷன் கிடையாது. இது தெரிஞ்சும் ஹ்யூமன் பீயிங்ஸ் அடிச்சுக்கறாங்கன்றதுதான் புது மில்லினியத்தின் டிராஜடியா இருக்கும். பாக். ராணுவம் பிடிச்சு வைச்சிருக்கற நம்ம ஃப்ளைட் லெஃப்டினன்ட் நசிகேதாவுக்காக பிரே பண்ணுவோம்.

பை த வே, வேர்கள் தவிர, விருட்சம், கனவு, மன்னர் மலர், சுந்தர சுகன், இன்னும் சில சிறுபத்திரிகைகள் எனக்கு அப்பப்ப தபால்ல வருது. 'அந்தப் பக்கம்' என்ன நடக்குதுன்னு தெரிஞ்சிக்க ஆசை இருந்தா ரெண்டு வரி கார்டு போடுங்க. மெஜாரிடி பார்த்துட்டு அப்பப்ப கொஞ்சம் சாம்பிள் தரேன்.

ஒரு பின் குறிப்பு: 'விருட்ச'த்துல 'பீடிக் கதைகள்'னு ஒரு நல்ல கவிதை வந்திருக்கு. எழுதியவர் பேர் லாவண்யா. நம்ம லாவண்யா தானான்னு தெரிஞ்சிக்க விரும்பறேன்.

• • •

விமர்சகர் தி.க.சி. மெட்ராஸ் வந்திருந்தார். லாஸ்ட் வீக் என் ஃப்ரெண்ட்ஸ் சிலரோட அவரைப் போய்ப் பார்த்துட்டு வந்தது வித்தியாசமான எக்ஸ்பீரியன்ஸ்.

''கண்ணுவேர்ந்து தண்ணி தண்ணியா வருது. அதுக்காக நிறுத்தவா முடியும்!''னு கேட்டுக்கிட்டே படிச்சிட்டிருக்கார். போன வாரம்தான் வெளியாகியிருக்கற தேவகாந்தனோட 'வினாக்காலம்'; நாஞ்சில் நாடனோட 'எட்டுத்திக்கும் மத யானை' உட்பட எல்லாத்தையும் மை வாசனை போறதுக்குள்ள படிச்சு முடிக்கற ஆர்வம் இந்த எழுவத்தஞ்சு வயசுலேயும் அவருக்கு மாறாம இருக்கு.

நம்ம சூப்பர் மார்க்கெட்டைக் கூட ரொம்பப் பாராட்டினார்ங்கறதைத் தன்னடக்கத்தோட தெரிவிச்சுக்கறதுல தப்பில்லைன்னு நினைக்கறேன்.

புதுமைப்பித்தன், செல்லப்பா, வல்லிக்கண்ணன்னு அவர் பழைய ஜாம்பவான்களோட பழகின ஞாபகங்களையெல்லாம் சொன்னதைக் கேட்கறதுக்கு படு இன்ட்ரஸ்டிங்கா இருந்தது.

அப்பா செருப்புல கால் நுழைச்சுப் பார்க்க ஆசைப்படாத குழந்தை உண்டா? (சே! பின்னிட்ட சுமி.)

• • •

வேர்ல்ட் கப் மேட்ச்களால இயேட்





டர்ஸ்ல ஈவினிங் ஷோஸுக்கு ஈயும் கொசு வும்தான் வருதுன்னு சொன்னார் என் சினிமாக்கார ஃப்ரெண்ட் ஒருத்தர்.

படையப்பா உட்பட ரிலீஸாகியிருக்கற எல்லா படங்களுக்குமே இப்ப சராசரியா ஒரே அளவுக் கூட்டம்தான்னு தியேட்டர்காரங்க ரிப்போர்ட் குடுத்திருக்காங்களாம்.

ஸோ, வேர்ல்ட் கப் முடியற வரைக்கும் புதுப் படம் எதும் ரிலீஸ் பண்றதில்லைன்னு ப்ரொட்யூசர்ஸ் முடிவு பண்ணிருக்காங்களாம்.

இந்த விஷயத்துல சபாக்காரங்க ரொம்ப கேர்ஃபுலா இருந்துட்டாங்க. லாஸ்ட் டூ வீக்ஸா ஹிண்டு என்டர்டெய்ன்மென்டுல கச்சேரிகள் லிஸ்ட் பார்த்தா பாலாறு மாதிரி வறட்சி!

இந்தியா - ஸ்ரீலங்கா மேட்ச் நான் பார்க் கலை. (அதனாலதான் இண்டியா ஜெயிச் சதுன்னு என் தம்பி சொன்னான்.) ஜெயிச்ச முடிச்சப்புறம் பார்த்தேன். 'சௌரவ்' 'சௌ ரவ்'னு கூட்டம் கோஷம் போட்டப்போ இத் தனை இன்டியன்ஸ் அங்க போயிருக்காங் களான்னு ஆச்சர்யமாயிருந்தது. மேன் ஆஃப் தி மேட்ச் வாங்கினப்போ திராவிட்தான் அதுக் குக் காரணம்னு கங்குலி அழகா பேசிட்டார். டீம் ஸ்பிரிட்டை பாட்டில்ல வாங்கிக் குடிக் கணும்னு யார் சொன்னது!

**போ**ன வாரம் கல்கில வந்திருந்த ஒரு கிரிக்கெட் 'கிவிதை'க்கு (கவிதை இல்லை) எதிர்க் கவிதை ஒண்ணு அனுப்பி, இதை நம்ம 'காலம்'ல பப்ளிஷ் பண்ணிடு சுமின்னு கேட்டிருக்கார், சைதாப்பேட்டை கவிராயர். (என்ன புனைபேரப்பா!)

இது தருமா, முறையா, தர்மம் தானான்னு நாலு நிமிஷம் யோசிச்சிட்டு, எடிட்டர்கிட் டேயும் கன்ஸல்ட் பண்ணிட்டு, இங்கேயே தனியா பப்ளிஷ் பண்ணியிருக்கேன். ஜாலியா படிச்சுப் பாருங்க.

— சுமி

**குரோம்பேட்டைக் கவிராயருக்கு சைதாப்பேட்டைக் கவிராயரின் எதிர்ப்பாட்டு**

## நோஸ்கட்

ஆட்டமின்னா ஆட்டம்,
ஆட்டா பாமு ஆட்டம்
அமர்க்களமா ஆட்டம்,
ஆனந்தக் கொண்டாட்டம்!

அடி யின்னா அடிதான்
இடியைப் போல வெடிதான்,
ஆரடிப்பா இப்படி?
ஆஹா, இனிமே எப்படி?

கங்கூலியும் திராவிடுமே
கலக்கினாங்க கலக்கு
லங்கா தகன நாளு போல
கலங்கிப் போனா அவுக!

ராபின் போட்ட பந்துக்குள்ளே
அபினா வச்சுப் போட்டார்?
காபுராவாப் போச்சு பாவம்
கஷ்ட காலம் ஆச்சு!

கங்கூலிதான் பறக்க விட்டார்
கிரிக்கெட்டிலே ராக்கெட்
குரோம்பேட்டைக் கவிஞருக்கும்
கொடுத்தாரய்யா நோஸ்கட்!

— சைதாப்பேட்டை கவிராயர்

□ ரூ. 50 பரிசு பெறுபவர் :
ச. சதானந்தன்,
2/69, நடுத்தெரு, வேங்கடத்தானூர்,
திருச்சி மாவட்டம் - 621 002.

● ந.வந்தியக்குமாரன்,
சென்னை - 41.

? டெண்டுல்கர் தந்தையின் மரணம் இந்தியாவின் உலகக் கோப்பை வெற்றியைப் பாதிக்குமா...?

! இறுதிச் சடங்கு முடித்துத் திரும்பியவர் சதம் அடித்து, அதைத் தமது தந்தைக்குக் காணிக்கையுமாக்கி நெகிழ்த்தி விட்டார். 'ஏன் வந்தாய்? அப்பா நீ வரவேண்டும் என எதிர்பார்த்திருக்க மாட்டார்' என்று குடும்பத்தினர் சொன்னார்களாம். இப்படிப்பட்ட கர்மவீரரின் துயரால் வெற்றி வாய்ப்புக் குறையாது. மற்றவர்கள் கோட்டை விட்டால்தான் உண்டு!

● அஜார், தேனாம்பேட்டை.

? த.மா.காதான் பா.ஜ.கவை ஆதரிக்கச் சொல்லி முதலில் எங்களை வற்புறுத்தியது என்கிறாரே முதல்வர்?

! பீட்டர் அல்போன்ஸ் ஒரு கூட்டத்தில் தம் அருகே அமர நேர்ந்தபோது அவ்வாறு குறிப்பிட்டதாகக் கூறியுள்ளார் முதல்வர். 'ஜெயலலிதாவால் மிரட்டப்படும் பா.ஜ.க. ஆட்சியை நீடிக்கச் செய்ய எங்கள் கட்சி குறைக்கும்.

● டி.எஸ். சீதாராமன், கும்பகோணம்.

? சமத்துவபுரங்களால் சமுதாய மாற்றம் ஏற்படும் என்று நம்புகிறீர்களா?

! ஏற்பட வேண்டும் என்று எதிர்பார்ப்பதிலும் நம்புவதிலும் தவறில்லை. நல்ல முயற்சியைப் பாராட்டத்தானே வேண்டும்.

● கே. சுதர்ஷன், தூத்துக்குடி.

? அரசியல்வாதியின் வாக்குறுதி, வானிலை அறிக்கை - ஒப்பிடுக...?

! இரண்டுமே அபூர்வமாக உண்மையாய் அமைந்து விடுவதுண்டு.

● கவிட் ரவி, கும்பகோணம்.

? இன்றைய அரசியல் சூழ்நிலையில் யாருக்கு வோட்டுப் போடக்கூடாது என்கிறீர்கள்?

! கண்டிப்பாக 'ஜெ' அண்ட் கோவுக்கு.

● என். கே. சர்வரி, பெங்களூர் - 10.

? அரசியல் என்றால் இப்படித்தான் விமர்சனத்துக்கு ஆளாக வேண்டி வரும் என்று சோனியாவுக்கு ஏன் தெரியவில்லை? 'அன்னிய நாட்டவர்' என்று சொன்னதைக் கூட அவரால் தாங்க முடியவில்லையே?

! அன்னிய நாட்டவர் என்று சொன்னதைத் தாங்கிக் கொள்ளலாம்; அன்னிய நாட்டவர் பிரதமராகக் கூடாது என்று சொன்னதைத்தான் அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

● வ. வைகுண்டம், சென்னை - 61.

? ராஜாஜி ஆரம்பித்த சுதந்தரா கட்சி நிலைக்காத போதும் அவர் புகழ் நிலைத்ததற்குக் காரணங்கள் யாவை?

! சுதந்தரா கட்சி ஆரம்பிக்கும் முன்னரே ராஜாஜியின் தலைமைக் குணமும் தன்னலமற்ற தேசநல நோக்கும் தீர்க்கதரிசனமும் நிரூபணமாகிவிட்டன. காங்கிரஸின் பெர்மிட் லைசென்ஸ் ராஜ்யத்தை எதிர்க்க அவர் ஆரம்பித்ததுதான் சுதந்தரா கட்சி. இன்று அக்கட்சி நிலைக்காவிட்டாலும் அதன் கொள்கைகள்தான் 'புதிய பொருளாதாரக் கொள்கை' என்ற புனைபெயரில் அமுலுக்கு வந்திருக்கின்றன. ராஜாஜி வரலாற்றை அறிந்த யாருமே அவர் தீர்க்கதரிசனம் மீண்டும் மெய்ப்பட்டதை உணர்வார்கள்.

# ஆடிட்டர் ஜி உபகாரம் அவ்வளவுதானா..?



தீவிரமாக விரும்புகிறது' என்று மட்டுமே சொன்னேன் என்கிறார் அல்போன்ஸ். ஜெயால் மிரட்டப்படுவது என்பதற்கும் ஆட்சிக் கவிழ்ப்பு என்பதற்கும் இடையே என்ன வித்தியாசம் என்பது புரியவில்லை. அரசியல்வாதிகள் உரையாடலிலும் சரி, மேடைப் பேச்சிலும் சரி, நன்கு யோசித்து தெளிவாகப் பேச வேண்டும். எதையாவது கூறிவிட்டு பிறகு பூசி மழுப்புவது அவர்கள் மதிப்பைக்

• நெகிழ்த்திய நூறு!

# நீங்கள் கேட்டவை — தராசு



• பட்டாபிஷேகம்!



• சும்மா சொன்னது!

● மா. உலகநாதன், திருநீலக்குடி.

? **பெண்கள் வேலைக்குச் செல்வது ஆண்களின் கட்டாயத்தினாலா? சுயதேவைப் பூர்த்திக்காகவா?**

! முதல் காரணத்துக்காகப் போக நிர்ப்பந்திக்கப்பட்டால் பரிதாபம்; இரண்டாவது காரணத்துக்காகப் போனால் அது கௌரவம்; சாதனை உணர்வுடன் ஆத்ம திருப்தியும் வேண்டிப் போனால் அது ஆனந்தம்!

● எச். எஸ். மணி, திருச்சி – 5.

? **ஆறு வருஷங்களாக தி.மு.கவை எதிர்த்து கட்சி நடத்திய வைகோ இன்று கலைஞருடன் கூட்டுச் சேர வந்ததும் ராஜதந்திரம்தானே?**

! கருணாநிதிதானே முந்திக் கொண்டார் – பா.ஜ.கவை ஆதரிப்பதில் ராஜதந்திர நடவடிக்கை அவருடையது. வைகோவுடையது, தவிர்க்க முடியாத தொடர் நடவடிக்கை.

● இரா. கமலக்கண்ணன், நாமகிரிப்பேட்டை.

? **அ) பாரதீய ஜனதாவின் பலம் – பலவீனம் என்ன? ஆ) இ. காங்கிரஸின் பலம் – பலவீனம் என்ன...?**

! அ) மதவாதம்; ஆ) சோனியாயிஸம்.

● வாசுதேவன், பரோடா – 20.

? **ஒப்பிடுக – அக்காலத்தில் ரேடியோவில் கிரிக்கெட் காமெண்டரி கேட்டது; இக்காலத்தில் டீ.வி.யில் பார்ப்பது.**

! நடந்து கொண்டிருக்கும் மாட்சை நொடிக்கு நொடி டீ.வியில் பார்க்க முடிகிறது என்பது பிரமிப்பூட்டுகிற விஷயம்தான். ஆனால், ரேடியோவில் நேர்முக வர்ணனை கேட்டபடி ஆட்டத்தை மனத்திரையில் கற்பனை செய்து அடையும் களிப்பு அலாதியானது. அந்த சுகம் இந்தத் தலைமுறையினர் அறியாதது. நேர்முக வர்ணனையும் இலக்கிய நயத்துடன் கலை வடிவமாக விளங்கிய காலம் அது. இன்று டீ.வி. ஒவ்வொரு 'ஷாட்'டையும் பல்வேறு கோணங்களில் 'க்ளோஸ்-அப்'பாகக் காட்டி விடுவதால் வர்ணிப்பதற்கு எதுவுமில்லையே!

● சி. பூங்கோதை, சென்னை – 78.

? **'ஜெயலலிதா நரகத்துக்குப் போனாலும் சரி... நானும் போவேன்' என்று கூறியுள்ள சுப்ரமண்யம் சுவாமி அறிக்கை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

! நரகத்தினிடமும் அனுதாபம் ஏற்படச் செய்யும் அறிக்கை.

● ச. சதானந்தன், வேங்கடத்தானூர். ❑

? **சோனியா காந்தியே தீர்மானமாக முடிவெடுத்து அரசியலை விட்டு ஒதுங்கிய பின்னரும் கட்சிக்காரர்கள் தேவையில்லாமல் ஆர்ப்பாட்டம் செய்வது பற்றி...?**

! ராஜினாமா நாடகம், ராஜினாமா வாபஸ் நாடகமாகத் தொடர்ந்து, மீண்டும் சோனியாவின் பட்டாபிஷேகத்தில் முடிய வேண்டாமா! அதற்காகத்தான் துணை நடிகர்களின் ஆர்ப்பாட்ட நாடகம். இந்த நாடகத்தை நடத்தி, தம்மை எதிர்த்தவர்களை வெளியேற்றி, அடிமைகளை மட்டுமே உடனிருத்திக் கொள்வதில் வெற்றி பெற்றுள்ளார் சோனியா.

● பி. ஆர். கிருஷ்ணமூர்த்தி, போபால் – 16.

? **ஆடிட்டர் ராஜசேகரன் விவகாரம் பேப்பர்காரர்களுக்குத் தலையங்கம் எழுத உபயோகமானதோடு சரி, பிறகு எந்தத் தகவலும் இல்லையே...?**

! உடனே வழக்குத் தொடர்ந்து விட்டால் மட்டும் நடந்து முடிந்து விடப் போகிறதா என்ன...? ஜெயலலிதாவின் தாமதிக்கும் சாகசங்களில் வெறுத்துப் போய் நீதிபதி 25.5.99ல் பேசியிருப்பதை நாளிதழில் படித்திருப்பீர்களே...?

● கே. தெய்வசிகாமணி, சென்னை – 30.

? **ஜெயலலிதாவிடம் இருக்கும் செருப்புகளின் மொத்த மதிப்புக்குக் குறைவாகத்தான் என் மொத்த சொத்தின் மதிப்பு உள்ளது" என லாலு பிரசாத் யாதவ் சொல்லியிருக்கிறாரே?**

! அதை விட்டுத் தள்ளுங்கள்! 'ஜெயிடம் உள்ள செருப்புகளின் மதிப்பு, ரூபாய் இரண்டே கால் லட்சம்தான்' என்று அவசர அவசரமாக எதிர் அறிக்கை விட்ட அ.தி.மு.க. தலைமையை என்னவென்பது!



• தொடர் நடவடிக்கை

• கட்சி மறைந்தாலும்...

• 'நரக' வேதனை!

• சொத்து மதிப்பு!

# 'வாபஸ்' நாடகத்தின் 'ரிகர்ஸல்' காட்சிகள்!

காங்கிரஸின் அகில இந்தியக் குழு கூடி, தன்னை மீண்டும் 'தலைவர்' பொறுப்பை ஏற்கக் கேட்டபின்னரே, 'தேசநலன் கருதி' மனமிரங்குவதாக இருந்த சோனியா, அக் கூட்டத்தின் முதல் நாள் இரவே அவசர அவசரமாகத் தம் ராஜிநாமா வைத் திரும்பப் பெற்றா



காரணம் என்ன?

இந்த அதிரடி நடவடிக் கைக்குப் பின்னணியில் சிலப்பதிகா ரம் சைஸுக்கு ஒரு பெருங்கதையே இருக் கிறது என்கிறது புதுதில்லி அரசியல் வட்டா ரம்.

சதிகார பவார் அண்ட் கோ விலகி விட்ட பிறகு, இப்போது சோனியாவுக்கு நல்லுப தேசம் செய்யும் பொறுப்பிலிருக்கும் பிரணவ் குமார் முகர்ஜி போன்றோர், அவருக்கு காபரா கிளப்பி விட்டிருக்கிறார்கள்.

"நாளை நடக்கப் போகிற கூட்டத்துக்கே நீங்கள் தலைமை ஏற்காவிட்டால் கட்சி மீண்டும் பிளந்து விடும். மொத்தமுள்ள 1200 அதிகாரபூர்வ அகில இந்தியக்குழு உறுப் பினர்களுள், ஒருசிலராவது நீங்கள் தலைமை ஏற்காதபட்சத்தில் மீண்டும் 'அந்நியர்' பிரச் னையைக் கிளப்பி விடக்கூடும். அப்போது சிலர் இதை ஆதரித்துக் குரலெழுப்பி விட் டால் விஷயம் இன்னும் சிக்கலாகி விடும். நம்ப பக்கமா, 'அவங்க' பக்கமா என்று இன் னும் முடிவெடுக்காமலிருக்கிற 'மதில்மேல் மகானுபாவர்கள்' எதிரணி குரலுக்குச் செவி சாய்த்து விடலாம். எனவே நாங்கள் ஒரு சிறப் புக் காரியக் குழுக் கூட்டம் போட்டு, உங் களை மீண்டும் அழைக்கிறோம். சம்மதித்து விடுங்கள். அகில இந்தியக் குழுக் கூட்டத்துக் கும் தலைமைதாங்கி விடுங்கள். அதுதான் உருப்பட வழி" என்கிற ரீதியில் கரைத் திருக்கிறார்கள்.

பலவிதமான குழப்பங்களிலிருந்த சோனியா, இதற்குச் சம்மதிக்கவேதான் கூட் டத்துக்கு முதல் நாள் இரவே 'வாபஸ்' சடங்கு நடந்து முடிந்திருக்கிறது.

தல்கடோரா ஸ்டேடியத்தில் அவர் பேசிய பேச்சின் உருக்கத்தில் கரைந் துருகிக் காணாமல் போனவர் பட்டியலில் பெண்கள் மட்டுமின்றி, சில ஆண்களும் கூட அடக்கம்! 'கட்சிக்காக'ப் பிரசாரம் செய்யவிருப்பதாக உறுதியுடன் அறிவித்த சோனியா, பிரதமர் வேட்பாளர் யார் என்கிற வினாவுக்கு, "கட்சித் தேர்தலில் வென்றபின், பாராளுமன்ற உறுப்பினர்கள் கூடித் தேர்ந்தெடுப்பார்கள்" என்று சொல்லி யிருக்கிறார்.

இப்போது கோவாவில் நடக்கவிருக்கும் பொதுத் தேர்தலிலும் பிரசாரம் செய்யப் போவ தாக அறிவித்திருக்கிறார் சோனியா. அறிவித்து அரைமணி ஆகாத நிலையில், கோவா இளை ஞர் காங்கிரஸும் 'அந்நியர் பிரச்னை'யைக் கிளப்பி, விவாதிக்க வேண்டுகோள் விடுத்திருக் கிறது!

இங்கே நிலைமை இன்னும் இப்படி ஆக்ஸிஜனுக்காகப் போராடிக் கொண்டிருக்க, மறுபுறம் சரத் பவார் கோஷ்டி, அடுத்தக்கட்ட நடவடிக்கை பற்றி மிகத் தீவிர மாக ஆலோசித்து வருகிறது. 'தேசியவாதி காங்கிரஸ்' என்ற பெயரில் புதுக் கட்சியை அறிவித்துவிட்டார் பவார்.

எனினும் தில்லி வந்திருக்கும் முந்நாள் அஸ்ஸாம் முதல்வர் ஷரத்சின்ஹா, பழைய 'காங்கிரஸ் சோஷலிஸ்ட்' கட்சியைப் புதுப்பிப்பது பற்றிய யோசனையை இவர்களுக்கு முன்வைத்திருக்கிறார். பவார், முன்பு அதில் இருந்தவர்தான். தவிரவும் கட்சியின் பழைய ராட்டைச் சின்னமும் சின்ஹாவின் கையில்தான் இன்னும் இருக்கிறது!

எதுவும் தீர்மானிக்கப்படவில்லை, இன்னும். மிகச் சில அரசியல் அதிசயங்களுள் ஒருவராகக் கருதப்படும் எளிமைவாதியும் சொந்த வீடில்லாத, பஸ் பயணம் செய்யும் அரசியல்வாதியுமான சின்ஹாவின் யோசனைக்கும் செவிகொடுத்து ஆலோசித்து வருகிறது பவார் அண்ட் கோ.

இதெல்லாம் ஒருபுறம் இருக்க, சோனியா 'மீண்டும்' பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, த.மா.கா. - காங். இணைந்து தமிழகத்தில் மட்டுமாவது மூன்றாவது அணி உருவாகப் போகிறது என்று தலைநகரில் பேச்சு கிளம்பியுள்ளது.

சென்னையில் கர்ஜீத் மூப்பனாரைச் சந்தித்துப் பேசியிருப்பது, தலைநகர் அனுமானங்களுக்கு வலு சேர்த்துள்ளது.

"அ.தி.மு.க., தி.மு.க. கூட்டணி எதனுடனும் த.மா.கா. சேராது. இடதுசாரிகளுடன் இணைந்து, சோனியா அணியினருடன் கூட கூட்டணி அமைக்க வேண்டும்" என்று ப. சிதம்பரம் பேசியதாகத் தகவல்கள்.

இதற்குப் பீடிகையாகவே மூப்பனார், "சோனியா இல்லாத காங்கிரஸ், ஒருபோதும் பா.ஜ.கவுக்கு எதிராக, வலுவான சக்தியாக உருக்கொள்ள முடியாது" என்று கூறியதாகச் சொன்னார் ஒரு காங்கிரஸ் கட்சிக்காரர்.

**— டெல்லி வெங்கட்**

# தமிழக அரசியலைக் கலக்குவோம்!

**— பவார் பேட்டி**

தமது குருத்வாரா ரகாப்கஞ்ச் தெரு இல்லத்தில் நமக்கொரு சிறு பேட்டி அளித்தார் சரத்பவார்.

''கட்சியின் நிலை பற்றி ஜூன் 10-ல் மும்பையில் நடக்கவிருக்கும் கூட்டத்தில் முடிவு செய்யப்படும்'' என்று அவர் சொன்னார்.

''நாங்கள் கூறியது, சோனியாஜிக்கு விரோதமான ஒன்றல்ல! கட்சியை அவர் தாராளமாகத் தலைமைதாங்கி நடத்தட்டும். ஆனால் ஆட்சி என்று வரும்போது விஷயம் வேறு. பல தேசங்களில் உள்ளது போல், நிர்ணய சாசன அடிப்படையில், இந்தியக் குடியுரிமை பெற்ற அந்நிய நாட்டவர் பிரதமர், ஜனாதிபதி, உப ஜனாதிபதி பதவிகளுக்கு வரக் கூடாது என்றுதான் கூறினோம்.''



''ஆனால் இது, 'நீங்கள் வோட்டு வாங்கிக் கொடுங்கள். நாங்கள் ஆட்சி நடத்துகிறோம்' என்று சொல்வது போலத் தானே? எந்தத் தலைவர் இதற்குச் சம்மதிப்பார்?''

''அப்படியில்லை. அவருக்குக் கட்சியின் மீது மட்டுமே அக்கறை இருக்கும்பட்சத்தில், தமது கணவர், மாமியார் கட்டிக் காத்த இயக்கம் சிதிலமடையக் கூடாது என்பதை மட்டுமே விரும்புவாரானால், இதை தாராளமாகச் செய்ய முடியும்.''

''இந்த அந்நியர் பிரச்னையை, உங்கள் ஆதரவாளர்களுக்கு, தேர்தல் டிக்கெட் வாங்கிக் கொடுத்த பின்னரே எழுப்புவதாக இருந்தீர்கள்! ஆனால் சங்மா அவசரப்பட்டு, அதற்கு முன்னரே கிளப்பி விட்டார் என்று கூறப்படுவது பற்றி?''

''இது உண்மையில்லை. சங்மா இப்பிரச்னையை எழுப்பியபோது, இதிலிருக்கும் சத்தியம் என்னை, 'கட்சி இது பற்றி ஒரு விவாதமாவது நடத்த வேண்டும்' என்று கூற வைத்தது. அதற்குள் அவர்கள்தான் 'நோட்டீஸ்' அனுப்ப வேண்டும் என்று கூறிவிட்டார்கள். அதனால்தான் நாங்கள் கடிதம் வாயிலாகக் கருத்தை பகிரங்கப்படுத்த வேண்டியதாகி விட்டது.''

''தேசிய அளவில் காங்., பா.ஜ.கவுக்கு ஒரு மாற்றணி உருவாக்க விரும்புகிறீர்கள். இதற்கான ஏற்பாடுகள் என்ன? குறிப்பாகத் தமிழ்நாட்டில்?''

''உங்கள் மாநிலத்தில் ஜெயலலிதா, கருணாநிதி இருவருமே எங்களுடன் வர விரும்புவார்கள். பொறுத்திருந்து பாருங்கள். எங்கள் அணி, ஒரு உறுதியான, இறுதியான மாற்றணியாக உருவாகும்!''

# புகைச்சலா?!


தேர்தலை ஒரு வாய்ப்பாக எடுத்துக் கொண்டு நெருங்கி வந்த தி.மு.க.வும் ம.தி.மு.க.வும் எதிர்காலத்தில் ஒன்றாக இணைந்துவிடுவதற்கான வாய்ப்பு இல்லவே இல்லை என்கிற மாதிரிதான் கலைஞரும் வைகோவும் பேசி வருகிறார்கள். ஆனால், இந்த இயக்கங்களில் அடிமட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை "இணைந்தால் என்ன?" "ஏன் இணைய வேண்டும்?" என்கிற உரத்த சிந்தனைகள் எழ ஆரம்பித்து விட்டன! இரு இயக்கங்களிலும் உள்ள தொண்டர்களும் பிரமுகர்களும் பல்வேறு சாத்தியக்கூறு களைப் பற்றிப் பேசிக் கொண்டு இருக் கிறார்கள். 'வை.கோவை மீண்டும் தி.மு.க.வில் இணைய விடாமல் தடுப்பது, ஸ்டாலினின் எதிர்காலம் கருதித்தான்' என் றும் சிலர் சொல்கிறார்கள்.

அன்று கோபாலபுரத்துக்கு வைகோ சென்றது அவரது உள்ளத்தில் பலவித உணர்ச்சிகளைக் கிளப்பி விட்டிருக்கலாம். அதே வீட்டில் முழு சுதந்தரத்தோடு உள்ளே புகுந்து வந்த நாட்கள் அவருக்குள் நிழலாடி இருக்கக்கூடும்!

"மகனுக்குக் காட்டும் அதே அன்பை வைகோவுக்கும் கலைஞர் காட்டினார் என்றால் அது அதிகபட்சமான கமெண்ட் அல்ல. நாங்க ளெல்லாம் சோபாவில் அமர்ந்திருக்க, கலைஞரின் காலடியில் வைகோ அமர்ந்து கொள்வார். சில சமயங்களில் வாஞ்சை யோடு அவர் தலையைக் கலைஞர் கோதி விடுவார். அதைக் கண்டு எங்களுக்கு லேசான பொறாமை கூட உண்டு! அப்படிப் பாசத்தைப் பொழிந்த காரணத்தால் வேறு யாருக்கும் கிடைக்காதவிதமாக மூன்று முறை மாநிலங்களவை உறுப்பினராக வாய்ப்புக் கொடுத்தார்.

"1989-க்குப் பிறகு வைகோவின் செயல் பாடுகளில் கொஞ்சம் வித்தியாசம் தெரிந் தது. தமிழகம் முழுவதும் சுற்றிச் சுற்றி வந்து எழுச்சியுடன் பேசிக் கொண்டிருந்த அவர், தம்மைப் பிரதானப்படுத்திக்கொண்டு, தமது ஆதரவாளர்களை ஒருங்கிணைத்துக் கொண்டு வந்தார். ஒருமுறை கலைஞருடன் வைகோவும் நெல்லையில் ஒரு கூட்டத்தில் பேச ஏற்பாடாகியிருந்தது. வழியெங்கும் வரவேற்பு வளைவுகள். "வையகம் போற் றும் கோமானே" என்று எழுதப் பட்டிருந்த வாச கங்களில் 'வை' யும் 'கோ'வும் பளிச்செனப் பெரி தாக இருந்தன. கூட்டத் தில் வைகோ பேசத் துவங்கிய போது மேலிருந்து மலர் கொட்டியது. கலைஞரை விட வைகோவுக்கு அதிக மாலைகள்! 'தம்பியை விட இந்த அண்ண னுக்கு அதிக மாலைகள் விழும் என்று எதிர்பார்த்தேன்!' என்ற ரீதியில் இலேசான கிண்டலுடன் கலைஞர் கமெண்ட் அடித் தார்!

"ஸ்டாலினுக்குப் போட்டியாக வருவது ஒரு பக்கம் இருக்க, தலைமைக்கே சவால் விடுவது போல், சில சமயங்களில் அவர் நடந்து கொண்டதும் உண்டு" என்று பழைய நிகழ்ச்சிகளைச் சுட்டிக்காட்டி னார் தி.மு.க.வின் முன்னணிப் பிரமுகர் ஒருவர்.



கலைஞர் மேல் வைகோ பொழிந்த பாசத்திற்கு அளவே கிடையாது. ஒருமுறை மதுரையி லிருந்து சென்னை வரும்போது, கலைஞரும் அவர் துணைவி யாரும் ரயிலில் 'கூபே' பெட்டி யில் இருந்தனர். ஓர் அ.தி.மு.க. அமைச்சர் 'கலைஞர் இருந்த 'கூபே'யைத்



தமக்கு ஒதுக்கியே தீர வேண்டும் என்று அடம்பிடிக்க, உள்ளே ஒய்வெடுத்துக் கொண்டிருந்த கலைஞரிடம் விவகாரத்தைக் கொண்டு செல்லாமல், அவருக்கு இடையூறு ஏதும் ஏற்படாதபடி கிட்டத்தட்ட பன்னிரண்டு மணி நேரம் 'கூபே'யின் வாசலிலேயே நின்று கொண்டு பயணம் செய்தார் வைகோ!

1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம், கழக வரலாற்றைப் பொறுத்தமட்டில் உணர்ச்சிக் கொந்தளிப்பான மாதம். அந்த மாதம் பத்தாம் தேதியன்று தஞ்சை குடவாசலில் வைகோவுக்குப் பொதுக் கூட்டம். அதற்கு முன்னரே சில மாதங்கள் வைகோவுக்குக் கூட்டங்களில் பேசத் தடை ஏதும் போடாவிட்டாலும் தலைமையின் எண்ணத்தைப் புரிந்து கொண்ட கட்சிக்காரர்கள் அவரைக் கூட்டங்களுக்கு அழைக்காமலிருந்தார்கள். குறிப்பாக, சென்னையில் பேசுவதற்கு வாய்ப்பே கொடுக்கப்படவில்லை. இந்த விவகாரங்கள் எல்லாம் உள்ளுக்குள் புகைந்த வண்ணம் இருந்தன!

"தி.மு.க. தலைமை வைகோ கைக்கு மாறினால் ஆதாயம் எனக் கருதிய விடுதலைப் புலிகள், கலைஞர் உயிருக்குக் குறி வைக்கக்கூடும் என மத்திய அரசு கடிதம் எழுத, அதைக் கலைஞர் வெளியிட, கழகத்தில் மீண்டும் ஒரு பிளவிற்கான பிள்ளையார் சுழி போடப்பட்டது. அடுத்த மூன்று நாட்கள் வைகோ எங்கிருக்கிறார் என்றே தெரியவில்லை. அவர் ஆதரவாளர்களோடு வெளியேறி விடுவார் என்ற நிலை கிட்டத்தட்ட ஏற்பட்டுவிட்டது. மகன் பட்டம் கட்டிக் கொள்வதற்கு வைகோ தடையாக இருந்து விடுவாரோ என்ற பயத்தில்தான் திட்டம் போட்டு கொலைப் பழி சுமத்தி வெளியேற்றி விட்டார்கள்" என்பது வை.கோ. ஆதரவாளர்களின் வாதம்.

அந்தக் காலகட்டத்தில் மிகுந்த மன அழுத்தத்தால் கலைஞரே, "அரசியலை விட்டு ஓய்வு பெறுகிறேன்" என்று அறிவித்து விட்டார். தெரிந்தோ, தெரியாமலோ, கழகப் பிளவிற்குத் தம் மகன் ஒரு காரணமாகப் பேசப்படுகிறானே என்று நொந்து,

• சந்தித்த வேளையில்...(படம்: சௌந்தர்ராஜன்)



கொஞ்சம் கடும் சொற்களால் ஸ்டாலினையே திட்டிவிட்டதாகச் சொல்கிறார் கலைஞர் குடும்பத்துக்கு வேண்டிய நண்பர் ஒருவர்.

"வை.கோவின் பாணியே வேறு. அவரது எழுச்சிப் பேச்சால் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் அவரது ரசிகர்களாகி விட்டனர் என்பதுதான் உண்மை. காலப் போக்கில் கட்சி அவரது கைவசமாவதற்கு வாய்ப்புகள் பிரகாசமாக இருந்தன. ஸ்டாலினும் - வைகோவும் ஒருவரையொருவர் திட்டமிட்டு எதிர்க்காவிட்டாலும், அவர்களிடையே இடைவெளி அதிகமாகிக் கொண்டே போனது. இடையில் தூபம் போடப் பலர் இருந்தனர்" என்று சொன்னார் ம.தி.மு.க. பிரமுகர் ஒருவர்.

"சில சமயங்களில் கலைஞரின் செயல்பாடுகளைப் பார்க்கும்போது மாறனுக்கு ஒரு 'செக்' வைப்பதற்காக வைகோவை வளர்க்கிறாரோ என்று கூட நாங்கள் எண்ணியிருக்கிறோம்" என்றார் அவர்.

"தி.மு.க.விலிருந்து பிரிந்து சென்று தனி இயக்கம் கண்டு, பிறகு தாய்க் கழகத் தலைமையிடமே கூட்டணி பற்றிப் பேச வாய்ப்புப் பெற்ற ஒரே தலைவர் வைகோவாகத்தான் இருக்கும்" என்கிறார்கள் ம.தி.மு.க.வினர்.

தி.மு.க.வுடன் இணைந்து செயல்பட்டால் தங்களைக் கரைத்து விடுவார்களோ என்ற பயம் அவர்களுக்கும் இருக்கிறது. தேர்தலின்போது இரு கட்சித் தொண்டர்களும் பரஸ்பரம் இணைந்து செயல்படுவார்களா என்ற சந்தேகம் கூட்டணியிலுள்ள கட்சிக்காரர்களுக்கு இருக்கிறது.

"சில பத்திரிகைகள் எழுதுவது போல, ம.தி.மு.க. தலைவர்கள் தி.மு.க.வைச் சேர்ந்த தலைவர்களைச் சந்திப்பதாலோ, நாடாளுமன்றத் தேர்தலில் ஈடுபட்டுப் பணியாற்றுவதாலோ மறுமலர்ச்சி தி.மு.க., தி.மு.க.வோடு இணைந்து விடும் என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று ம.தி.மு.க.வின் அதிகாரபூர்வமான ஏடான 'சங்கொலி' சமீபத்தில் ஒரு தலையங்கத்தில் சொல்லியிருக்கிறது.

ஸ்டாலினுக்கு மிகவும் நெருங்கியவர்களான அன்பில் பொய்யாமொழி, பரணிகுமார் போன்றோர் சில நாட்கள் முன்புவரை கூட, "ம.தி.மு.க.வுடன் இணைந்து பணியாற்றுவது என்பது நினைத்துப் பார்க்க முடியாத ஒன்று" என்று பேசி வந்தவர்கள்தான். ஆனால், இப்போது தங்களது தீவிரத்தன்மையைக் குறைத்துக் கொண்டிருக்கிறார்களாம். இதற்குக் காரணம் ஸ்டாலின்தான் என்கிறார்கள்.

"Larger interest-ல் பார்த்தால் இந்தத் தேர்தலில் ம.தி.மு.க.வுடன் இணைந்து செயல்படுவது அவசியமாகிறது. தலைவர் எல்லாவற்றையும் யோசித்துத்தான் முடிவெடுத்திருப்பார். 'பின்னாடி இணைஞ்சுடுவாங்களோ' என்றெல்லாம் யோசிப்பதை விட்டுவிட்டு ஒரு கட்சியுடன் தேர்தல் கூட்டு என்ற அடிப்படையில் மட்டும் இந்தப் பிரச்னையை நாம் அணுகினால் போதும்" என்று தமது ஆதரவாளர்களிடத்தில் பேசியுமிருக்கிறார் ஸ்டாலின்.

ம.தி.மு.க.வினர் உணர்ச்சிக் கொந்தளிப்பில் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசியவற்றைப் பெரிதுபடுத்த வேண்டாம் என்கிறாராம் ஸ்டாலின்.

தி.மு.க.வில், தற்போது ஸ்டாலினின் செல்வாக்கைக் கொஞ்சமும் குறைத்து மதிப்பிட முடியாது. மாநாட்டுக்கு மாநாடு, அவர் தலைமையில் திரளும் இளைஞரணியின் எழுச்சி, கழகப் பிரமுகர்களை ஆச்சரியப்பட வைக்கிறது என்பது உண்மை. மதுரைக்கு அந்தப் பக்கம் வேண்டுமானால் அழகிரியின் கட்டுப்பாட்டில் கழகப் பிரமுகர்கள் இயங்கினாலும், வடக்கு மாவட்டங்களில் ஸ்டாலின் ஆதரவாளர்கள் பெருகிக் கொண்டுதான் இருக்கிறார்கள். வளரும் செல்வாக்குக்கு ஏற்ப ஸ்டாலினும் தம்மைத் தகுதியுடையவராக மாற்றிக் கொண்டு வருகிறார். வேண்டியவர், வேண்டாதவர் என்ற பாகுபாடில்லாமல் எல்லோருடனும் பழகுகிறார். கோஷ்டி விவகாரமெல்லாம் இப்போது கிடையாது. மேயராகப் பணியாற்றக் கிடைத்த வாய்ப்பை, நிர்வாகத்தைப் பற்றித் தெரிந்து கொள்ளப் பயன்படுத்திக் கொள்கிறார். சில பல காரணங்களுக்காகத் தம்மைப் பயன்படுத்த நினைப்பவர்களைச் சாமர்த்தியமாகக் கழற்றி விடுகிறார். யாரைக் கண்டும் ஸ்டாலின் அஞ்சவில்லை. எதிர்காலத்தில் ஸ்டாலின் கழகத்தைப் பொறுத்தவரை தவிர்க்க முடியாதவர்" என்றார் இளைஞரணிப் பிரமுகர் ஒருவர்.

இந்தச் சூழ்நிலையில் 'இணைப்பு' பேச்சுக்களின் கதி என்னவாகும்? 'இணைவதற்கான வாய்ப்பில்லை; தனிக்குடித்தனம்தான்' என்றெல்லாம் இருதரப்பிலும் பேசி வந்தாலும், மூத்த திராவிட இயக்கப் பிரமுகர்கள், "பெரியார், அண்ணா வழியில் செயல்படும் இந்த இயக்கங்கள் எதிர்காலத்தில் இணைவது தவிர்க்க முடியாதது" என்கிறார்கள்.

— ப்ரியன்

அட்டை வண்ணப்படங்கள் : யோகா

---

**''திருநெல்வேலிக்குப் போறேன்... அல்வா வாங்கிட்டு வரேன்னு சொல்லிட்டுப் போனீங்க, வெறும் கையோட வந்து நிக்கறீங்களே...? ஊஹ்ம்...!''**

**''புரியாம பேசாதே! பீச்சுக்குப் போறப்போ கூடத்தான் காத்து வாங்கிட்டு வரேன்னு சொல்றேன்... பொட்டலம் கட்டிட்டா வர முடியும்? அது மாதிரிதான் இதுவும்!''**

**— ஜெயாப்ரியன்**





# பெல்ஜியத்தில் கிடைத்த வடை, பாயச விருந்து!

என் அமெரிக்கப் பயணத்தின் இறுதியில், அங்கே ஒரு பள்ளியின் பிரின்சிபால், என்னிடம் கொஞ்சம் வித்தியாசமான வேண்டுகோள் விடுத்தார்.

அந்தப் பள்ளிக்கூடத்தின் ஏதாவது ஒரு வகுப்பில் நான் பாடமெடுக்க வேண்டும்!

நான் எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் வகுப்பு எடுக்க ஒப்புக்கொண்டேன். என்னை ஒரு வகுப்புக்கு அழைத்துச் சென்று, இந்தியாவிலிருந்து வந்திருக்கும் பள்ளிக்கூட ஆசிரியை என்று மாணவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தார். "இவர் இப்போது உங்களுக்கு வகுப்பு எடுப்பார். அது அவருக்கு மட்டுமில்லை, உங்களுக்கும் கூட ஒரு புதிய அனுபவமாக இருக்கும்" என்று சொல்லிவிட்டு, என்னிடமிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

அந்த வகுப்பில் குழந்தைகளும் இல்லை. வளர்ந்த பையன்களுமில்லை. எட்டு, பத்து வயதுடைய மாணவர்கள் இருந்தனர். இந்திய பாடத் திட்டப்படி அவர்களுக்கு எதையும் சொல்லித் தர இயலாது. எனவே பொதுவாக இந்தியாவைப் பற்றிச் சொல்லலாம் என்று முடிவு செய்தேன்.

இந்தியாவின் பாரம்பரியம், பண்டைய கலாசாரம், புராண, இதிகாசங்கள் பற்றியெல்லாம் சொல்லித் தரலாம் என்றால், அதெல்லாம் அவர்களுக்கு எந்த அளவு சுவாரசியமாக இருக்கும் என்று எனக்கு உள்ளூர சந்தேகம்! எதையாவது சொல்லித் தர வேண்டும்; சொல்லித் தந்து விட்டு, வகுப்பிலிருந்து வெளியே வருகிறபோது, மாணவர்கள் மனத்தில் இந்தியாவைப் பற்றிய உயர்வான எண்ணம் ஏற்பட வேண்டும் என்கிற கோணத்தில் யோசித்து, அவர்களுக்கு தியானம் பற்றிச் சொல்லித்தர முடிவு செய்தேன்.

முதலில் தியானம் என்பது என்ன என்று ஓர் அறிமுகம் கொடுத்து விட்டு, அடுத்து, கொஞ்சம் பிராக்டிகலாகச் சொல்லித் தர ஆரம்பித்தேன்

எப்படி உட்கார்ந்து கொள்ள வேண்டும், எப்படி மூச்சு விட வேண்டும், எப்படி படிப்படியாய் அதை மெதுவாக்க வேண்டும் என்றெல்லாம் நான் சொல்லச் சொல்ல, மாணவர்கள் தியானத்தில் மூழ்க ஆரம்பித்தார்கள்.

சுமார் பதினைந்து நிமிட நேரம் கழித்து அவர்களை தியானத்திலிருந்து எழுப்பினேன். தொடர்ந்து, ஒவ்வொரு மாணவனையும் அனுபவம் எப்படி இருந்தது என்று சொல்லச் சொன்னேன். 'நான் மிதப்பது போல உணர்ந்தேன்'. 'என் மனது ரிலாக்ஸ் ஆகிவிட்டது.' 'தூங்கி எழுவது போல இருக்கிறது', 'இது ஒரு புதுமையான அனுபவம்', 'இப்படி தினமும் செய்யலாமா?' என்று ஆளாளுக்குச் சொன்னார்கள்!

இந்த மாதிரியான தியானம், மனதினை ஒருமுகப்படுத்தும். மனம் அமைதிப்படும், அதனால் கவனம், ஞாபகசக்தி எல்லாம் அதிகரிக்கும். கோபம் வராது என்று சொல்லிவிட்டு, 'இந்தியாவில் எங்கள் பள்ளிக்கூடத்தில் தினமும் காலை பிரேயர் உண்டு!

**திருமதி ஒய்.ஜி.பி**

அப்போது மாணவர்கள் தியானம் செய்வது வழக்கம்' என்றபோது அவர்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியம்!

அதைத் தொடர்ந்து தியானம் பற்றி மட்டுமில்லை; பலவிதமான கேள்விகளைக் கேட்டு, தமது ஆர்வத்தை வெளிப்படுத்தினார்கள். 'அது என்ன நெற்றியில் ஏதோ சிவப்பாக இருக்கிறது? நீங்கள் உடுத்தியிருக்கும் ஆடையின் பெயர் என்ன?' என்கிற ரீதியில் கூடக் கேள்விகள் இருந்தன. நான் புடைவை, குங்குமப் பொட்டு இவை பற்றியெல்லாம் கூட விரிவாக விளக்கங்கள் அளிக்க வேண்டியிருந்தது!

குங்குமப் பொட்டு என்கிற போது எனக்கு இன்னொரு அயல்நாட்டு அனுபவம் நினைவுக்கு வருகிறது. ஒரு தடவை தாஷ்கண்ட் நகருக்குச் சென்றிருந்தேன். அங்கிருந்து பின்லாந்து நாட்டுத் தலைநகரான ஹெல்சிங்கியில் நடைபெற்ற உலக இளைஞர் விழாவில் கலந்து கொள்வதற்காக ரயில் மூலம் பயணம் செய்ய வேண்டியிருந்தது. அது ஒரு பிரத்யேக ரயில் என்பதால், வழிநெடுக ஸ்டேஷன்களில் என்னைப் போன்ற டூரிஸ்ட்களுக்கு பலமான வரவேற்பு. பலரும், சிறு சிறு பொருட்களை நினைவுப் பரிசாக எங்களுக்கு அளித்தார்கள். நானும் கையில் எடுத்துச் சென்றிருந்த சிறு பரிசுப் பொருட்களையெல்லாம் எடுத்துக் கொடுத்துக் கொண்டே வந்தேன். ஒரு கட்டத்தில் பரிசுப் பொருட்கள் எல்லாம் தீர்ந்து போய் விட்டதால், இனி கொடுப்பதற்கு ஒன்றுமில்லை என்கிற நிலை!

அடுத்த ஸ்டேஷனில், யாராவது பரிசு கொடுத்தால் பதிலுக்கு என்ன கொடுப்பது என்று மண்டையைப் பிய்த்துக் கொண்டேன். சட்டென்று ஒரு எண்ணம் உதித்தது. அதையே, அடுத்த தடவை ரயில் நின்ற போது நான் செயல்படுத்தினேன்.

"இதிலிருந்தே தெரியவில்லையா, நம் தலைவருக்கு நாற்காலி ஆசை இல்லை என்பது...?"

— ரம்யா



கூட வந்தவர்களுக்கு ஆச்சரியம்; பரிசு கொடுத்தவர்களுக்கோ, சந்தோஷம்! நான் செய்தது என்ன தெரியுமா?

என்னுடன் கொண்டு போயிருந்த குங்குமச் சிமிழைப் பெட்டியிலிருந்து வெளியே எடுத்து வைத்துக் கொண்டேன். யார் வாழ்த்து சொன்னாலும், பரிசு கொடுத்தாலும், உடனே அவரது தலையைத் தொட்டு, நீங்கள் நீடூழி வாழ, எல்லாம் வல்ல ஆண்டவன் அருள் புரியட்டும் என்று சொல்லி, நெற்றியில் குங்குமத்தால் பெரிய திலகம் இட்டு விடுவேன். 'இது, இந்தியர்கள் புனிதமாகக் கருதும் பவுடர்' என்று விளக்கமும் கொடுத்தேன்! சென்டிமென்ட்டல் டச்!

நாங்கள் தாஷ்கண்ட் போன சமயத்தில் பள்ளிக்கூடம் முடிந்து, விடுமுறை ஆரம்பித்து விட்டது. ஆனாலும் மாணவ, மாணவிகள் பள்ளிக்கூடம் வந்து போய்க் கொண்டிருந்தார்கள். பொதுவான பாடத் திட்டத்தை அனைவருக்கும் சொல்லிக் கொடுப்பதும், பாடங்கள் தவிர மற்ற விஷயங்களையும் சொல்லிக் கொடுப்பதும் நடைமுறையில் இருந்தாலும், இதுபோன்ற விடுமுறை சமயங்களில், ஒவ்வொரு மாணவனுக்கும் எதிலே ஆர்வம், திறமை இருக்கிறது என்று கண்டறிந்து, அதை வளர்ப்பதற்கு உதவும் வகையில் பிரத்யேகமான பயிற்சி தரப்படுகிறது. இதுபோன்ற பயிற்சி முகாம்களை 'பயனீர் கேம்ப்' என்று குறிப்பிடுகிறார்கள். இந்த விஷயமும் என்னை மிகவும் கவர்ந்தது. இதுதான் எங்கள் பள்ளிக்கூடத்திலும் விடுமுறைக் காலத்தில் மாணவர்களுக்கு எதில் ஆர்வமோ, அதில் பயிற்சியளிக்க ஏற்பாடு செய்வதற்கான அடித்தளமாக அமைந்தது.

அமெரிக்கா, பிரிட்டன், ஜெர்மனி, பிரான்ஸ் என்று பல முக்கியமான உலக நாடுகளுக்கும் சென்று வருகிற வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்கிறது. நான் எந்த நாட்டுக்குச் சென்றாலும் சரி, புடைவை அணிந்துதான் போவது வழக்கம். எல்லா இடங்களிலும் புடைவைக்கு இருக்கிற மதிப்பும் மரியாதையும் எனக்குப் பெரும் வியப்பை அளித்தன. என்னைப் பெருமைப்பட வைத்தன!

ஜெர்மனி போயிருந்தபோது நான் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனித்தேன். அங்கே கை, கால்களை இழந்தவர்கள் நிறையப் பேர் காணப்பட்டனர். இதற்கு என்ன காரணம் என்று விசாரித்தபோது, உலகப் போரில் ஜெர்மனி பங்கேற்றதன் விளைவுதான் என்று கூறினார்கள். அது மட்டுமில்லை! உலகப் போர் ஜெர்மன் நாட்டில் ஏற்படுத்திய பொருளாதாரம் உட்பட்ட பல

துறை பாதிப்புகள் பற்றியும் விவரித்தார்கள். அதைக் கேட்ட பின்பு, போரினால் பெரும் பாதிப்புக்குள்ளான ஒரு நாட்டிலா இப்படிப் பட்ட முன்னேற்றம் என்று வியந்து போனேன்!

பெல்ஜியம் போயிருந்தபோது, இந்திய கலாசாரத்துக்கேயுரிய ஒரு விஷயத்தை அனுபவபூர்வமாக உணர்ந்தேன். இந்தியாவிலிருந்து புறப்பட்டு சுமார் மூன்று மாத சுற்றுப் பயணத்துக்குப் பிறகு, பெல்ஜியம் போய்ச் சேர்ந்தேன். அன்றைய தினம் ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி. எனவே அங்கே இருந்த இந்திய தூதரகத்தில் ஒரு நிகழ்ச்சிக்கு நான் அழைக்கப்பட்டிருந்தேன். அங்கே போன போது, ஓர் இளைஞர் பெரும் தயக்கத்துடன் 'நீங்கள் தென்னிந்தியாவைச் சேர்ந்தவரா?' என்று கேட்டார்.

நான், "ஆமாம்! இந்தியாவின் தென் கோடியிலுள்ள மாநிலத்தைச் சேர்ந்தவன். தமிழ்நாடு" என்றேன்! அட! தமிழ்நாடா?' அப்படியானால் உங்களுக்குத் தமிழ் தெரியுமில்லையா?" என்றார். நான், "ஓ! பேஷாக!" என்றேன் தமிழில். அவருக்கு மட்டுமில்லை; எனக்கும் அப்போது பெரும் சந்தோஷம். அவருக்கு, பெல்ஜியம் நாட்டுக்கு வந்த டூரிஸ்ட்களில், தமிழ்நாட்டுக்காரர் ஒருவர் என்பதில் மகிழ்ச்சி. கடந்த மூன்று மாத சுற்றுப்பயணத்தில், முதல் தடவையாக அந்நிய மண்ணில் தமிழரைச் சந்தித்த மகிழ்ச்சி எனக்கு. அவர் உடனே என்னைத் தன் வீட்டுக்கு அழைத்துக் கொண்டு போனார். மூன்று மாதங்களுக்குப் பிறகு, எனக்குக் கத்தரிக்காய் கறி, வடை, பாயசம் என்று தமிழக மணம் கமழ விருந்து வைத்து விட்டார். இந்தியாவிலிருந்து பல்லாயிரம் மைல் கடந்து, ஒரு வீட்டில் தமிழ்நாட்டு சாப்பாட்டைச் சாப்பிட்ட போது, எனக்கு என்னுடைய அம்மா நினைவுதான் வந்தது!

அவர், வீட்டுக்கு வரும் விருந்தினர்களை கவனிப்பதே அலாதி! வருகிறவர்களுக்கு என்ன பிடிக்குமோ, அதைச் செய்து போட்டு, சந்தோஷப்படுத்துவாள். அது மட்டுமில்லை, வீட்டு வேலைக்காரி பசி என்றால், உடனே உட்கார வைத்து சாப்பாடு போட்டு விட்டுத் தான் மறுவேலை பார்ப்பார். 'அதிதி தேவோ பவ' என்று நம் கலாசாரத்தில் கூறப்பட்டுள்ள கருத்தை முழுமையாகக் கடைபிடித்தவர் அவர். அப்படி அந்த நாளில், என் அம்மா விருந்தாளிகளை கவனமுடன் உபசரித்ததற்குப் பிரதிபலனாகத்தான் நான் பெல்ஜியத்தில், ஜெகதீஷ் வீட்டில் நல்ல சாப்பாடு சாப்பிட முடிந்தது என்று நினைக்கிறேன்.

உலக நாடுகளைச் சுற்றிப் பார்த்த அனுபவத்தால், பாடரீதியாகப் பெரும் புரட்சிகளை நாங்கள் செய்தது ஒருபுறம் என்றால்,



''சே! தலைவர் முன்னால பஸ் கண்டக்டரா இருந்தவர்ங்கறதை, கூட்டணி பேசப் போன இடத்துல கூட நிரூபிக்கணுமா?''

''என்ன பண்ணாரு?''

''சீட்டு குடுக்காட்டியும் பரவாயில்லை. ஸ்டாண்டிங்ல வரலாமில்லையான்னு கேட்கறார்.''

— கிச்சா

நம் இந்திய கலாசாரம் சம்பந்தப்பட்டவைகளையும் முக்கியத்துவம் கொடுத்து, பாடத் திட்டத்திலேயே சேர்த்தோம். அதன்படி மாணவர்களுக்குக் கர்நாடக இசை, பரதநாட்டியம், ஸ்லோகங்கள், யோகா, தியானம் போன்றவற்றையும் சொல்லிக் கொடுத்தோம்.

அது மட்டுமில்லாமல், ஆண்டு விழா நிகழ்ச்சிகளிலும் இவற்றுக்கு முக்கியத்துவம் தரப்பட்டது. ஆண்டு விழா நிகழ்ச்சிகள் என்றால், அதை ஏனோதானோ என்று செய்யக் கூடாது என்பது என் பாலிசி. ஆண்டு விழாவுக்கு இரண்டு மூன்று மாதங்கள் முன்பே, என்னென்ன ஐட்டங்கள் என்பது தீர்மானமாகி விடும். அவற்றைச் செய்வதற்குத் தகுதியான மாணவ, மாணவிகள் தேர்வு முடிந்ததும், ஒத்திகை ஆரம்பமாகி விடும். பள்ளிக்கூடம் முடிந்து, அதன்பின் ஒத்திகை என்றால், மாணவர்கள் வீட்டுக்குப் போக ரொம்ப லேட்டாகி விடும் அல்லவா? இதற்கும் ஒரு வழி கண்டுபிடித்தேன். டைம் டேபிளில் எந்தவிதமான மாற்றமும் இல்லாமல் வகுப்புகள் நடைபெறும். கடைசி பீரியட் ரத்து செய்யவும் மாட்டேன். அதற்குப் பதிலாக ஒவ்வொரு பீரியடிலும் பத்து நிமிடம் குறைத்து விடுவேன். இதனால், வழக்கமான நேரத்துக்கு முன்னதாக வகுப்புகள் முடிந்து விடும். உடனே ஆண்டு விழா நிகழ்ச்சிகளுக்கான ஒத்திகை ஆரம்பமாகி விடும். வழக்கமாகப் பள்ளிக்கூடம் முடிகிற நேரத்தில் ஒத்திகை முடிந்து, மாணவர்கள் தாமதம் இல்லாமல் வீடு போய்ச் சேர்ந்து விடலாம்.

இந்த ஐடியாவைக் கேள்விப்பட்ட வேறு சில பள்ளிகள் கூட இந்த முறையைப் பின்பற்றுவதாகச் சொன்னார்கள்.

(தொடரும்)

# நம்பிக்கையின் கடைசி உதிரம்

ஜனக்கூட்டம் தெருக்களில் வெகுவாகக் குறைந்துவிட்டது. கடைசி பஸ் மட்டும் கூட்டமாக வந்தது. எப்படியாவது ஏறிவிட வேண்டும் என்கிற வெறியில் கதிரேசனும் சரஸ்வதியும் முண்டியடித்தார்கள். கதிரேசனுக்கு முதல் படியிலும், சரஸ்வதிக்கு வாசலுக்கு ஒட்டி நின்ற இன்னொரு பெண்ணின் கால் மீதும் இடம் கிடைத்தது. அந்தப் பெண் ''இஸ்'' என்று தூக்கக் கலக்கம் விஞ்சின கண்ணோடு, காலை இழுத்துக் கொண்டதில், ஒரு காலை மட்டும் கீழே வைக்க முடிந்தது.

''உள்ளப் போம்மா'' கண்டக்டர் இரைந்தான். அவன் வேலை அப்படி. அதற்காக, அவனைக் கடிந்து கொள்ள முடியுமா? "உள்ள போக முடியலை சார். முயற்சி பண்றேன்'' என்றாள் சரஸ்வதி. அவன் அவளை, அந்த நிதானத்துக்காக ஆச்சர்யமாகப் பார்த்தான். கதிரேசனுக்கு அந்த நிதானத்தின் கதை தெரியும். பொறுமையின் பொருள் தெரியும்.

ஏழு வருட இம்சைகளுக்கும் கஷ்டங்களுக்கும் அப்பால் பிறந்த பொறுமையும் நிதானமும் அல்லவா அவை? பசி ஏந்தின வயிறு தந்த அஹிம்சை இல்லையா? இனி பட ஏதுமில்லை என்கிற நிலை கடந்து போன நிதானம். கதிரேசன் பெருமூச்சு விட்டான்.

சரஸ்வதி திரும்பி இவனைப் பார்த்து சிரிக்க முயன்றாள். அவளுள் ஒரு தெளிவும், அது சார்ந்த நம்பிக்கையும் தோன்றியிருப்பது நிச்சலனமாய்த் தெரிந்தது. என்றாலும் முகம் பொலிவாயில்லை. சங்கரன் இருந்தவரை, துலக்கின செம்பாய்ப் பளிச்சிட்ட முகம்.

சங்கரன் திடீரென்று ஒரு நாள் காணாமல் போகும் வரை, பிரச்னைகள் ஏதுமில்லை. அன்று தொண்ணூற்றிரண்டாம் வருடத்து பிப்ரவரி நான்காம் தேதி. செவ்வாய்க்கிழமை. நன்றாக ஞாபகம் இருக்கிறது. இரவு பத்து மணிக்கு ஃபோன் வந்தது. கதிரேசன் ஓடிப் போனான். சங்கரனின் வீட்டில், கிட்டத்தட்ட அந்தத் தெரு கூடியிருந்தது.

''எங்க போனான்?'' கதிரேசன் கேட்டான்.

''தெரியலை. ஜங்ஷன் ஓரம், நம்ம சன்



**தமயந்தி**

முவம் கடையாண்ட வண்டியை விட்டுட்டுப் போனானாம். சண்முவம் கையில, கழுத்திலிருந்த செயின் எல்லாம் கழத்திக் கொடுத்திருக்கான். வண்டியில பை தொங்கியிருக்கு. உள்ளாற ரெண்டாயிரம் ரூவா இருக்கு. கருங்குளம் வரைக்கும் போய் வர்றேன்னுருக்கான். வரலை. மதியமாச்சு. ராத்திரியாச்சு."

"கருங்குளத்துக்கு எதுக்குப் போனான்?"

"தெரிலை. ஆள் விட்டுப் பாத்துட்டோம். அங்க வந்ததாவே தெரிலை."

சரஸ்வதி விசும்பினாள். பிள்ளைகள் மலங்க மலங்கப் பார்த்தன. இழவு விழுந்த வீடு மாதிரியான சூழல் நிரம்பிக் கிடந்தது. போலீஸ் கேஸ் கொடுக்கலாம் என்று முடிவாயிற்று. கேஸ் எழுதின ஏட்டுக்கு டீ குடிக்கக் கொடுத்ததிலிருந்து ஆரம்பித்தது. கருங்குளம் போய் வரப் பணம். சகலத்துக்கும் பணம். சண்முகம் கடை முன் நின்ற 'பைக்' போலீஸ் மேற்பார்வையில் வீட்டுக்கு வந்தது. செயினும், மோதிரமும் கூட. வந்த சில நாட்களிலேயே அவற்றை விற்று விடுகிற நிலைமையும் வந்தது.

**நா**ளாக ஆக, உறவினர்களின் கூட்டம் மறைய ஆரம்பித்தது.



அதற்குப் பிறகே, வாழ்க்கையின் கோரம் சரஸ்வதிக்குப் பிடிபடத் துவங்கிற்று. பசியோடு இரண்டு வயிறுகள். ஆதரவற்ற மாமியார். குறைந்து விட்ட பணம். முற்றாய் மறையப் போகிற பணம். ஸ்கூல் பீஸ் பயமுறுத்த, தனியார்ப் பள்ளியிலிருந்து அரசுப் பள்ளிக்குப் பிள்ளைகள் மாறினார்கள். சத்துணவு சாப்பிட்டார்கள். சங்கரன் இருந்த வரை, எடுப்புச் சாப்பாடுதான்.

சங்கரன், பாங்க் ஆபீசர் அல்ல. கிளார்க் தான் என்றாலும், வட்டி சங்கதி அதிகம். ஆபீசர்களே அவன் மூலமாய் வட்டிக்கு விட்டது, கதிரேசனுக்குத் தெரியும். அதுவே அவனுக்கு எமனாகி இருக்கக் கூடுமோ என்கிற சந்தேகம் அவனுக்கு இருந்தது. என்றாலும், அவன் சண்முகம் கடையில் கொடுத்த நகையும், வண்டியில் விட்டுப் போன ரூபாயும் எதற்காக என்கிற கேள்வி எஞ்சியே நின்றது. போலீஸை மிகவும் குழப்ப வைத்தது இந்த விஷயம்தான்.

**ப**ஸ் ஒரு நிறுத்தத்தில் நின்றதுமே, கூட்டம் கொஞ்சம் இறங்கிற்று. இப்போது, வசதியாக நிற்கிற அளவுக்கு இடம் கிடைத்தது. கதிரேசனும் மேலேறிக் கொண்டான். "பத்தரை ஆயிரும் போச" என்றான், சரஸ்வதியைப் பார்த்து.

ஒவ்வொரு முறையும், எங்கேயாவது 'பாடி' கிடக்கும் போதும், போலீஸ் ஸ்டேஷனிலிருந்து அழைப்பு வரும். முதல் முறை, சரஸ்வதியின் இதயம் வெடித்துப் போனது. ஆட்டோவில், சேலையால் வாயை மூடி, ஈனஸ்வரத்தில் அழுதபடியே வருவாள். அந்த 'பாடி', சங்கரன் அல்ல என்று தெரிந்த பிறகும், அவள் அழுவதை நிறுத்தாதது, முதலில் ஆச்சர்யமாக இருந்தது. வரவர, 'பாடியைப் பாக்கணுமாம்' என்று அவள் சொல்ல ஆரம்பித்து விட்டாள். மனசு இறுகி இறுகிக் கல்லானதோ என்று தோன்றும் இவனுக்கு. சங்கரன் இறந்திருக்க மாட்டான் என்கிற நம்பிக்கையாகவும் இருக்கலாம் என்று சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று.

"கொடுமைல, பெரிதான கொடுமை இது தான்னு நெனைக்கறேன் சார். அத்தைல்லாம் தாங்கிகிருவாங்களான்னு தெரிலை. முகத்தைப் பார்க்கிற வரை மனசுல இருக்குமே சார் துக்கம்..." சரஸ்வதியின் குரல் மங்கிற்று. "எங்க போனார்? எப்படிப் போனார்? தெரிஞ்சிட்டா கூடப் போரும்னு ஆயிருச்சுங்க. தினம் ஒரு பொணம் பாத்து, அங்கப்



பாத்தோம், இங்கப் பாத்தோம்னு கதை கேட்டு முடியலை சார்."

தலைகுனிந்து சரஸ்வதி அழுதாள். பக்கத்து பாசி கோர்க்கும் தொழிற்சாலைக்குப் போக ஆரம்பித்திருந்தாள் அப்போது. மாமியார்காரி, மனதின் வேதனையில் படுத்தாகியாச்சு. எத்தவிதத் தெம்புமில்லாமல், வாழ்க்கை, ஒரு நோஞ்சான் குருவி போலச் சிறகடித்தது. பாசிக் கோத்தது, அன்றாட வயிறுக்குக் காண்பது என்றாலும், பெரிதான பொருளாதார சீரமைப்பைக் கொண்டு வரவில்லை.

தனியார்ப் பள்ளியில் ஆங்கிலம் பேசின பிள்ளைகள், மாற்ற இரண்டே உடைகளுடன் அரசுப் பள்ளியில் படித்தது மனதின் ஓரம் வலியைத் தரவே செய்தது. இவளுக்கென்று மூன்று நூல் புடைவைகளும், மாமியார்காரிக்கு இரண்டுமான பிறகு, பீரோவையும் விற்று விடலாம் என்று தீர்மானித்தாள். விற்ற ஒரு வாரத்தில், பீரோ விற்றதை யார் மூலமாகவோ கேள்விப்பட்ட இவளது அண்ணன், "நானே கூட இருநூறு முந்நூறு போட்டு எடுத்திருப்பேன். ஏன் சொல்லவில்லை?" என்று கடிதமெழுதியிருந்தான். கதிரேசனிடம் கடிதத்தைக் காட்டி, சரஸ்வதி சிரித்தாள்.

"என்ன அக்கறை பாத்திங்களா?" முடிக்கும் போது, உதடு கோணி வார்த்தைகள் பிசிறின. கதிரேசன் மௌனமாக நின்றான்.

"எம் பிள்ளைங்க படிச்சு, பீரோ வாங்கும் சார். மாரியம்மா மேல ஆணை. படிக்க வப்பேன்."

"அழாதீங்க."

"இல்ல. அழுதிடணும். அழலைனா, செத்துருவேன் சார்."

"சங்கரன் வந்துருவான்."

"ப்ச். அவர் வேலையாவது கெடைச்சா நல்லது."

**அ**து தற்போது முடியாது என்பது

"கட்சியில நம்ம தலைவருக்கு கடுமையான எதிர்ப்பு உருவாகிட்டு வருதுன்னு நினைக்கறேன்."

"எப்படி தெரிஞ்சது உனக்கு?"

"தலைவரோட பிறந்தநாளுக்கு ஒரு தொண்டர் அடிச்ச நோட்டீஸில் 'வாழ்த்த வயதில்லை..'ன்னு போடறதுக்கு பதிலா 'வாழ்த்த மனதில்லை...'ன்னு போட்டிருக்காரே!"

– பாஸா

தெளிவாகத் தெரிந்து போனது. ஏழு வருடங்களுக்கு அப்பால், சங்கரன், என்கிற நபர் உலகில் இல்லை என்று போலீஸ் ஃபைலை மூடின பிறகே, வேலை கிடைப்பது சாத்தியம். ஏழு ஆண்டுகள், வேதனைகளும் வலிகளும் துயரங்களுமாய் ஓடத்தான் செய்தன. போன வாரம், சங்கரன் இறந்திருக்கக் கூடும் என்று போலீஸ் தீர்மானித்து ஃபைலை மூடியது. பேங்க் அவளுக்குக் கிளார்க் வேலையும், கூடவே சங்கரனுக்கான க்ராஜுவிடித் தொகை என சகலத்தையும் தரத் தயாராக இருந்தது. அது சரஸ்வதியின் பெரிய பலம் என்று கதிரேசன் நம்பினான்.

தூத்துக்குடியில் மேனேஜரின் வீடு இருந்தது. ஞாயிற்றுக்கிழமை, சாத்துக்குடியும், அரைக் கிலோ திராட்சையும் வாங்கிக் கொண்டு, கதிரேசனும் சரஸ்வதியும் போனார்கள்.

"இப்படி வரணும்னு தேவை இல்லையேம்மா. ஆட்டமாட்டிக்கா, வேலை உங்களுக்குத்தான்."

"அதான் நன்றி சொல்லணும்னு... ஏழு வருஷமா பட்ட அவஸ்தை கொஞ்ச நஞ்சமில்லை சார். கதிரேசன் சார் மட்டும் தைரியம் சொல்லாட்டி, நின்னிருக்க மாட்டேன்." ஓரக்கண்ணால் இவனை நன்றியோடு பார்த்தாள்.

"பிள்ளைங்க என்ன படிக்கு?"

"மூத்தவன் எட்டாவது போறான். சின்னவன் ஆறாவது."

"த்சொ" என்று திராட்சையை வாயில் எடுத்துப் போட்டுக் கொண்டார் மேனேஜர்.

"அவர் பணம்ல்லாம் சிக்கிரம் வந்துட்டா உதவியாயிரும்."

"கவலைப்படாதிங்க. போயிட்டு வாங்க."

வெளியே வரும்போது, அவர் தங்களை உட்காரச் சொல்லியிருக்கலாம் என்று கதிரேசனுக்குத் தோன்றிற்று. என்றாலும், சரஸ்வதியின் முகம் தெளிவாயிருந்தது போலத் தோன்றிற்று. எந்த திசை என்று அறியாது தவிக்கும் பறவை, ஏதாவது ஒரு திசை நோக்கிப் பயணிக்க இருக்கும் நம்பிக்கை வெளிப்பட்டது. எதிர்காலம், இருட்டின் நிழலல்ல எனகிற நிச்சயம் தொனிக்கிற மனோபாவம் அது.

திருநெல்வேலி வந்து சேர, பத்தரை ஆகி விட்டது. பஸ்ஸை விட்டு இறங்கின பிறகே, பசி கூக்குரலிட்டது. ரோட்டோர இட்லிக் கடைகளும், பரோட்டா கடைகளும் வெகு மும்முரமாயிருந்தன. "சாப்பிடலாமா?" என்றான் இவன். அவளுக்கும் பசித்திருக்க வேண்டும். சரி என்பது போலத் தலையசைத்து விட்டு உட்கார்ந்தாள். மிக்க பசியோடு, வேக வேகமாக இட்லியை சாம்பாரில் தோய்த்து விழுங்கினாள். கைக் கழுவி விட்டு,

"அத்தைக்கும் பசங்களுக்கும் வாங்கிக்கலாமா?" என்றாள். இவன் பரோட்டா மூன்று பார்சல் வாங்கினான். வீட்டில் சாப்பாடு செய்து வைத்திருக்க மாட்டாள் என்று தோன்றிற்று.

வீடு வரை எதுவும் பேசாமல் நடந்தார்கள். கதவைத் தட்டினதும், அத்தை திறந்தாள். பிள்ளைகள் கால் அகட்டி, வாய் பிளந்து தூங்கிக் கொண்டிருந்தார்கள்.

"சாப்டாங்களா?"

"காலை நீ வடிச்ச சோறு கொஞ்சோல இருந்துச்சு. தின்னுச்சதுங்க... ஏதோ." அத்தை பெருமூச்சு விட்டாள். "தர்றேனுட்டாரா?"

"ம். பிரச்னையில்லை. சாப்பிடுங்க. பரோட்டா வாங்கிட்டு வந்தோம்."

பொட்டலத்தைப் பிரித்து, அத்தை முன் வைத்தாள். அத்தையின் உடல் முழுவதுமாக நடுங்கிற்று. எதுவும் சொல்லாமல், பேப்பரினுள் சுருண்ட இலை மீதிருந்த பரோட்டாவை வெறித்தாள்.

"எப்படியாச்சும், என்னைக்காச்சும் வந்துருவான்னு நம்பினேனே. நீ தூத்துக்குடி லருந்து வர்றதுக்குள்ள அந்த மாரியம்மா இட்டாந்துருவானு நம்பினேனே. கதவ அவன்தான் தட்டுறான்னு திறந்தேனே. போச்சே. எல்லாம் செத்துப் போச்சே."

அத்தை பெருங்குரலெடுத்து அழுதாள். கதிரேசன் நிமிர்ந்து பார்த்தான். சரஸ்வதி ஸ்தம்பித்து நின்றிருந்தாள். சுவரோரம், பிள்ளைகளுக்காக எஞ்சின பரோட்டாப் பொட்டலங்கள் பிரிக்கப்படாமல் இருந்தன. ●



அ
பலவித அளவுகள்
மற்றும் வண்ணங்களில்
திர்ஷ்டம்
வருகிறது.
உங்கள் வாழ்க்கைக்கு
சிறந்தவற்றை தேர்ந்தெடுங்கள்.
அந்தந்த ராசிகளில் பிறந்தவர்கள் அந்தந்த அதிர்ஷ்ட கற்களை அணிந்து கொண்டால் இல்லற வாழ்வில் செல்வம், ஆரோக்கியம், மகிழ்ச்சி, வெற்றி உண்டாகும். எனவே உங்களுக்கு பொருத்தமான அதிர்ஷ்ட கற்களை எங்களது ஷோரூமில் நியமிக்கப்பட்டிருக்கும் ஜோதிடரின்* இலவச ஆலோசனையின் பேரில் தேர்ந்தெடுக்கலாம். சுபிட்சமான வாழ்க்கையை அமைத்திட
வருகை தாருங்கள் DGHக்கு
DGH
எண்ணற்ற வகைகள்,
பிரத்தியேக கவனிப்பு.




நீங்கள் விரும்பும்
ஆந்திரா சுவை ஊறுகாய்
150 கிராம் பாட்டில்களில்
BHIMA
TOMATO PICKLE
CUT MANGO PICKLE
GARLIC PICKLE
BHIMA
RUCHI AGRO PRODUCTS PVT. LTD.,
1, Vijayaragava Road, 1st Street,
Chennai - 600 017.




## பதினைந்தாம் அத்தியாயம்

உதய சூரியனுடைய செங்கதிர்கள் வந்தியத்தேவனுடைய முகத்தில் சுளீர் என்று பட்டு அவனைத் துயிலெழுப்பி விட்டன. உறக்கம் தெளிந்ததும் எழுந்திருக்க அவனுக்கு மனம் வரவில்லை. கண்ணை விழித்துப் பார்த்தான். சற்றுத் தூரத்தில் பயங்கர ரூபமுள்ள இரண்டு சாமியார்கள் வந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய திரித்து விட்ட சடை, ஒரு கையில் பிடித்த திரிசூலம், இன்னொரு கையில் அக்கினிக் குண்டம் இவற்றிலிருந்து அவ்விருவரும் காலாமுக வீரசைவர்கள் என்பதை வந்தியத்தேவன் அறிந்து கொண்டான். இவர்களுடன் வாதப் போர் செய்வதற்கு ஆழ்வார்க்கடியான் இங்கு இல்லையே என்ற எண்ணம் அவனுக்கு உண்டாயிற்று. அந்தக் காலாமுகச் சாமியார்கள் போகும் வரையில் கண்ணை மூடிக்கொண்டு தூங்குவது போல் பாசாங்கு செய்வதென்று தீர்மானித்தான்.

அவர்கள் அவன் பக்கத்தில் வந்து நிற்பதாக அவன் உணர்ந்தபோதும் கண்களைத் திறக்கவில்லை. அவர்களில் ஒருவர் அருகில் வந்து கனைத்த போதும் அவன் கண்ணை விழித்துப் பார்க்கவில்லை.

**அமரர் கல்கி**




கல்கி கலெக்ஷன்

"சிவோஹம்! பையன் நல்ல கும்பகர்ணனாயிருக்கிறான்" என்றார் ஒருவர்.

"சிவோஹம்! இவனைப் போல் ஒரு வாலிபப் பிள்ளை நமக்குக் கிடைத்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்?'' என்று சொன்னார் இன்னொரு சாமியார்.

''சிவோஹம்! ஆளைப் பார்த்து, முகம் களையாயிருக்கிறதே என்று சொல்லுகிறாய்! இவனால் நமக்குப் பயன் ஒன்றுமில்லை. வெகு சீக்கிரத்தில் இவனுக்கு ஒரு பெரிய ஆபத்து வரப் போகிறது!'' என்றார் முதல் வீர சைவர்.

மேலும் தூங்குவதுபோல் பாசாங்கு செய்ய, மூச்சுவிட முடியாமல் திணறும் உணர்ச்சி வந்தியத்தேவனுக்கு உண்டாயிற்று. எனினும் அச்சமயம் விழித்தெழுந்தால் தன் பாசாங்கு வெளியாகிவிடும். மேலே அவர்கள் ஏதாவது பேசுவதைக் கேட்க முடியாமலும் போய்விடும். தனக்கு என்ன பெரிய ஆபத்து வரப் போகிறது என்பதையும் இவர்கள் ஒருவேளை சொல்லலாம் அல்லவா...?

ஆனால் அவன் எண்ணிய எண்ணம் நிறைவேறவில்லை.

"சிவோஹம்! அவனவனுடைய தலையெழுத்து! நீ வா போகலாம்!'' என்று ஒரு வீர சைவர் கூற, இருவரும் அங்கிருந்து நகர்ந்து சென்றார்கள்.

அவர்கள் சற்றுத் தூரம் போவதற்கு அவகாசம் கொடுத்துவிட்டு வந்தியத்தேவன் எழுந்தான். ''சீக்கிரத்தில் இவனுக்குப் பெரிய ஆபத்து வரப் போகிறது!'' என்ற வார்த்தைகள் அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்தன.

பழைய காபாலிகர்களின் பரம்பரையில் வந்தவர்கள் காலாமுகர்கள். காபாலிகர்களைப் போல் அவர்கள் நரபலி கொடுப்பதில்லை. மற்றபடி காபாலிகர்களின் பழக்க வழக்கங்களை அவர்கள் பின்பற்றி வந்தார்கள். அவர்கள் மயானத்தில் அமர்ந்து கோரமான தவங்களைச் செய்து வருங்கால நிகழ்ச்சிகளை அறியும் சக்தி பெற்றிருந்ததாகப் பலர் நம்பினார்கள். சாபங் கொடுக்கும் சக்தி அவர்களுக்கு உண்டு என்றும் பாமர ஜனங்கள் எண்ணினார்கள். ஆகையால் காலாமுக சைவர்களின் கோபத்துக்கு ஆளாகாதவண்ணம் அவர்களுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்யப் பலர் ஆயத்தமாயிருந்தனர். சிற்றரசர்கள் பலர் ஆலயங்களில் காலாமுகர்களுக்கு வழக்கமாக அன்னமளிப்பதற்கு நிவந்தங்கள் விட்டிருந்தனர். இதுவரையில் சோழ மன்னர் பரம்பரையைச் சேர்ந்த அரசர்கள் மட்டும் காலாமுகர்களுக்கு எவ்வித ஆதரவும் காட்டவில்லை.

இந்த விவரங்களையெல்லாம் அறிந்திருந்த வந்தியத்தேவன், "அவர்கள் ஏதாவது உளறிக்கொண்டு போகட்டும். இதுவரையில் நேராத ஆபத்து நமக்குப் புதிதாக என்ன வந்து விடப் போகிறது?'' என்று எண்ணித் தன்னைத் தானே தைரியப்படுத்திக்கொண்டான். ஆயினும் வருங்காலத்தைப் பற்றி அறிந்து கொள்ளும் ஆசை அவன் மனத்தை விட்டு அடியோடு அகன்று விடவில்லை.

வந்தியத்தேவன் எழுந்து நின்று பார்த்தபோது அந்தக் காலாமுகர்கள் சற்றுத் தூரத்தில் ஒரு பழைய மண்டபத்தின் அருகில் போய்க் கொண்டிருப்பதைக் கண்டான். மண்டபத்துக்கு அருகில் செயற்கைக் குன்றம் ஒன்று காணப்பட்டது. அதில் ஒரு குகை சிங்க முகத்துடன் வாயைப் பிளந்து கொண்டிருந்தது. பழைய நாட்களில் திகம்பர ஜைனர்கள் கட்டிக் கொண்டிருந்த அந்தக் குகைகளைக் காலாமுகர்கள் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கே சென்று அவர்களுடன் சிறிது பேச்சுக் கொடுத்துப் பார்க்க வேண்டும் என்ற ஆவல் வந்தியத்தேவனுக்கு உண்டாயிற்று. குதிரையைக் கட்டியிருந்த இடத்திலேயே விட்டு விட்டுச் செய்குன்றை நோக்கிப் போனான். மண்



டபத்தை நெருங்கிய போது காலாமுகர்கள் குகையின் மறுபக்கத்தில் நின்று பேசியது அவன் காதில் லேசாக விழுந்தது.

''அந்தப் பையன் பொய்த் தூக்கம் தூங்கவில்லை. உண்மையாகவேதான் தூங்கியிருக்க வேண்டும்'' என்று சொன்னார் ஒருவர்.

"அது எப்படி நிச்சயமாய்ச் சொல்கிறாய்?'' என்றான் இன்னொருவன்.

''அபாயம் வரப் போகிறது என்ற வார்த்தைகளைக் கேட்டபிறகு, அதைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பாத மனிதன் யாரையும் நான் இதுவரை கண்டதில்லை.''

''பையன் நல்ல தீரனாகத் தோன்றுகிறான். அவனை நம்மோடு சேர்த்துக்கொண்டால் நன்றாய்த்தான் இருக்கும். நீ என்ன சொல்லுகிறாய்?''

"இவனைப் போன்ற வாலிபர்கள் எதற்காக? இன்னும் கொஞ்ச நாட்களில் இந்தச் சோழ நாட்டின் சிம்மாதனம் ஏறப் போகிறவனே காலாமுகத்தைச் சேரப் போகிறான்...''

''யாரைச் சொல்லுகிறாய்?''

''வேறு யாரை?

மதுராந்தகத் தேவனைத்தான் சொல்லுகிறேன்! இதுகூட உனக்குத் தெரியவில்லையா?''

"அது எப்படி? மற்ற இரண்டு பேர்?"

"ஒருவன்தான் கடலில் முழுகி இறந்து விட்டானாம். இன்னொருவனுடைய காலம் குறுகிக் கொண்டிருக்கிறது..."

வந்தியத்தேவன் அதற்கு மேல் அந்தக் காலாமுகச் சாமியார்களின் பேச்சைக் கேட்கச் சிறிதும் விரும்பவில்லை. அவர்களுடன் பேச்சுக் கொடுக்கவும் எண்ணவில்லை.

விரைவிலே பழையாறையை அடைந்து இளவரசியிடம் செய்தியைச் சொல்லிவிட்டுக் காஞ்சிக்குப் போக விரும்பினான். எல்லாருக்கும் மேலாகத் தான் அதிகம் கடமைப்பட்டிருப்பது ஆதித்த கரிகாலருக்கு அல்லவா? அவரை எத்தனையோ வித அபாயங்கள் சூழ்ந்திருப்பது உண்மை. பார்த்திபேந்திரன் கூடப் பழுவூர் ராணியின் மாயவலையில் விழுந்து விட்டான். எந்தக் காரியத்திலும் படபடப்புடன் இறங்கக் கூடியவரான ஆதித்த கரிகாலர் எப்போது எந்தவித அபாயத்துக்கு உள்ளாவாரோ, தெரியாது. அவரிடம் சென்று அவரைக் காத்து நிற்பது தன் முதன்மையான கடமை. வழியில் வீண் பொழுது போக்குவது பெருங் குற்றம். இந்தக் கணமே சென்று விட வேண்டும்.

வந்தியத்தேவன் சத்தமில்லாமல் திரும்பிச் சென்று குதிரை மீது ஏறிக் கொண்டான். குதிரையை வேகமாகத் தட்டி விட்டான். காலாமுகர்களின் குகையோரமாகச் சென்றபோது அவர்கள் தன்னை வெறித்து நோக்குவதைக் கண்டான். ஒருமுகம் அவன் எப்போதோ பார்த்தமுகம் போலத் தோன்றியது. ஆனால் நின்று பார்க்க விருப்பமின்றி மேலே சென்றான்.

வழியில் ஜன நெருக்கமான பல கிராமங்களை அவன் பார்த்தான். அங்கேயெல்லாம் இளவரசர் கடலில் மூழ்கியது பற்றிய செய்தி இன்னும் பரவவில்லையென்று தெரிந்தது. ஏனெனில் ஜனங்கள் சாவதானமாக அவரவர்கள் வேலையில் ஈடுபட்டிருந்தார்கள். அதுவரையில் நல்லதுதான். இளவரசரைப் பற்றிய செய்தி பழையாறையை அடைவதற்குள் நான் அங்கே போய்ச் சேர்ந்துவிட வேண்டும். இளையபிராட்டியிடம் உண்மையை அறிவித்து விட வேண்டும். குந்தவை தேவியின் காதில் வேறுவிதமான செய்தி விழுந்தால் ஏதாவது விபரீதம் நேரிட்டு விடலாம் அல்லவா? இளைய பிராட்டியாவது நம்புவதற்குத் தயங்கலாம். அந்தக் கொடும்பாளூர் இளவரசி உயிரையே விட்டாலும் விட்டு விடுவாள்...! இந்த எண்ணம் வந்தியத்தேவனுக்கு மிக்க பரபரப்பை உண்டாக்கிற்று. ஆனால் அவனுடைய அவசரம் குதிரைக்குத் தெரியவில்லை. கால்களில் புதிதாக லாடம் அடிக்கப்பட்டிருந்த அக்குதிரை வழக்கமான வேகத்துடனே கூட ஓட முடியாமல் தத்தளித்தது. கடைசியாகப் பிற்பகலில் சூரியன் அஸ்தமிப்பதற்கு இரண்டு நாழிகை இருந்தபோதுதான் பழையாறைக் கோட்டையின் பெரிய சுவர் அவனுக்குப் புலப்பட்டது.

அதோ கோட்டை வாசல் துர்க்கையின் கோவில் தெரிகிறது. கோட்டைக்குள் எப்படிப் பிரவேசிக்கிறது என்பதைப் பற்றி எத்தனையோ யோசனைகள் அவன் உள்ளத்தில் மின்னல் வேகத்தில் படையெடுத்து வந்தன. ஆனால் ஒன்றும் காரிய சாத்தியமாகத் தோன்றவில்லை. பனை முத்திரை மோதிரமோ இங்கே பயன் படாது. ஏனெனில், அந்த மோதிரத்துடன் வருவான் என்பது முன்னமே கோட்டைக் காவலர்களுக்கு எச்சரிக்கை செய்யப்பட்டிருந்தது. இப்போது மோதிரத்தைப் பார்த்ததும் வேறு விசாரணையின்றிச் சிறைப்படுத்தி விடுவார்கள். சின்னப்

பழுவேட்டரையரிடம் அவனை அனுப்பி விடுவார்கள். இளையபிராட்டி குந்தவை தேவியைப் பார்ப்பதற்கு முன்னால் அவ்விதம் அகப்பட்டுக் கொள்ள அவன் சிறிதும் விரும்பவில்லை.

யோசனை செய்தவண்ணம் குதிரையின் வேகத்தை அவன் குறைத்துக் கொண்டு கோட்டை வாசலை நெருங்கியபோது மற்றொரு திசையிலிருந்து ஒரு கூட்டம் வருவதைக் கண்டான். வேல் பிடித்த வீரர்கள், விருது



களைச் சுமந்தவர்கள், குதிரைகள் மேல் ஏறி வந்தவர்கள், – இவ்வளவு பேருக்கும் நடுவில் தாமரைப் பூ வடிவமாக, அமைந்த ஒரு தங்க ரதம். ஆஹா! அந்த ரதத்தில் வீற்றிருப்பது யார்? இளவரசர் மதுராந்தகத் தேவர் அல்லவா? கடம்பூர் அரண்மனையிலும் தஞ்சாவூர்ப் பொக்கிஷ நிலவறையிலும் பார்த்த அதே இளவரசர்தான்! – கோட்டைக்குள் பிரவேசிப்பதற்கு யுக்தி என்னவென்பது உடனே வந்தியத்தேவன் மனத்தில் தோன்றி அவனுக்கு உணர்ச்சி யூட்டி விட்டது.

"ஆபத்து வரப் போகிறது என்ற வார்த்தை காதில் விழுந்தால் அதைப் பற்றி அறிந்துகொள்ள விரும்பாதவனை இதுவரை நான் பார்த்ததில்லை." – இவ்விதம் காலாமுகர்களில் ஒருவர் கூறிய வார்த்தைகள் அவன் மனத்தில் பதிந்தன. அவனே அந்த ஆவலுக்கு இடங் கொடுத்து விட்டான் அல்லவா? அந்தக் காலாமுகரின் யுக்தியை இங்கே கையாண்டு பார்க்க வேண்டியதுதான்.

தாமரை மலரின் வடிவமான தங்க ரதத்தை நோக்கி வந்தியத்தேவன் களைப்படைந்திருந்த தன் குதிரையை வேகமாகச் செலுத்தினான்.

மதுராந்தகத் தேவருடைய பரிவாரங்களில் யாரும், அவ்விதம் ஒருவன் செய்யக் கூடும் என்று எதிர்பார்க்கவில்லை. ஆகையால் அவனை யாரும் தடுக்க முன் வருவதற்குள் குதிரை ரதத்தின் சமீபத்தை அடைந்து விட்டது. அந்தச் சமயத்தில் வந்தியத்தேவன் குதிரை மீது எழுந்து நின்றான். ரதத்தில் வீற்றிருந்த மதுராந்தகரை உற்றுப் பார்த்தான். பார்த்துவிட்டு "ஓ! அபாயம்!" என்று ஒரு குரலைக் கிளப்பினான். உடனே தடால் என்று குதிரை மீதிருந்து தரையில் விழுந்து உருண்டான். குதிரை சில அடி தூரம் அப்பால் சென்று நின்றது.

இவ்வளவும் சில வினாடி நேரத்தில் நடந்து விட்டது. மதுராந்தகத் தேவரின் பரிவாரத்தைச் சேர்ந்த சிலர் அவனுடைய குதிரை ரதத்தை நோக்கிப் போவதைக் கண்டு அவசரமாகக் கத்தியை உறையிலிருந்து எடுத்தார்கள். சிலர் வேலை எறிவதற்குக் குறி பார்த்தார்கள். அதற்குள் அவன் குதிரை மேல் நிற்க முயன்று கீழேயும் விழுந்து விட்டபடியால் அவர்களுடைய கவலை நீங்கியது.

பிறகு கீழே விழுந்தவனைப் பார்த்து எல்லோரும் சிரித்தார்கள். மதுராந்தகரும் சிரித்தார். அதற்குள் ரதம் நிறுத்தப்பட்டிருந்தது. அவர் கையைக் காட்டிச் சமிக்ஞை செய்யவே, வீரர்கள் இருவர் வந்தியத்தேவன் அருகில் சென்று அவனைத் தூக்குவதற்குச் சென்றார்கள். அதற்குள் அவனே எழுந்து உட்கார்ந்திருந்தான். வீரர்களுடைய உதவியில்லாமல் குதித்து எழுந்து நின்றான். தான் விழுந்தது பற்றிச் சிறிதும் கவனியாதது போல் இளவரசர் மதுராந்தகரையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"அவனை இப்படி அருகில் கொண்டு வாருங்கள்!" என்றார் இளவரசர்.

வீரர் இருவரும் வந்தியத்தேவனைக் கையைப் பிடித்து அழைத்துச் சென்று ரதத்தின் பக்கத்தில் நிறுத்தினார்கள். இன்னமும் அவனுடைய கண்கள் மதுராந்தகர் முகத்தின் பேரிலேயே இருந்தது.

"அப்பனே! நீ யார்?" என்ற இளவரசர் கேட்டார்.

"நான்... நான்தான்! சக்கரவர்த்திப் பெருமானே! என்னைத் தெரியவில்லையா?" என்றான் வந்தியத்தேவன்.

"என்ன உளறுகிறாய்...? அடே! நீங்கள் சற்று விலகி நில்லுங்கள்!" என்றார் மதுராந்தகர் மற்ற வீரர்களைப் பார்த்து. வீரர்கள் விலகினார்கள்.

"என்னை யார் என்று எண்ணிக் கொண்டாய்?" என்று மறுபடியும் மதுராந்தகர் கேட்டார்.

"மன்னிக்க வேண்டும், இளவரசே! தவறாகச் சொல்லி விட்டேன். தாங்கள் இன்னும்... இன்னும்..." என்று தட்டுத் தடுமாறிப் பேசினான்.

"இதற்கு முன் எப்பொழுதாவது

என்னை நீ பார்த்திருக்கிறாயா?"

"பார்த்திருக்கிறேன்... இல்லை; பார்த்ததில்லை..."

"என்னைப் பார்த்திருக்கிறாயா? இல்லையா? உண்மையைச் சொல்!"

"நேற்றிலிருந்து நான் உண்மையைச் சொல்வதென்று வைத்திருக்கிறேன். அதனால்தான், நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை!"

"ஓகோ! நேற்று முதல் நீ உண்மை பேசுகிறவனா? நல்ல வேடிக்கை!" என்று மதுராந்தகர் சிரித்தார்.

"அதனால் நிச்சயமாய்ச் சொல்ல முடியாமற் போவானேன்?" என்று மறுபடியும் கேட்டார் மதுராந்தகர்.

"இந்தக் காலத்தில் எதைத்தான் நிச்சயமாய்ச் சொல்ல முடிகிறது? ஒருவரைப் போல் இன்னொருவர் இருக்கிறார். ஒருநாள் மூடு பல்லக்கில் இருந்தவர் இன்னொரு நாள் ரதத்தில் இருக்கிறார்..."

"என்ன சொன்னாய்?" என்று மதுராந்தகர் சிறிது திடுக்கிட்ட குரலில் வினவினார்.

"ஒருவரைப் போல் இன்னொருவர் இருப்பதால் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை என்றேன்!"

"நான் யாரைப் போல இருக்கிறேன்?"

"இரண்டு தடவை தங்களை நான் பார்ந்திருக்கிறேன். அல்லது தங்களைப் போன்றவரைப் பார்த்திருக்கிறேன். தாங்கள், தாங்கள்தானா அதாவது நான் பார்த்தவர்தானா என்று சந்தேகமாயிருந்தது. அதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்... சற்று முன்..."

"குதிரை மேல் ஏறி நின்று அப்படி உற்றுப் பார்த்தாயா?"

"ஆம், ஐயா!"

"என்ன தெரிந்து கொண்டாய்?"

"தாங்கள் நான் பார்த்தவராகவும் இருக்கலாம். இல்லாமலுமிருக்கலாம் என்று தெரிந்து கொண்டேன்."

மதுராந்தகருக்குக் கோபம் உண்டாகத் தொடங்கியதென்பது அவருடைய முகத்திலிருந்தும் குரலின் தொனியிலிருந்தும் தெரிந்தது.

"நீ சுத்தப் போக்கிரி. உன்னை..."

"இளவரசே! கோபிக்க வேண்டாம். நான் தங்களையோ, தங்களைப் போன்றவரையோ பார்த்தது எங்கே என்று சொல்கிறேன். பிறகு, தாங்களே தீர்மானித்துக் கொள்ளலாம்."

"அப்படியானால் சொல், சீக்கிரம்!"

"ஒரு பெரிய கோட்டை. நாலாபுறமும் நெடிய மதில் சுவர். வீராதி வீரர்கள் பலர் அங்கே கூடியிருந்தார்கள். 'நடு ராத்திரி. சுவரில் மாட்டிய பெரிய அகல் விளக்கிலிருந்து புகையினால் மங்கிய வெளிச்சத்தில், அவர்கள் ஆத்திரமாகப் பேசிக் கொண்டிருந்தார்கள். சுவர் ஓரமாக ஒரு பல்லக்கு இருந்தது. அந்த வீரர்களின் தலைவரை மற்றவர்கள் ஏதோ கேள்வி மேல் கேள்வியாகக் கேட்டார்கள். அவருக்குக் கோபம் வந்து விட்டது. வேகமாக எழுந்து போய்ப் பல்லக்கின் அருகில் நின்றார். பல்லக்கை மூடியிருந்த பட்டுத் திரையை விலக்கினார். பல்லக்கின் உள்ளேயிருந்து ஒரு சுந்தர புருஷர் வெளியே வந்தார். அவரைப் பார்த்ததும் அங்கே கூடியிருந்த வீரர்கள் அனைவரும் "வாழ்க! வாழ்க!" என்று கோஷித்தார்கள். 'பட்டத்து இளவரசர் வாழ்க!' என்றும் சிலர் கூவினார்கள். 'சக்கரவர்த்திக்கு ஜே!' என்று கோஷித்தாகவும் ஞாபகம். ஐயா! அப்போது பல்லக்கிலிருந்து வெளி வந்தவருடைய முகம் தங்கள் முகம் போலத்தான் இருந்தது. ஏதாவது நான் தவறாகச் சொல்லியிருந்தால் தயவு செய்து மன்னிக்க வேண்டும்."

நடுவில் குறுக்கிடாமல் இத்தனை நேரம் கேட்டுக் கொண்டிருந்த மதுராந்தகத் தேவருடைய நெற்றியில் வியர்வை துளிக்கலாயிற்று. அவருடைய முகத்தில் பயத்தின் சாயை படர்ந்தது.


"நேற்று முதல் உண்மை சொல்லுகிறவனே! அந்த வீரர்களின் கூட்டத்தில்

நீ இருந்தாயா?'' என்று கேட்டார்.

"இல்லை, ஐயா! சத்தியமாக இல்லை."

"பின் எப்படிக் கூட இருந்து பார்த்தது போலச் சொல்கிறாய்?" -

"நான் கண்ட காட்சி உண்மையாக நடந்ததா அல்லது கனவிலே கண்டதா என்று எனக்கே நிச்சயமாகத் தெரியவில்லை. இன்னொரு காட்சியையும் கேளுங்கள். இருள் அடர்ந்த ஒரு நிலவறை. அதில் ஒரு சுரங்கப் பாதை. வளைந்து வளைந்து கீழே இறங்கி மேலே ஏறிப் போக வேண்டிய பாதை. அதன் வழியாக மூன்று பேர் வந்து கொண்டிருந்தார்கள். முன்னால் ஒருவன் தீவர்த்தி பிடித்துக் கொண்டு போனான். பின்னால் ஒருவன் காவல் புரிந்துகொண்டு வந்தான். நடுவில் ஒரு சுந்தர புருஷர் - வடிவத்தில் மன் மதனையொத்த ராஜகுமாரர் - வந்து கொண்டிருந்தார். தீவர்த்தியின் வெளிச்சம் அந்த நிலவறையின் மூலை முடுக்குகளில் பரவியபோது, அங்கேயெல்லாம் பொன்னும், மணியும் வைடூரியங்களும் ஜொலிப்




பது போலத் தோன்றியது. அது மன்னாதி மன்னர்களின் இரகசியப் பொக்கிஷங்களை வைக்கும் நிலவறையாக இருக்கலாம் என்று தோன்றியது. தூண்களில் கோரமான பூத வடிவங்கள் செதுக்கப்பட்டிருந்தன. அத்தகைய சுரங்க வழியில் வந்து கொண்டிருந்த மூன்று பேரிலே நடுவில் வந்த சுந்தரபுருஷரின் முகம் தங்கள் திருமுகம் போலிருந்தது. அது உண்மையா, இல்லையா என்பதைத் தாங்கள்தான் சொல்ல வேண்டும்..."

இளவரசர் மதுராந்தகர், "போதும்; நிறுத்து!" என்றார். அவருடைய குரலில்







பீதி தொனித்தது.

வந்தியத்தேவன் சும்மா இருந்தான்.

"நீ நிமித்தக்காரனா?"

"இல்லை, ஐயா! அது என் தொழில் இல்லை. ஆனால் நடந்ததையும் சொல்லுவேன்; இனிமேல் நடக்கப் போவதையும் சொல்லுவேன்."

மதுராந்தகர் சிறிது யோசித்து விட்டு "குதிரை மேல் நின்றபோது ஏதோ கத்தினாயே, அது என்ன?" என்று கேட்டார்.

"அபாயம் என்று கத்தினேன்."

"யாருக்கு அபாயம்?"

"தங்களுக்குத்தான்!"

"என்ன அபாயம்?"

"பல அபாயங்கள் தங்களைச் சூழ்ந்திருக்கின்றன. அது போலவே பெரும் பதவிகளும் காத்திருக்கின்றன. அவற்றைக் குறித்துச் சாவகாசமாகச் சொல்ல வேண்டும். என்னுடைய கத்தியைக் கூடத்தான் தங்கள் வீரர்கள் பிடுங்கிக்கொண்டு விட்டார்களே? தங்களுடன் என்னைக் கோட்டைக்குள் அழைத்துக்கொண்டு போனால்..."

"ஆகட்டும்; என்னுடன் வா! சாவகாசமாகப் பேசிக் கொள்ளலாம்!"

மதுராந்தகத் தேவர் தம்முடன் வந்த வீரர்களின் தலைவனைக் கை காட்டி அருகில் அழைத்தார். வந்தியத்தேவனைச் சுட்டிக்காட்டி அவனை அவர்களுடன் கோட்டைக்குள் அழைத்து வரும்படிக் கட்டளையிட்டார். அந்தக் கட்டளை அவ்வீரர் தலைவனுக்கு அவ்வளவு உற்சாகம் அளிக்கவில்லை. ஆயினும் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து வந்தியத்தேவனையும் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

சற்று நேரத்துக்கெல்லாம் பழையாறைக் கோட்டைக் கதவு திறந்தது.

மதுராந்தகத் தேவரும் அவருடைய பரிவாரங்களும் வந்தியத்தேவனும் கோட்டைக்குள் பிரவேசித்தார்கள்.

(தொடரும்)

ஒரு காலத்தில் நமது நாட்டில் கதர் என்பது உண்மையில் கதராயிருந்தது. அதாவது உண்மையான தேசபக்தர்களும் தியாகிகளும் அணியும் ஆடையாயிருந்தது. ஆனால் உண்மையான தேசபக்தர்களும் தியாகிகளும் எந்த நாட்டிலும் அவ்வளவாக நாற்சந்தியில் இறைந்து கிடக்க மாட்டார்கள் அல்லவா! அத்தகையவர்கள் கொஞ்சம் அருமையாகத்தான் இருப்பார்கள். அவர்களைக் கண்டுபிடிப்பதும் கஷ்டமாகத்தான் இருக்கும். அதோடு அவர்களுடைய பாங்கிக் கணக்கில் அவ்வளவாக மிச்சம் அதிகம் இருக்க முடியாது. பாங்கியில் அப்படிப்பட்டவர்களுக்குக் கடனும் கொடுக்க மாட்டார்கள். அவர்களுடைய வருமானம் மேற்படி மேற்படிதான் என்று சொல்ல வேண்டியதில்லை.

எனவே, கதர்த் தொழிலின் அபிவிருத்திக்கு அப்போதெல்லாம் பிரசாரம் அதிகம் தேவையாயிருந்தது. பொதுக் கூட்டங்களில் கதரின் மகிமையைப் பற்றித் தொண்டை வலிக்கப் பேச வேண்டியிருந்தது. கதரைப் பற்றிப் பாட்டுக்கள் பாட வேண்டியிருந்தது. வீதி வீதியாகச் சென்று கதர் விற்க வேண்டியதாயிருந்தது. ஏதோ சாதாரண ஜவுளிக் கடையாக்கும் என்று எண்ணிக் கதர்க் கடைக்குள் தப்பித் தவறி நுழைந்தவர்களின் தலையில் கூடுமான வரையில் கதரைக் கட்டி அனுப்ப வேண்டியிருந்தது.



• ஆர். பார்த்தசாரதி

எனவே, கதர் வஸ்திராலயங்களில் வேலை பார்ப்பவர்களுக்கு அந்த நாளில் வசீகர சக்தியும் பேச்சு சாமர்த்தியமும் ரொம்ப ரொம்ப வேண்டியிருந்தது. கடைக்குள்ளே வருகிறவர்களிடம் சிரிக்கச் சிரிக்கப் பேசி, பத்து ரூபாய்க்குக் கதர் வாங்க வந்தவர்களை ஐம்பது ரூபாய்க்கு வாங்கச் செய்யும் ஆற்றல் தேவையாயிருந்தது.

இப்படிப்பட்ட வசீகர சக்தியும் பேச்சு சாமர்த்தியமும் உள்ள கதர் வஸ்திராலய மானேஜர்கள் அந்த நாளில் தென்னாட்டில் இரண்டு பேர் இருந்தார்கள். அவர்களில் ஒருவர் ஸ்ரீ டி. சதாசிவம்; இன்னொருவர் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி பி.ஏ., பி.எல்.

பல வருஷங்களுக்கு முன்னால் ஒருநாள் சென்னைக் கதர் வஸ்திராலயத்துக்குப் போயிருந்தேன். புது மானேஜர் ஒருவர் வந்திருந்தார். எல்லாரிடமும் அவர் வெகு குஷியாகப் பேசிக் கொண்டிருந்தார்.

"இவர் யார்! நல்ல படிப்பாளியாகவும் அறிவாளியாகவும் காணப்படுகிறார்! அதோடு வந்தவர்களிடம் சுமுகமாகப் பேசுகிறார்!" என்று மனதில் எண்ணிக் கொண்டு, பிற்பாடு அவரைப் பற்றி விசாரித்தேன். 'அவர் பெயர் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி என்றும், பி.ஏ.பி.எல். பட்டம் பெற்றவர் என்றும் தெரிந்து கொண்டேன்.

பி.ஏ.பி.எல். பட்டம் பெற்றுக் கதர் விற்க வந்தாரே என்று நினைத்தபோது எனக்கே ஒரு மாதிரியாக இருந்தது. அவருடைய

# ஹாஸ்யச் சுரஸ்கம்

அமரர் கல்கி

பெற்றோர்களுக்கு எப்படி இருந்திருக்கும்? அவருடைய வாழ்க்கைத் துணைவிக்குந் தான் எப்படி இருந்திருக்கும்? அந்த சௌபாக்கியவதியைப் பேட்டி கண்டு, "என்ன இவரை இப்படி விட்டு விட்டுச் சும்மா இருக்கிறீர்களே!" என்று சொல்லலாம் என நினைத்தேன். ஆனால் அவருக்கு இன்னும் கலியாணமே ஆகவில்லையென்று தெரிந்தது.

இதற்கிடையில் ஒரு தமிழ் வாரப் பத்திரிகையில் தற்செயலாக ஒரு கட்டுரையைப் படித்தேன். முதல் நாலு வரி படித்ததும் ''இதென்ன பிரமாதமாயிருக்கிறதே?'' என்று நினைத்தேன். கட்டுரையில் அவ்வளவு நகைச்சுவை கொப்புளித்துக் கொண்டிருந்தது! என்னுடைய வழக்கப்படி, ''இதை எழுதியவர் யார்?'' என்று துப்பு விசாரித்தேன். இலேசில் தெரிந்து கொள்ள முடியவில்லை. துப்பறியும் நிபுணர்களை ஏவித்தான் கண்டுபிடிக்க வேண்டியிருந்தது. கடைசியில் அக்கட்டுரை எழுதியவர் ''நம்முடைய கதர் வஸ்திராலய மானேஜர் ஆர். பார்த்தசாரதி பி.ஏ., பி.எல்.தான்!'' என்று தெரிந்தது.

உடனே ஆசாமியைப் போய்ப் பார்த்து, "என்ன சுவாமி! ஆளுக்குள்ளே ஆள், அம்மாப்பேட்டை ஆளாயிருக்கிறீரே? இவ்வளவு உயர்ந்த எழுத்துத் திறமையை ஏன் இவ்வளவு இரகசியமாக ஒளித்து வைத்திருக்கிறீர்?'' என்று கேட்டேன்.

''எல்லாம் உங்களுக்குப் பயந்து கொண்டுதான். அது இருக்கட்டும். திவ்வியமான கதர், புத்தம் புதிய ஸ்டாக், திருப்பூரிலிருந்து நேரே ரயிலில் வந்து இறங்கியிருக்கிறது! நாலு முழம் என்றால், சரியாக நாலு முழம் நீளம், நாற்பத்தெட்டரை அங்குலம் அகலம். அளந்து வேணுமானால் காட்டுகிறேன். நல்ல கனமாயும், அழுத்தமாயும், பார்ப்பதற்கு அழகாயும், அணிவதற்கு மிருதுவாயும் இருக்கிறது. நாஸூக்கான கம்பிக் கரை; உங்களுக்கு ரொம்பப் பாந்தமாயிருக்கும். ஒரு பத்து ஜோடி தள்ளி வைக்கட்டுமா?'' என்றார் பார்த்தசாரதி.

''தள்ளுங்கள்; கழுத்தைப் பிடித்துத் தள்ளுங்கள்! ஆனால் நான் கேட்க வந்த விஷயம் வேறு. மேற்படி பத்திரிகையில் மேற்படி கட்டுரையை எழுதியது நீர் தானே?'' என்றேன்.

''ஆமாம்; நான்தான். அதற்காக ரொம்பவும் மன்னிக்க வேணும்.... நிற்க. முதல் தரமான ஷர்டிங் துணி வந்திருக்கிறது. கதர் உற்பத்தி ஆரம்பமானதிலிருந்து இவ்வளவு ஜோரான ஷர்டிங் துணி வந்ததே இல்லை. காந்தி மகாத்மா மட்டும் சட்டை போடாத விரதம் எடுத்துக் கொண்டிராவிட்டால் அவருக்கே அனுப்பியிருப்பேன். அடுத்தபடியாக என் மனதில் உங்களுடைய ஞாபகம்தான் வந்தது. எத்தனை பீஸ் எடுத்து வைக்கச் சொல்லட்டும்?''

மேற்படி சம்பவம் நடந்த சில காலத்துக்கெல்லாம் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதிக்கு நான் உண்மையாகவே 'நம்ம எடிட்டர்' ஆகிவிட்டேன். அவர் எனக்கு உதவி ஆசிரியரானார். அவரோ பி.ஏ.பி.எல்.; நானோ பட்டத்தின் எதிரி. ஆனாலும் அவர் எனக்கு உதவி ஆசிரியராயிருந்த காலத்தில் திருஷ்டி பரிகாரத்துக்காக ஒரு தடவையாவது என்னுடன் சண்டை பிடித்ததில்லை. சண்டை பிடிக்கலாமென்று மனதிலே கூட அவர் நினைத்ததில்லையென்று சர்வ நிச்சயமாய்ச் சொல்லுவேன். மனதுக்கு மனதே சாட்சியல்லவா? அவ்வளவு உத்தமமான குணம். குணத்தைப் போலவே வேலைத் திறமையும். எத்தனை தடவை அடித்து, திருத்தி, மாற்றி எழுதும்படி சொன்னாலும் அவர் சலிப்பதில்லை. ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி அந்தக் காலத்தில் எழுதிய "அரசியல் நிருபர் சரடு"களை அரசியல் இலக்கியம் என்றே சொல்ல வேண்டும். மற்றக் கட்டுரைகளும் அப்படியே.

புகழ்பெற்ற ஆங்கில ஆசிரியர் வோட்ஹவுஸின் ஆங்கில நடையில் உள்ள கொந்தளிக்கும் ஹாஸ்யம், தங்கு தடையில்லாத ஓட்டம், வாசகர்கள் எதிர் பாராத திருகுதாளங்கள், கொனஷ்டை வெடிகள் இவையெல்லாம் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதியின் தமிழ் நடையிலேயும் காணலாம்.

இதைக் கேளுங்கள்:- "ஜப்பானியப் படையெடுப்பைப் பற்றித் தென்னிந்தியாவில் பரபரப்பு ஒன்று ஏற்பட்டதல்லவா? அப்போது பட்டணத்து ஜனங்கள் அவசரமாகத் தங்கள் கிராமங்களை நினைத்து வெளியேறிக் கொண்டிருந்தார்கள். வழக்கம் போல் நான் சுந்தரத்திடம் போயிருந்தேன். 'என்ன சுந்தரம்? நீ கூடப் பட்டணத்தை விட்டு ஓடப் போகிறாயா?' என்று விசாரித்தேன். 'நாம் ஏன் ஸார் ஓடணும்? கத்தி கையிலே இருக்கிற வரைக்கும் நமக்கு என்ன பயம்?' என்றார் சுந்தரம்."

இப்படி ஜப்பான்காரனுக்குக் கூடப் பயப்படாத கையில் கத்தி பிடித்த தீரனாகிய சுந்தரம் யார் என்று கேட்கிறீர்களா? ஸ்ரீ சுந்தரத்தின் படிப்படியான முன்னேற்றத்தைப் பற்றி ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி எழுதியிருப்பதைப் படித்துத் தெரிந்து கொள்ளுங்கள் :-

"சென்ற பத்து வருஷங்களில் எத்தனையோ ராஜ்யங்கள் விழுந்திருக்கின்றன. எத்தனையோ மன்னர்கள் முடியிழந்திருக்கின்றனர். என் தலைக் கிராப்பும், சுந்தரத்தின் தொழிலும் மட்டும் நாளுக்கு நாள் வளர்ந்து முன்னேற்றமடைந்திருக்கின்றன. 'பி.ஏ. குடுமி'யுடனே, நான் நுழையும்போது சுந்தரத்தின் தொழிற்சாலை 'சிங்கப்பூர் பார்பர் ஷாப்' என்ற திருநாமத்துடன் விளங்கிற்று. பிறகு அது 'சிங்கப்பூர் ஹேர் கட்டிங் ஸலூன்' என்று அவதரித்தது. சில நாளில் 'சிங்கப்பூர் மாடர்ன் ஹேர் கட்டிங் ஸலூன் - புரொப்ரைட்டர் சுந்தரம் பிள்ளை' என்று முன்னேற்றமடைந்தது. பிறகு சுந்தரத்தின் எதிரிகள் சூழ்ச்சியால் சிங்கப்பூர் வீழ்ச்சி அடைந்த போது, 'தி மாடர்ன் ஸலூன் - புரொப் : சுந்தரம்' என்றாயிற்று. பிறகு, பட்டணத்தின் ஷகரில், பெரிய மூன்று மாடிக் கட்டடத்திலிருந்து ஒரு மைலுக்கு அப்பால் கூடத் தெரியும்படியான எலெக்ட்ரிக் விளம்பரம், 'சுந்தரம்ஸ்' என்று ஒளி வீசிக் கண்ணைக் கவர்த்தது.

ஆம்; சுந்தரம் தம் தொழிலில் பெரிய முதலாளியாகி விட்டார். அவர் ஆதரவில் இப்போது வேலை செய்யும் கத்திரிகளையும் கத்திகளையும் வைத்துக் கொண்டு ஒரு யுத்த 'டாங்கி' செய்து விடலாம்."

இப்படி எழுதக்கூடிய தமிழ் எழுத்தாளர் தமிழ்நாட்டிலேயே ஒருவர்தான் உண்டு என்று சொல்லலாம். அவர் "பரதன்," "நைஷ்டிகன்" முதலிய புனைபெயர்களில் எழுதி வந்த ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி பி.ஏ., பி.எல். அவர்கள்தான்.

தமிழ் இலக்கியத்தின் துரதிர்ஷ்டத்தால் ஸ்ரீ பார்த்தசாரதி பத்திரிகைத் தொழிலை விட்டு, அகில இந்திய ரேடியோவுக்குப் போய்ச் சேர்ந்தார். சம்பளம், அந்தஸ்து ஆகியவற்றில் உயர்ந்த நிலைமையில் இருக்கிறார். ரொம்ப சந்தோஷம். ஆனாலும் அவர் தமிழ் வசன இலக்கிய வளர்ச்சிக்குச் செய்திருக்கக்கூடிய தொண்டு வீணாய்ப் போய் விட்டதே என்று வருந்தாமலிருக்க முடியவில்லை.

ஏதோ, அவர் தமிழ் எழுத்தாளராயிருந்த சொற்ப காலத்தில் செய்த சேவையாவது நிலையான உருவம் பெற வேண்டுமென்று எண்ணி, தமிழ்ப் பண்ணைக்காரர்கள் அவருடைய கட்டுரைகள் - கதைகளில் முக்கியமானவற்றைத் திரட்டி அழகிய புத்தகமாக வெளியிட்டிருக்கிறார்கள். புத்தகத்துக்குப் பெயரும் "ஹாஸ்யச் சரங்கம்" என்று மிகப் பொருத்தமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

தமிழ்ப்பண்ணையின் மற்றப் புத்தகங்களைக் காட்டிலும் கூட இந்த "ஹாஸ்யச் சரங்கம்" அமைப்பிலும் தோற்றத்திலும் சிறந்து கவர்ச்சிகரமாக விளங்குகிறது.

இந்த நூலுக்கு ராஜாஜி ஒரு சிறப்பான முன்னுரை அளித்திருக்கிறார். அதை ராஜாஜியின் கையெழுத்திலேயே பிளாக் செய்து சிறப்பாக அச்சிட்டிருக்கிறார்கள்.

ராஜாஜியின் அந்தரங்க அபிமானத்துக்குப் பாத்திரமானவர்களில் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி ஒருவர். கதர் விற்பனையில் ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி காட்டிய ஊக்கமும் திறமையுந்தான் அவர் பேரில் அத்தகைய அபிமானத்தை ராஜாஜிக்கு உண்டாக்கின. தாட்சண்யத்துக்காகவே இந்த முன்னுரையை எழுதிக் கொடுப்பதாக ராஜாஜி குறிப்பிட்டிருக்கிறார். எந்தக் காரியத்திலும் சாதாரணமாக தாட்சண்யமே காட்டாதவர் ராஜாஜி என்பது பிரசித்தமான விஷயம்.

அவரே தாட்சண்யம் காட்ட வேண்டு மென்றால் ஸ்ரீ பார்த்தசாரதி அவருடைய அன்புக்கு எவ்வளவு பாத்திரமானவர் என்பதை அறியலாம்.

ராஜாஜியைப் போலவே ஸ்ரீ பார்த்த சாரதியிடம் அன்பு கொண்ட மற்றொரு தலைவர் நமது ரஸிகமணி டி.கே.சி. அவர்கள். சாதாரணமாக டி.கே.சி. அவர்கள் சமயம் வாய்க்கும் போதும் சமயம் வாய்க்காத போதும் பி.ஏ.பி.எல் களை வெளுவெளு என்று வெளுத்துக் கட்டுவது வழக்கம். அத்தகைய சமயங் களில், எனக்கு இரண்டொரு வார்த்தை பேச இடம் கிடைக்கும்பட்சத்தில், "தாங்களும் ஒரு பி.ஏ.பி.எல்; ராஜாஜி ஒரு பி.ஏ.பி.எல்; நிற்க : நமது பார்த்தசாரதி பி.ஏ.பி.எல்லைப் பற்றி என்ன சொல் கிறீர்கள்?" என்று கேட்டு வைப்பேன். ரஸிகமணி அவர்கள் உடனே பி.ஏ.பி.எல் களைக் கொஞ்சம் மறந்து விட்டு, "பார்த்தசாரதியா? அது வேறு சமாசாரம்! பார்த்தசாரதி எழுதுவதல்லவா தமிழ்? மக்களின் வாக்கில் உலாவும் உயி ருள்ள தமிழ்!" என்று ஆரம்பித்து விடு வார்கள்.

மேற்படி அருமையான "ஹாஸ்யச் சுரங்கம்" என்னும் நூலை ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி அடியேனுக்குச் சமர்ப் பணம் செய்திருக்கிறார். மிக்க மகிழ்ச்சி யோடும் நன்றியோடும் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். முதன் முதலில் அவரை நான் எழுதத் தூண்டியதாகவும் குறிப்பிட்டிருக்கிறார். பத்து வருஷத்துக்கு முன்னால் நான் செய்த குற்றத்தை ஸ்ரீ ஆர். பார்த்தசாரதி இன்னும் ஞாபகம் வைத்துக் கொண்டிருப்பது அதிசயமான விஷயம். இந்த அதிசயங் காரணமாக, அச்சடித்த பிரதிகள் அவ்வளவையும் நானே வாங்கிக் கொண்டு விடலாமா என்று கூட யோசித்தேன். ஆனால் தமிழ்நாட்டு வாசகர்கள் எனக்குக் கெடுதல் ஒன்றும் செய்யாதபடியால், அவர்களுக்கு அத்தகைய நஷ்டத்தை உண்டுபண்ண நான் விரும்பவில்லை. முதற் பதிப்பில் பாக்கியுள்ள 999 புத்தகங்களை அவர்களுக்காக விட்டுக் கொடுத்திருக்கிறேன்.

**(கல்கி, ஜூன் 15, 1947)**

# இளம் எழுத்தாளர்கள்

சிறுகதை எழுதும் துறையில் இளம் எழுத்தாளர்கள் பலர் ஈடுபட்டு வருகிறார்கள். புதிய எழுத்தாளர்களின் தொகை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது. இது மகிழ்ச்சிக்குரியது.

புதிய எழுத்தாளர்கள் தாங்கள் மிகப் பிர யத்தனப்பட்டு எழுதிய சிறுகதைகளை மாதப் பத்திரிகைகளுக்கும் வாரப் பத்திரிகைகளுக்கும் அனுப்புகிறார்கள். அவற்றில் சில பிரசுரிக்கப் படுகின்றன. சில கதைகள் ஆசிரியரின் வந்தனத் துடன் திருப்பி அனுப்பப்படுகின்றன.

கதைகளைத் திரும்பப் பெற்றவர்கள் மனத்தில் அதிருப்தி ஏற்படுகிறது. அவர்கள் பத்திரிகை ஆசிரியர்களிடம் குறைப்படு கிறார்கள். பத்திரிகை ஆசிரியர்கள் இளம் எழுத்தாளர்களை ஆதரிப்பதில்லை என்றும், அவர்களுக்கு ஊக்கம் அளிப்பதில்லை என்றும், திரும்பத் திரும்ப ஒரு சில எழுத்தாளர்களின் கதைகளையே வெளியிடுகிறார்கள் என்றும் குறிப்பிடுகிறார்கள்.

சிறுகதை எழுதும் துறையில் புதிதாக ஈடு படும் ஆரம்ப எழுத்தாளர்களை ஊக்கப்படுத்து வதில் நம் "கல்கி" பத்திரிகை எப்போதும் ஆர் வம் கொண்டு வந்திருக்கிறது. அந்த ஆர்வம் காரணமாக, எத்தனையோ இளம் எழுத்தாளர் களின் கதைகளைப் பரிசீலனை செய்து, அவசிய மான திருத்தங்களைச் செய்து, வெளியிட்டிருக் கிறோம். பெரும்பாலும் ஆரம்ப எழுத்தாளர் களின் கதைகளுக்கே நாம் அதிகச் சலுகை காட்டி வருகிறோம். "கல்கி" பத்திரிகை மூலம் எழுத்துலகில் பிரவேசித்த எழுத்தாளர்கள் பலர் இன்று நல்ல புகழுடன் இருந்து வருகிறார்கள்.

இவ்வாறு நாம் இளம் எழுத்தாளர்களுக்கு ஊக்கம் அளிக்க எவ்வளவு ஆர்வம் உடையவர் களாயிருந்தாலும், அதனால் சில சமயம் பெருந் தொல்லைக்கு ஆளாக வேண்டி நேரிடுகிறது.

ஒருசில ஆரம்ப எழுத்தாளர்கள் வேறு பத் திரிகைகளில் வெளியான கதைகளை, கதா பாத்திரங்களின் பெயர்களை மட்டும் மாற்றிப் புதிதாகத் தாங்கள் எழுதியது போல் அனுப்பி விடுகிறார்கள். இன்னும் சிலர் முன்னம் வெளி யான கதைகளில் சிற்சில நிகழ்ச்சிகளை மட் டும் மாற்றி எழுதி அனுப்பி விடுகிறார்கள். அத்தகைய கதையைத் திருத்தம் செய்து வெளி யிட்டால், கதை அந்த எழுத்தாளர் ஏற்கெனவே பார்த்து எழுதிய மூலக்கதையின் உருவத்தைப் பெற்று விடுகிறது!

→

பல பத்திரிகைகளைப் படிக்கும் வாசக நேயர்கள் "இந்தக் கதை இன்ன தேதியில் இன்ன பெயரில் இந்தப் பத்திரிகையில் வெளியானது" என்று கடிதம் எழுத ஆரம்பித்து விடுகிறார்கள்.

அப்படிக் கடிதம் எழுதும் உற்சாகமான வாசக நேயர்களுக்குப் பத்திரிகாசிரியர்களின் நன்றி உரியது. அவர்கள் அவ்வாறு பத்திரிகை ஆசிரியர்களுக்கு எழுதவில்லையென்றால், பழைய கதைகளேதான் திரும்பத் திரும்பப் புதிய போர்வையில் வெளியாகிக் கொண்டிருக்கும். புதுப் புது எழுத்தாளர்களும், புதிய கற்பனைகளும் தோன்றுவது குறைந்து போய் விடும்.

பத்திரிகைகளில் கதைகள் வெளியிடுவதற்கு உதவி ஆசிரியர்கள் கதைகளைப் பொறுக்கி எடுக்கிறார்கள். ஏற்கெனவே வெளியான கதை என்பது வாசக நேயர்களுக்குத் தெரியும்போது, உதவி ஆசிரியர்களுக்குத் தெரியாமலா போய் விடும் என்ற கேள்வி எழுகிறது.

ஆம்; உதவி ஆசிரியர்களுக்குச் சில சமயம் தெரியாமல்தான் போய் விடுகிறது. அதற்குத் தகுந்த காரணம் இருக்கிறது.

சற்றுப் பிரபலம் அடைந்த பத்திரிகைகளுக்கு நூற்றுக்கணக்கான சிறுகதைகள் புதிய இளம் எழுத்தாளர்களிடமிருந்தும் வழக்கமாக எழுதும் பழைய எழுத்தாளர்களிடமிருந்தும் வாரந்தோறும் வருகின்றன. இவ்வளவையும் உதவி ஆசிரியர்கள் படித்து, வெளியிடத் தகுதியானவற்றைப் பொறுக்கி எடுக்க வேண்டி வருகிறது.

வருஷக்கணக்கில் பார்க்கும்போது இவ்வாறு உதவி ஆசிரியர்கள் படிக்கும் கதைகள் ஆயிரக்கணக்கில் போய் விடுகின்றன.

இவற்றுடன் வேறு பத்திரிகைகளில் வெளியாகும் கதைகளையும் உதவி ஆசிரியர்கள் படிக்க வேண்டியிருக்கிறது.

ஆகவே, எந்தக் கதையைப் படித்தாலும், "முன்னே எங்கேயோ படித்த மாதிரி இருக்கிறதே!" என்று தோன்றுகிறது. சமூகக் கதைகள், குடும்பக் கதைகள், கிராம வாழ்க்கைக் கதைகள் எல்லாவற்றிலும் சில நிகழ்ச்சிகள் ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றன. சில சமயம் கதைப் போக்கும் ஒன்றுபோல இருக்கும். எழுதும் முறையிலேதான் வித்தியாசம் இருக்கும்.

நூற்றுக்கணக்கான கதைகளைப் படித்துப் பரிசீலனை செய்யும் உதவி ஆசிரியர்கள், "முன்னே படித்த மாதிரி இருக்கிறதே!" என்று தோன்றுவதற்காக மட்டும் கதைகளை நிராகரிப்பதாயிருந்தால் கதைகளைப் பொறுக்கவே முடியாது!

வாசக நேயர்களுக்குக் கையெழுத்துப் பிரதிகளைப் படிக்கும் கடமை இல்லை. பத்திரிகைகளிலே அச்சிட்டு வெளியாகும் கதைகளை மட்டும் படிக்கிறார்கள். ஆகையால், அவர்களில் சிலருக்கு இந்தக் கதை இந்தப் பத்திரிகையில் முன்னமே வந்தது என்பதைத் திட்டமாக உடனே கண்டுபிடிக்க முடிகிறது.

உதவி ஆசிரியர்களுக்கு இந்தச் சௌகரியம் கிடையாது.

ஆகையால், கதை எழுதி அனுப்புகிறவர்கள் எல்லாம் சொந்தக் கற்பனையினால் எழுதுகிறார்கள் என்ற நம்பிக்கையின் அடிப்படை பேரில்தான் அவர்கள் கதைகளைப் பரிசீலனை செய்து பொறுக்க வேண்டியிருக்கிறது.


இந்த நிலைமையில், இரண்டொரு எழுத்தாளர்கள் பழைய கதைகளைப் பெயர்த்து எழுதி அனுப்பி, அவை பிரகரிக்கப்பட்டு விட்டால், பத்திரிகையின் நல்ல பெயர் பாதிக்கப்படுகிறது.

இம்மாதிரி நேரிடாமல் தடுக்க ஒரு வழி உண்டு. நன்றாகப் பழக்கமான பழைய எழுத்தாளர்களின் கதைகளையே பிரகரிப்பது என்று வைத்துக் கொண்டால், வேறு பத்திரிகைகளில் வெளியான பழைய கதைகளையே மீண்டும் பிரகரிக்கும்படியான நிலைமை ஏற்படாது. ஆகையினாலேதான், சில பத்திரிகைகளில் வழக்கமாக எழுதும் எழுத்தாளர்களின் கதைகளே வெளியாகின்றன. இவ்வாறு, இரண்டொருவர் செய்யும் முறையற்ற வேலைகள் புதிதாகக் கதை எழுதத் தொடங்கும் இளம் எழுத்தாளர்கள் அனைவரையும் பாதிப்பதாக இருக்கின்றன.

நம்மைப் பொறுத்தவரையில், இம்மாதிரி தவறுகள் (அதாவது ஏற்கெனவே வெளியான கதைகள் புதிய உருவத்தில் வெளியாதல்) சில சமயம் நேர்ந்து விட்டாலும் புதிய எழுத்தாளர்களின் கதைகளைப் பரிசீலனை செய்து வெளியிடுவது என்ற கொள்கையையே கடைப்பிடிக்க விரும்புகிறோம். இந்தமுறையைக் கடைப்பிடிப்பதினால்தான் சென்ற இருபது ஆண்டுகளில் தமிழ்நாட்டில் நூற்றுக்கணக்கான சிறுகதை ஆசிரியர்கள் தோன்றுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இதை நினைவில் வைத்துக் கொண்டு, ஆரம்ப எழுத்தாளர்களும் வாசக நேயர்களும் நம்முடன் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

(கல்கி, ஜனவரி 31, 1954

# ஸப்தபதி



விவாஹம் ஆறுவகை; அவற்றில் "ஆருஷ" வகை விவாஹத்தில் (வேத விதிப்படி மாதா பிதாக்களுடன் அக்னி சாக்ஷியாக நடத்தப்படுவது) மாங்கல்ய தாரணம் செய்வித்த பிறகு "ஸப்தபதி" என்று சொல்லப்படும் சம்ஸ்காரம் முடிவு பெற்ற பின்னரே விவாஹம் நிறைபெறுவதாக ஐதீகம்.

"ஸப்தபதி" என்பது மணப்பெண் வலது காலை அம்மியின் மேல் வைத்து மணமகன் இடது கையால் பிடித்துக்கொண்டு ஒவ்வொரு அடியாக மந்திரத்துடன் ஏழு அடி நகர்த்தி வைப்பதாகும். இதன் தத்துவம் யாதெனில் :

முதல் அடி - மழை முதலான கால நிலைகள் அனுகூலமாக இருப்பதற்காகவும், இரண்டாம் அடி - தானியங்களின் உற்பத்தி அதிகரித்து சுபீக்ஷம் நிலவுவதற்காகவும், மூன்றாம் அடி - விரதாதிகள் (சதுர்த்தி, சஷ்டி, ஏகாதசி, சோம வார, சனி வார முதலியன) அனுஷ்டிக்க அபிலாஷை ஏற்படவும், நான்காம் அடி - வியாதிகளின்றி ஆரோக்ய வாழ்வு அடைவதற்காகவும், ஐந்தாம் அடி - பசு முதலியவைகள் நிரம்பப் பாலை அளிப்பதற்காகவும், ஆறாம் அடி - ஆறு ருதுக்களின் அனுக்கிரஹம் பெறுவதற்காகவும், ஏழாம் அடி - சப்தரிஷிகளின் ஆசியை அடைவதற்காகவும்.

எட்டாம் அடி - சுவை மிகுந்த தித்திப்பு காரவகை பக்ஷணங்களை வாங்குவதற்குக் கடவுள் உங்களை அனுக்கிரஹிப் பதற்காகவும்.



கல்யாண வைபவங்களுக்கு

சீர்முறுக்கு, சீர் முள்ளுத்தேன்குழல், அதிரசம், அப்பம், திரட்டுப்பால், பருப்புத் தேங்காய், வகைகள் ஆர்டரின் பேரில் செய்துத் தரப்படும்.

**தி கிராண்ட் ஸ்வீட்ஸ் & ஸ்நாக்ஸ்**

24, 2வது மெயின் ரோடு,
காந்தி நகர், அடையாறு,
சென்னை - 20.
போன்: 4915662 / 4914213

**வெயிலுக்கு நிழலைத் தேடி ஒதுங்குபவர்கள் பெரும்பாலும் செல்லும் இடம் குளிர்பானக் கடைகள். இந்த வருடம் வியாபாரம் எப்படி என்ற கேள்விக்கு, சில கடைக்காரர்கள் பதில் சொல்கிறார்கள் :**

பிரபாகர் : *(காஸினோ தியேட்டருக்கு எதிர்ப்புறம் உள்ள 'ஆவின் ஐஸ்க்ரீம்ஸ்' கடை ஊழியர்)*

இந்த வருட வெயிலுக்கு, எப்பவும் இருக்கற வியாபாரத்தை விடக் கொஞ்சம் அதிகமாத்தான் வியாபாரம் நடக்குது. 'பைனாப்பிள் டுயட்'னு சம்மர் ஸ்பெஷல் ஐஸ்க்ரீம் ஒண்ணு அதிகமா ஓடுது. மத்த ஐஸ்க்ரீம் கம்பெனிகளோட ஒப்பிட்டா ஆவின்ல தரமும் நல்லா இருக்கும். விலையும் கம்மி. அதுனாலயே நிறைய பேர் ஆவினுக்கு வர்றாங்க.



* அத்தாவுல்லா

# வெயிலில் வாடும்

**அத்தாவுல்லா :** *(மௌண்ட் ரோடில் சைக்கிளில் வைத்து மோர் வியாபாரம் செய்கிறவர்)*

இந்த வருடம் வியாபாரம் அவ்வளவு நல்லா இல்லேங்க. இருவது வருஷமா நான் இந்த மோர் வியாபாரம் செய்யறேன். சீசன் இல்லேன்னா ஒரு வெத்தல பாக்குக் கடைக்கு வேலைக்குப் போய்டுவேன். இதுல ஒருநாளைக்கு நூறு ரூபா கிடைக்கும். அதை வச்சுக் குழந்தை குட்டிங்களைக் காப்பாத்தறதே பெரிய விஷயம்! இதுல போலீஸுக்கு மாமூல் வேற குடுக்கணும். ஏதோ ஓடுது."

**சசிதரன் :** *(சாந்தி தியேட்டருக்குப் பக்கத்தில் ஜூஸ் கடை நடத்துபவர்) :*

ஜூஸ் வியாபாரம் நல்லா ஓடுது. டீ வியாபாரம் டல்லுதான். மௌண்ட் ரோடு ஏரியாவுலயே பொதுவா பிஸினஸ் டல்லுதான். சாந்தி தியேட்டர்ல நல்ல




* சண்முகம்

படம் போட்டா, நல்லா வியாபாரம் நடக்கும். இப்போ வெயில்ல யார் படம் பாக்க வர்றாங்க? மத்தியானத்துல வியாபாரமே இல்லே. காலைல ஆபீஸ் போறவங்க வந்துட்டுப் போறதாலதான் பிஸினஸ் கொஞ்சம் நடக்குது. முந்தில்லாம் சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமைல வியாபாரம் பிரமாதமா இருக்கும். இப்போ அது கூட இல்லை.

**சண்முகம் :** *(கரும்பு ஜூஸ் வியாபாரம் செய்பவர்) :*

இருபத்தேழு வருசமா இந்த



• சசிதரன்

வியாபாரம் செய்யறேன். இந்த வருஷம் மாதிரி மோசமான வியாபாரம் எப்பவும் இல்லை. ஆற்காட்டுலருந்து வாரத்துக்கு ஒரு தடவை ரெகுலரா கரும்பு வரும். எனக்கு அஞ்சு பசங்க. படிச்சுட்டு சும்மாத்தான் இருக்காங்க. ஒருநாளைக்கு ஐம்பது, நூறு கிடைக்கும். இதை வச்சுத்தான் குடும்பத்தை ஓட்டணும். ஹைவேஸ்காரங்க ரெண்டு மாசமா கடை போட விட மாட்டேன்னுட்டாங்க. நம்ம முதலமைச்சர்தான் 'ஏழைங்க பிழைக்கட்டும்'னு பத்து நாளா கடை போட அனுமதிச்சிருக்காரு. அப்படியும் எதிர்பார்த்த வியாபாரம் இல்லை.

# வியாபாரம்!

• ராஜு



கரும்புச் சாறு மஞ்சக்காமாலைக்கு மருந்து. டாக்டரே இதை சாப்பிடச் சொல்லுவாரு. ஆனாலும், முந்தி மழைக்காலத்துல கூட நல்லா ஓடுன வியாபாரம் இப்போ நல்லா இல்லங்க.

ராஜு : (இளநீர் வியாபாரம்)

நான் முதல்ல வைக்கோல் வியாபாரம் பண்ணிட்டு இருந்தேங்க. இப்பத்தான் ரெண்டு வருஷமா இளநீர் வியாபாரம் பண்றேன். எனக்கு மொத்தம் ஆறு பசங்க. அதுல ஒரே ஒரு பையன். பையன் சரியில்லை! வண்டி தள்ளக் கூட வர மாட்டான். ரெண்டு பொண்ணுங்களுக்கு கல்யாணம் ஆயிடுச்சு. என் வீட்டுக்காரிக்கு ஆபரேஷன் செஞ்சு, முடியாம வீட்லயே படுத்திருக்கா. ரெண்டு பொண்ணுங்க வீட்டு வேல செய்து சம்பாதிக்குதுங்க. அதுல என்ன பெருசா சம்பாத்யம் கிடைக்கும்? நான் சம்பாதிக்கறதுலதான் குடும்பப் பிழைப்பு ஓடுது. ரெகுலரா தர்மபுரிலருந்து இளநீர் காய்ங்க வந்துரும். வியாபாரம் ரொம்ப மோசம். வியாபாரம் நடந்தாலும் நடக்காட்டியும் போலீஸ்காரங்களுக்கு மாமூல் வெட்டணும். அதுவாவது பரவால்லை. 'அஞ்சு பத்து' வாங்கிட்டுப் போய்டுவாங்க. இந்த கார்ப்பரேஷன்காரங்க தொல்லைதான் பெரிய தொல்லை. தொடர்ந்து ஒரு இடத்துல கடை போட்டாத்தானே வியாபாரம் நடக்கும்! நாலு பேரு வருவாங்க! கார்ப்பரேஷன்ல கடையே போட விடாம 'விரட்டு விரட்டுனு' விரட்டுறாங்க. நாங்க என்ன செய்றது சொல்லுங்க!

— கே. பாலசுப்ரமணியன்

படங்கள் : எம். சண்முகம்

# ஒரு காதல் டைரி

## 13

பின்வாங்க மாட்டேன் என்றால் இங்கே அதுவல்ல விஷயம். நான் அப்படி ஒன்றும் நினைக்கவில்லை என்பதே! அம்மாவை வேதனைப்படுத்துவது எனக்குக் கஷ்டமானது. ஏனெனில் அவர்கள் வாழ்வில் சுகம் என்றால் என்னவென்றே அறிந்ததில்லை.

எனினும் ஈசுவர அருள் இருந்தால் ஏப்ரல் 15ந் தேதி கழித்து நான் இங்கிருந்து புறப்பட நினைக்கிறேன். சென்னையில் எனக்கு வேலைக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

ஆனால் அப்பாவைப் புறக்கணிக்க வேண்டி வரும் என்பதுதான் பிரச்னை. எக்காலத்திலும் எனது உத்தம நண்பராய்த் தங்களை நான் போற்றுவேன்; நேசிப்பேன்.

தாங்கள் கோரியதால் நான் இவ்வளவும் எழுதினேன். எனக்காகக் கொஞ்சம் அழுங்கள்.

இந்தப் பேனா பரவாயில்லை. கழுவ வேண்டுமே என்று ஞாபகமின்றித் தண்ணீரில் போட்டுவிட்டேன். அதனால் இதன் நிறம் போய்விட்டது. தற்காலிகமாக இதை வைத்துத் திருப்தி அடையுங்கள்.

புதிய பேனாவை உடனே அனுப்பி வைக்கிறேன். இரண்டையும் எடுத்துக் கொள்க. இந்தப் பேனாவை யார் பார்த்தாலும் கவலை இல்லை. எழுதும்போதெல்லாம் இந்த பாக்கியமில்லாதவளின் சித்திரம் மனக் கண்ணாடியில் பிரதிபலிக்கட்டும்.

அன்று அந்தப் பேனாவை என் முன்னால் வைத்துக் குத்தியபோது என் இதயத்தில் குத்தியது போல பயங்கர வேதனை தோன்றியது.

ஆசைக்கு நான் அவகாசம் தந்ததில்லை. அதனால் நீங்கள் எண்ணியபடி நான் நடந்து கொள்ளாதது என் தவறா?

அழுகையின் திசையில் இருந்து தான் நான் புறப்பட்டு வந்தேன். பின்பு மீண்டும் அழுதேன். காரணம் என்னை யாரும் வெறுப்பதை நான் விரும்பவில்லை. கோபித்துக் கொள்வதையும். துன்பங்களுக்கு இடையிலும் என் வாழ்க்கை நேசத் தணலில்தான்!

என்னால் இயலாது. செவ்வாய்க்கிழமை நான் விடுமுறை. புதன் கிழமை மாலை என்னைப் பார்ப்பீர்களா? அப்போது இந்தக் கடிதத்தைத் திருப்பித் தாருங்கள். நான் தருகிற புத்தகத்தோடு அதில் வைத்து.

என்னைப் பார்க்க கே.எஸ். வீட்டிற்கு வராதீர்கள். மிஸஸ் கெ.எஸ். அங்கே இருக்கிறாள்.

நாம் சந்திப்போம். இதயத்தினூடே, இதயத்தினூடே நாம் பேசிக் கொள்வோம்.

இப்போதே இது மிகவும் நீண்டு விட்டது. நான் நிறுத்தட்டுமா?

நல்லன்புடன்
பஷீருக்குரிய,
சரஸ்வதி தேவி

பி.கு. எனது 'ஆர்ட்டிகிள்'ஐ இதோ கொடுத்தனுப்பியுள்ளேன். வேண்டிய திருத்தத்தை இஷ்டம்போல் செய்து கொள்ளுங்கள்.

கெ.எஸ்ஸின் கையில்தான் கொடுத்து அனுப்புகிறேன். அது வந்து சேர்ந்ததா? விசாரிக்கவும். நான் இனிமேல் பத்திரிகை அலுவலக முகவரிக்கு எழுத மாட்டேன்.

வைக்கம் முகம்மது பஷீர் — தமிழில்: வையவன்

'கரஸ்பாண்டன்'ஸின் வழியை நிர்ணயிக்கவும்.

இங்கிருந்து கிளம்பும்போது என்னிடம் விடை பெற மறக்காதீர்கள். ஏன் இங்கிருந்து கிளம்புகிறீர்கள்? என்னவானாலும் சொந்த ஊருக்குப் போக முடியாதல்லவா? என்றால் இந்த சகோதரியின் அருகே



வசிக்கக் கூடாதா?

என்னை நேசியுங்கள். வாத்சல்யத்திற்குரிய ஒரு சகோதரியாக. அது எனக்கு அவசியமாகும். அந்த அதிகாரம் இல்லை எனினும் கட்டளையிடுகிறேன். கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன்.

உங்கள் சொந்தமான
சரஸ்வதி தேவி

இதற்கு நான் ஒரு பதில் எழுதினேன்.

பிரியமுள்ள சகோதரி,

கடிதத்தை வாசித்தேன். துக்கத்தின் மையத்தில் நிற்கிற தேவியைத் தான் முதலில் கண்டது. அன்று துக்கத்தின் வடிவம் புரியவில்லை.

என்னால் அது முடியாது. கண்ணீர் இல்லை. வற்றிப் போயிற்று. தேவி அதை அன்று பிழிந்தெடுத்து விட்டாள்.

அப்பா
அம்மா
சகோதர சகோதரிகள்

சரஸ்வதி தேவி

அந்த வாழ்வில் எங்கே பிசகு நேர்ந்தது? வேண்டாம். எதுவும் சிந்திக்க வேண்டாம். எல்லாம் மறந்து விடு. நான் முழுக்கப் புதைந்து கொண்டிருக்கிறேன்.

குடும்ப சம்பந்தமான சில கேள்விகள் கேட்க வேண்டி இருக்கிறது. அதற்கெல்லாம் இன்னும் காலம் உண்டல்லவா?

மனசை வருத்திக் கொள்ளாமல் படித்துப் பாஸாகவும். புஷ்டி தரும் உணவு சாப்பிடவும். கடிதம் தற்போது என்னிடமே இருக்கட்டும்.

கதைக்குக் கருவாக்கலாமா வேண்டாமா என்று உறுதியாய் முடிவு செய்யவில்லை. என்ன ஆனாலும் இதை மீண்டும் வாசித்துப் பார்க்க வேண்டும். நான் கதையாக்குவதாயின் உனக்குக் காண்பித்த பிறகே வெளியிடுவேன். உன் அனுமதியோடு. பரிபூரணமாக நம்பவும்.

"நான் ஒரு முழு முட்டாள். மக்களின் சுபாவங்களை அறிவதில்..." என்ற வரிகள் பற்றி!

உனக்கு நல்ல பண்பாளனான ஒரு கணவன் கிடைக்கட்டும்... நான்...

தேவி, நாம் ஒரு மகா சமுத்திரத்தில் இறங்கி ஆயிற்று. ஒருவரை ஒருவர் நம்பியும், ஒருவருக்கொருவர் உதவியும் முன்னே போவோம். உன்னைப் பரிபூரணமாக நம்பிக் கொண்டுதான் அந்தக் கடிதத்தை உனக்கு அனுப்பினேன்.

அதிலே என் முகவரியும் கையெழுத்தும் இல்லையா?

மான அவமானங்கள் எனக்கும் உண்டல்லவா?

தேவி எனக்கு மோசம் செய்ய மாட்டாள். என்னைப் பரிகாசம் செய்ய மாட்டாள் என்று நான் எப்படி முடிவு எடுத்தேன்?

## நினைவிருக்கிறதா?

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டிக்குக் கதைகள் அனுப்பக் கடைசித்தேதி ஜூன் 15. முழு விவரங்கள் சென்ற / அடுத்த இதழில் பார்க்கலாம்.

– ஆர்




நான் கண்ணை மூடிக்கொண்டு நம்புவதைச் செய்தேன். நான் உன்னை நேசிப்பதால் சர்வாத்ம சுத்தியாக நம்புகிறேன்.

இன்னும் நம்பிக்கை வரவில்லை என்றால் நம் தொடர்பை இத்துடன் நிறுத்திக் கொள்ளலாம்.

"என்னை நேசிக்க வேண்டும். வாத்சல்யத்துக்குரிய ஒரு சகோதரியாக..." என்ற உன் வரிகள் பற்றி...

என் தங்கம் என்னிடம் யாசிக்க வேண்டாம்! நான் நேசிக்கிறேன். எனக்கு உன்னைத் தேற்ற வேண்டும். சிரிக்க வைக்க வேண்டும். மார்போடு சேர்த்து இறுக்கமாய் அணைக்க வேண்டும். உன் ஒவ்வொரு மயிர்க்கால்களிலும் முத்தமிட வேண்டும்.

ஆனால் என்னை நீ வேண்டுவது ஒரு சகோதரனாகத் தான். உன் இஷ்டம். நான் கடிதத்தை நீட்டப் போவதில்லை. இன்று நான்கு மணிக்கு இதைத் தருவேன். நாளைக்கு ஒத்திவைக்கப்போவதில்லை.

தேவீ, இந்தப் பேனா! இது ஒரு வேதனையில் வெந்த பேனா. நீ வேதனையில் வெந்த பெண். நான் வேதனையில் வெந்த ஆண். நமக்கு எல்லா அனுக்கிரகங்களும் உண்டாகட்டும்.

நீ பாக்கியவதி ஆகவேண்டும் என்ற வாழ்த்துகளுடன்,

எனக்குரிய தேவிக்கு
பஷீர்.




கடிதத்தை மீண்டும் ஒரு முறை வாசித்துப் பார்த்தேன். முன்னெல்லாம் கடிதங்களில் ஒரு சுவையாவது இருந்தது என்ற தேவியின் தவிப்பை நினைத்துக் கொண்டேன். தேவிக்கு எந்தச் சுவை வேண்டியது? ஈசுவரா நான் என்ன செய்யட்டும்!

ஒரு காகிதத்தில் பின்வருமாறு எழுதி கூட்டிச் சேர்த்தேன். சட்டென்று தோன்றியதுதான். சகோதரிக்கான கடிதம் அல்ல. நான் நேசிக்கிற என் தேவிக்கு.

பிரியமுள்ள என் துயரின் இனிமை கலந்த மோகன காவியமே! அழகியான என் தேவியை நான் நேசிக்கிறேன். அமுதம் போல, நறுமணம் போல, திவ்ய சங்கீதம் போல நான் உன்னை நேசிக்கிறேன்.

அபூர்வமான ஓர் அனுக்கிரகம் போல நீ என் அருகே வந்தாய்.

அபூர்வமான ஓர் அனுக்கிரகம் போல நீ என்றும் என்னருகிலேயே நிற்க வேண்டும்.

இருளில் மூழ்கிய என் வாழ்வில் வாசற்படியில் வைத்த மங்கள தீபமாக நீ காட்சி தந்தாய். என்றும் என் வாழ்வின் மங்கள தீபமாக நீ இருக்க வேண்டும்.

கடிதத்தை நான்கு மணிக்கு வழியில் வைத்து சரஸ்வதி தேவியிடம் கொடுத்தேன்.

"என்னோட அந்தக் கடிதம் எங்கே?" என்றாள்.

"திருப்பித் தரணுமா? இப்பவும் என் கைலதான் இருக்கு."

நிசப்தம். ஏன் ஒன்றும் பேசவில்லை. மீண்டும் நான் சொன்னேன்.

"நான் இன்னும் அதுக்குக் காப்பி எடுத்துக்கலே. நிர்ப்பந்தம்னா குடுத்துடறேன்."

நிசப்தம்.

"சொல் தேவீ!"

"படிச்சாச்சு இல்லே?"

"படிச்சுட்டேன். இன்னும் படிக்கணும்."

இடையில் வேறு ஒரு சங்கதி ஞாபகம் வந்தது. வீட்டில் இருந்து ஒரு கடிதம் வந்திருந்தது. என் சகோதரியின் திருமணம் நிச்சயமாகி இருந்தது. பதிலுக்கு அவர்கள் வீட்டுப் பெண்ணை நான் திருமணம் செய்ய வேண்டும்! இதை நான் தேவியிடம் தெரிவித்தேன்.

"வீட்டிற்கு ஒருதடவை போயே ஆகணும். தங்கச்சிக்குக் கல்யாணம். எனக்கும் பெண் பார்த்து வச்சிருக்காங்க."

"கல்யாணம் பண்ணிக்கறப்ப என்னைப் பத்திய ரகசியம் மனைவிகிட்ட சொல்லிடாதீங்க!"

"இல்லே... எனக்கு வேற ஒரு பிரிய மாணவன் உண்டாகப் போறதில்லே."

அதற்கு ஒரு பதிலும் சொல்லாது நழுவி, மற்றொரு கேள்வி.

"வேற ஒரு கடிதம் கெடைச்சுதா? நான் ஒரு பிஸினஸ் கடிதம் போட்டிருந்தேன். நாடகத்தைப் பத்தி."

"கெடைக்கலே. வந்திருக்கான்னு நான் போயிப் பாக்கணும்."

"நாளைக்குப் பத்து மணிக்குப் பாப்பீங்களா?"

"பார்ப்பேன்."

நான் கிளம்பினேன்.

அந்தக் கடிதம் வந்திருந்தது. பிஸினஸ் லெட்டர்.

"அந்த நாடகத்தை நான் இந்தியில் மொழி பெயர்த்துத் தருவேன். ஜனவரியில்தான் ஆண்டு விழா. அதற்கு முன்னால் அச்சேற்ற வேண்டாம். ஆனால் அதை நாங்கள் அச்சாக்கித் தருவோம்."

பி.டி. காலேஜில் நடிக்கத் தக்கதாக இருக்க வேண்டும் நாடகம். நான் இதுவரை 'ஸ்டேஜில்' நடித்தது இல்லை. உலகத்தில் மட்டுமே நடித்திருக்கிறேன் எனினும் முயற்சிப்பேன்.

ஆனால் இந்தியிலான மொழி பெயர்ப்புக்கு எனக்கும் நேரம் கிட்டாது. காலை 9 மணி முதல் 5 மணி வரை கல்லூரி. இரவு 8 மணி முதல் காலை 8 மணி வரை தூங்க



"தப்பா நினைச்சுக்கக் கூடாது. பொண்ணுக்குக் கிரிக்கெட்னா உயிர்!"

– பார்ஸார்த்தி

வேண்டும்.

பிறகு சிந்திக்க வேண்டும். பலதும். ஆக மொத்தம் நேரம் கிடைக்காது. படிக்காமல் பாஸாக தெய்வத்திடம் பிரார்த்திக்கவும் வேண்டும்.

ஓய்வு நேரங்களில் சொந்தமாக ஏதேனும் எழுத முனைவேன். ஆனால் அது நன்றாக இருக்காது என்பதே சரி.

சில கட்டுரைகள் எழுதினால் நன்றாக இருக்கும் என்று ஒரு கருத்து. உதவியை எதிர்பார்க்கிறேன்.

வெற்றிக்கான விழைவுடன்
மிஸ். சரஸ்வதி தேவி

**எ**தற்காக ஒரு மிஸ் சேர்த்திருக்கிறாள்? சிந்தித்து ஒரு பிடியும் கிட்டவில்லை. 'கல்யாணம் ஆகாத பெண்ணாக நான் இங்கே இருக்கிறேன்' என்று நான் நினைவூட்டிக் கொள்ளவா?

அப்படி சிந்தனையில் மூழ்கினேன். எந்நேரமும் தேவியைப் பற்றிய சிந்தனைதான். தேவி என்னைப் பற்றியும். அதை நன்றாக உணர்ந்தேன்.

இடையில் ஒரு பெரிய நகரம் உண்டெனினும், நாங்கள் விலகியே இருப்பினும் தேவி என்னைப் பற்றிச் சிந்திக்கும்போது எல்லாம் நான் அறிவேன்.

என் இதயத்தில் இனிமையாக வெதுவெதுப்பான பால் நிறைந்து நிற்பது போல. தேவி மீதுள்ள காதல்.. எப்போதும் என் பிரேம பாத்திரத்தைக் காண ஓர் ஆசை. எப்போதும்.

நான் விடிந்ததும் எழுந்தேன். குளியல், ஷேவிங், காப்பி எல்லாம் முடித்து ஒரு புதிய புத்தகத்துடன் காலத்திற்குள் நேரத்திற்கு ஆஜரானேன்.

நீண்டு கிடக்கின்ற பொதுச் சாலை. அதிலே நிறைய ஆண் பெண்கள். மாணவிகள். கண்ணுக் கெட்டிய தூரம் வரை. தேவி குறுக்கு வழியில் இருந்து பொதுப் பாதையாக நுழைந்தால், நான் உடனே தெரிந்து கொள்வேன்.

"வருகிறாள் என் தேவி!"

நான் எழுந்தேன். 'போய் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகை செய்து கொண்டோம்.

கூட வேறு பெண்கள் இருந்தனர்.

தேவி வேறொரு குறுக்கு வழியில் நுழைந்தாள். நாங்கள் வேறு ஒரு பாதையில் இறங்கி நடந்தோம்.

நான் புத்தகத்தைக் கொடுத்தேன். எங்களுக்கு நிறைய பேச வேண்டியவை உண்டு. நேரம் பறந்து கொண்டிருந்தது.

"காலேஜ் வாசல் வரைக்கும் நேரம் இருக்கு இல்லே?"

"அது சீக்கிரமா வந்துடும். நாம்ப காயல் ஓரத்துக்குப் போகலாம்" என்றேன்.

"அதுக்குப் பக்கத்திலே தானே ஒங்க வாசம்?" என்றாள்.

"ஆமாம். போகலாம்" என்றேன்.

(தொடரும்)

**அட, அப்படியா?**

● ஜார்ஜ் வாஷிங்டன், ஜேக்ஸன், வான் பரன், ஃபில்மோர், லிங்கன், ஜான்சன், கிளீவ்லேண்ட், ட்ருமன் ஆகிய எட்டு அமெரிக்க ஜனாதிபதிகளும் கல்லூரிப் படிப்பு படிக்கவேயில்லை!

– சிவகங்கை ப. இராம் முருகன்

# நடக்குமென்பார், நடக்கும்!

## ஜூன் 2 முதல் 8 வரை

**மேஷம் :** *(அஸ்வினி, பரணி, கிருத்திகை முதல் பாதம் முடிய)*

உங்க திறமையும் ஆற்றலும் பளிச்சிடுகிற வாரம் இது. குடும்பத்தில் சந்தோஷத்துக்குக் குறைவிருக்காது. வியாபாரிகளுக்கு அபிவிருத்தி உறுதி. எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களுக்குச் செழிப்பான பாதை கண்ணுக்குத் தெரியும். கம்ப்யூட்டர், எலக்ட்ரானிக் துறையினருக்கும் ஆதாயம் தெரியும். பெண்களுக்கும் உற்சாகமான வாரம்தான். ஆனாலும் அங்கங்கே தடங்கல்கள் இருக்கத்தான் செய்யும். அவசரம் காட்டாம நிதானமாச் செயல்பட்டா தடங்கலைத் தாண்டறது ஈஸியாயிடும். இயந்திரங்களில் வேலை செய்யும் போது உஷார் தேவை.

**ரிஷபம் :** *(கிருத்திகை 2-ம் பாதம் முதல் ரோகிணி, மிருகசீரிஷம் 2-ம் பாதம் வரை)*

முக்கியமான கிரகங்கள் சாதகமா இல்லேன்னாலும் சுக்கிரனும் ராகுவும் சிறப்பாவே இருக்கறதால உங்க திறமையும் நிர்வாகத் திறனும் சோடை போகாது. பண விஷயம் திருப்தியாவே இருக்கும். குடும்பத்தில் விருந்து, கேளிக்கைனு சந்தோஷ நிலையே இருக்கும். பயணத்தில் அனுகூலத்தை எதிர்பார்க்கலாம். கலைத் துறையினருக்கு நல்ல வரவேற்பு இருக்கு. சிலருக்குச் சொத்துச் சேர்க்கையும் இருக்கலாம். வெளிநாட்டுத் தொடர்பு உற்சாகத்தைத் தரும். ஆனாலும் உடல் நலனில் அக்கறை காட்டறது அவசியம்.

**மிதுனம் :** *(மிருகசீரிஷம் 3-ம் பாதம் முதல் திருவாதிரை, புனர்பூசம் 3-ம் பாதம் வரை)*

மனசுல எப்பவும் ஒருவித உற்சாகம் இருந்துக்கிட்டே இருக்கறதால, உங்க குடும்பத்திலும் சந்தோஷம்தான் கொடிகட்டிப் பறக்கும். விருந்து, கேளிக்கைன்னு இந்த வாரம் ஜாமாய்ப்பீங்க. டிரெஸ், நகைகள்னு புதுசு எதையாவது வாங்குவீங்க. திருமதிக்கும் வாங்கிக் கொடுத்து சந்தோஷப்படுத்துவீங்க. கலைத்துறையினருக்கு நல்ல வளர்ச்சி தெரியும். தொழிற்சாலை, தோட்ட, சுரங்க வேலைகளில் இருப்பவர்களுக்கும் உற்சாகமான வாரம்தான். பொதுவா புது மனுஷங்ககிட்ட உஷாரா இருங்க. இல்லேன்னா அவங்ககிட்ட எதையாவது ஏமாந்து நிக்க வேண்டியிருக்கும்.

**கடகம் :** *(புனர்பூசம் 4-ம் பாதம் முதல் பூசம், ஆயில்யம் முடிய)*

சாதனைகளை ஏற்படுத்தறதுக்கான சந்தர்ப்பங்கள் கூடிவரும் வாரம். அரசாங்க விவகாரங்கள் ஏதும் இருந்தா, அதில் உங்களுக்கு அனுகூலமான போக்கு தெரியும். சிலருக்கு டிரான்ஸ்ஃபர் இருக்கும். சிலருக்கு ஆபீஸ் பொறுப்பு அதிகரிக்கும்; கூடவே சம்பளமும் அதிகரிக்கும். எதிர்பார்க்கிற காரியங்கள் நடக்கும். வெளிநாட்டுத் தொடர்புகளால் ஓரளவுக்கு அனுகூலம் இருக்கும். ஸ்பெகுலேஷன் விஷயங்களில் ரேஷன் பலன்தான். குழந்தைகள் நல்ல மார்க் வாங்கி சந்தோஷப்படுத்துவாங்க.

**சிம்மம் :** *(மகம், பூரம், உத்திரம் முதல் பாதம் முடிய)*

உங்க ஆளுமை வெளிப்படறதோடு, சில சாதனைகளையும் சாதிச்சுக்காட்டுவீங்க. கவர்மெண்ட் சமாசாரங்களில் நல்ல திருப்பம் தெரியும். கம்ப்யூட்டர், மின்னணு, பொறியியல் துறையில் இருந்தா வெற்றி நடை போடுவீங்க. கலைத் துறையினருக்குப் புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். அதனால், நல்ல ஆதாயமும் கிடைக்கும். வேலையில்லாதவங்களுக்கு நல்ல வேலை கிடைக்கும். வேலையில் இருக்கறவங்களுக்கு புரமோஷன் உறுதி. வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும்.

**கன்னி :** *(உத்திரம் 2-ம் பாதம் முதல் அஸ்தம், சித்திரை 2-ம் பாதம் வரை)*


முக்கியமான கிரகங்கள் உங்களை ஆதரிக்காததால மனசுல குழப்பமும் பயமும் இருக்கத்தான் செய்யும். ஆனாலும் சமாளிப்பீங்க. பண விஷயம் ஓரளவு சீராவே இருக்கும். வெளியூர் - வெளிநாட்டுத் தொடர்புள்ளவங்களுக்கு நன்மைகள் கிடைக்க சான்ஸ் இருக்கு. வீடு, நிலம் விஷயங்களில் எதிர்பார்த்த லாபம் கிடைக்காது. புதியவர்கள், குறிப்பா பிறமொழிக்காரங்ககிட்ட ரொம்பவே உஷாரா இருக்கணும். குழந்தைகளாலும் பிரச்னைகள் வரலாம்; பணப் பிரச்னையும் வரலாம். பயணத்தில் எச்சரிக்கை அவசியம்.

**துலாம் :** *(சித்திரை 3-ம் பாதம் முதல் சுவாதி, விசாகம், 3-ம் பாதம் வரை)*

காரியங்கள் சாதிக்கறதில்

## அக்னிசர்மா பக்கம்

பிரச்னை ஏதும் இருக்காது. வியாபாரிகள், விஞ்ஞானிகளுக்கு நல்ல வளர்ச்சி தெரியும். கலைத் துறையினருக்கு முன்னேற்றம் உறுதி. ஏற்றுமதி - இறக்குமதியாளர்களுக்கு நல்ல லாபம் காத்திருக்கு. அலுவலகப் பணியாளர்களுக்கு பிரமோஷன் கூடிவரும். இதுவரைக்கும் இருந்த பண நெருக்கடி விலகி ஓடிடும். எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வந்து சேரும். சிலருக்குப் பயணத்தில் ஆதாயம் கிடைக்கும். அரசியல்வாதிகள் நல்ல முடிவுக்கு வருவார்கள். காவல், ராணுவத் துறையினர் விழிப்புடன் இருப்பது அவசியம். இல்லேன்னா அதிர்ச்சி தரும் மாற்றங்களுக்கு ஆளாக வேண்டியிருக்கும்.




**விருச்சிகம்** : *(விசாகம் 4-ம் பாதம் முதல் அனுஷம், கேட்டை முடிய)*

உங்க பர்சனாலிடி வெளிப்படுகிற வாரம். கலை விஷயங்களில் ஈடுபாடு கூடும். அலுவலகப் பணியாளர்களுக்கு ஏற்றம் தெரியும். தொழிலாளர்களுக்கும் செழிப்பான பாதை தெரியும். பேச்சுத் திறமை, புத்திசாலித்தனத்தால சிலர் சாதனைகள் படைக்கற சான்ஸும் இருக்கு. பெண்கள் ஆண்களுக்கு ஒத்தாசையா இருப்பாங்க. இருந்தாலும் பண விஷயங்களில் சில முட்டுக்கட்டைகள் இருக்கத்தான் செய்யும். வீண் செலவுகள் கூடவே கூடாது. குறுக்கு வழிகளைப் பத்தி சிந்திக்கவே கூடாது.



**மீனராசிக்காரர் நரசிம்மராவுக்கு 'முக்கியஸ்தர்'கள் ரொம்ப உதவுவாங்களாம்!**



**தனுசு** : *(மூலம், பூராடம், உத்திராடம் முதல் பாதம் வரை)*

எதிர்ப்புகளை ஓட ஓட விரட்டியடிச்சுட்டு வெற்றிப் பாதையில் ராஜ நடை போடுவீங்க. வியாபாரிகளுக்கு முன்னேற்றம் உறுதி. வழக்கு, போட்டி பந்தயங்களில் வெற்றி நிச்சயம். இதுவரைக்கும் இருந்து வந்த பிரச்னைகள் காணாம போயிடும். புதிய சொத்துக்கள் வந்து சேருகிற வாய்ப்பு இருக்கு. சின்னச் சின்ன இடர்கள் வரும்னாலும் பக்குவமா நடந்துக்கிட்டா அதை ஊதித்த தள்ளிடலாம். மனசுக்கு இனிமையான விஷயங்கள் நடக்கும். சிலருக்குத் திடீர் அதிர்ஷ்டமும் உண்டு.



**மகரம்** : *(உத்திராடம் 2-ம் பாதம் முதல், திருவோணம், அவிட்டம் 2-ம் பாதம் வரை)*

ஏதாவது செய்யறபோது தடைகள் வந்து குறுக்கிடு செய்யற வாரம் இது. பண விஷயம் சாதாரணமாத்தான் இருக்கும். உழைப்பும் அலைச்சலும் அதிகரிக்கும். வீண் விரயங்களும் அதிகரிக்கும். புது முயற்சிகள் வேண்டாம். பயணமும் வேண்டாம். போட்டி கிட்டன்னு ஈடுபட்டா உள்ளதும் போயிடும். கணவன்/மனைவி/குழந்தைகள்... இப்படி ஒருவருக்கு ஒருவர் பிரச்னைகளைத் தரலாம். சுபகாரியங்களுக்கும் குறுக்கீடுகள் வரலாம். எதிலும் நிதானத்துடனும் புத்திசாலித்தனத்துடனும் செயல்பட்டா சங்கடங்களைத் தவிர்க்கலாம்.



**கும்பம்** : *(அவிட்டம் 3-ம் பாதம் முதல், சதயம், பூரட்டாதி 3-ம் பாதம் வரை)*


குடும்பத்தில் சுபகாரியங்கள் நடப்பதற்கான சூழ்நிலைகள் உருவாகும். ஸ்பெகுலேஷனில் லாபம் கிடைக்கும். வட்டிப் பணமும் பிரச்னையில்லாம வந்து சேரும். கலைத் துறையினருக்கு அனுகூலத்தோடு புதிய அனுபவங்களும் ஏற்படலாம். வியாபாரிகளுக்கு லாபம் கூடும். புதிய பொருள்கள் ஆடை, ஆபரணங்கள், வாசனாதி திரவியங்கள்னு எதையாவது வாங்கித் தள்ளுவீங்க. சிலருக்கு ஃபாரின் போற சான்ஸ் இருக்கு. இருந்தாலும் சில பிரச்னைகளும் வீண் செலவுகளும் வரத்தான் செய்யும். சமாளிப்பீங்க. சிலருக்கு வீடு மாற்றம் ஏற்படலாம். அது சொந்த வீடாத்தான் இருக்கும்னு சொல்ல முடியாது.



**மீனம்** : *(பூரட்டாதி 4-ம் பாதம் முதல், உத்திரட்டாதி, ரேவதி முடிய)*

முக்கியஸ்தர்களெல்லாம் உங்களுக்கு உதவிக்கரம் நீட்டத் தயாரா இருக்கறபோது உங்களுக்கு என்னங்க கவலை? கலைத் துறையினருக்கு செழிப்பான வாரம் இது. பெண்களுக்கு ஓஹோ வாரம்! புடைவை, நகைன்னு வாங்கிக் குவிப்பாங்க. விருந்து, உல்லாசம்னு குடும்பமே குதுகலமா இருக்கும். இருந்தாலும், அலைச்சல் அதனால மன உளைச்சல், அதனால உடல் நலக்குறைவு வரவும் சான்ஸ் இருக்கு. சிரத்தையும் பொறுப்பும் காட்டினா சங்கடங்களைச் சமாளிக்கலாம். கூடப் பிறந்தவங்க கிட்ட ரொம்பவும் ஆர்க்யூ பண்ணாதீங்க. அதனால கருத்து வேறுபாடு வந்து பிரச்னைகளும் வரலாம்!

# சிக்கன சிகாமணிகள்!



ஐந்து கிராமங்களை மாட்டு வண்டியில் விசிட் செய்யும் அமைச்சர்களுக்கு மட்டுமே ஒரு வெளி நாட்டுப் பயணம்.

சிறையில் சிகரெட்டிலிருந்து குளிர்பானம் வரை எல்லாம் கிடைக்கிறதாமே. சாப்பாடு மட்டும் அரசு ஏன் அளிக்க வேண்டும்? அதையும் கைதிகளே பார்த்துக் கொள்ளட்டும்.



"வெஜிடபிள் பிரியாணி சூப்பர்."

"சிக்கன் 65ஐ விடவா?"

இடைத் தேர்தல் எதற்கு? தேர்தலின் போதே "உங்கள் அபிமான வேட்பாளர் இறந்து விட்டால், அடுத்து யார்?" என்ற கேள்விக்கும் பதிலளிக்க வேண்டும்.



"அவருக்கு ஏதாவது ஆயிடுச்சுன்னா, இவராம்."

'அரசுச் செலவுகளைக் குறைக்க சிறப்பான யோசனை அளிக்கும் பொதுமக்களுக்குப் பரிசுகள்'- செய்தி

. பாதுகாப்புக்கு நிஜமாகவே கறுப்புப் பூனைகள்.




அரசு சாதனைகளுக்கு நாளிதழ் விளம்பரங்கள் இல்லை.



இலவச மின்சாரம் யாருக்கும் இல்லை.



''மின்சாரக் கண்ணா! பார்த்து தயவு பண்ணு.''

சொத்துக் கணக்கைக் காட்டி, ஒப்புக் கொள்ளப்பட்டால்தான் சம்பளம்.



''தியாகிங்கப்பா. எந்த மினிஸ்டருக்கும் சம்பளம் வேணாமாம்.''

— குல்லூ



• பார்வையாளர்கள்

# எருமைக்கும் நாய்க்கும் கட் அவுட்!

**கோவையில் தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் நடத்திய வெள்ளி விழா மாநில மாநாட்டுத் துளிகள்:**

● சினிமா நடிகர்களுக்கும் அரசியல் தலைகளுக்கும் கட்-அவுட்டும் பேனர்களும் வைப்பதைக் கண்டு சலித்துப் போன கோவை மக்கள், நகரெங்கும் 'மாறுபட்ட' பேனர்கள் கட்டியிருக்கக் கண்டு அசந்து தான் போயினர். உடுக்கடிக்கும் மனிதன். கோவணத்துடன் மலைவாசி. எதிர்பார்ப்புடன் சிறுமி. நர்த்தனம் புரியும் மங்கை. கதகளி ஆட்டம். நாய்க்கும் எருமைக்கும் கூட கட்-அவுட் வைத்து அசத்தியிருந்தனர் த.மு.எ.சவினர்! காந்திபுரம் பேருந்து நிலைய சிக்னல் பக்கம் கட்-அவுட்டில் எருமை மேல் படுத்திருக்கும் நாய்! அதைப் பார்த்துவிட்டு ரொம்ப யோசித்தாள் ஒரு சிறுமி.

"அஞ்சறிவு உள்ளதெல்லாம், அன்போடு வாழுது; ஆறறிவு படைச்ச சனம் அடிச்சுக் கிட்டு சாகுது..."

எழுத்துக் கூட்டிக் கூட்டிப் படித்து விட்டுத் திரும்ப வந்து அப்பாவிடம் கேட்டாள். "அதுக்கு என்னப்பா அர்த்தம்?"

– கேள்வி கேட்க வைப்பதும் யோசிக்க வைப்பதுமே பெரிய விஷயமல்லவா?

● மாநாட்டுக்கு முதல் நாளே – கோவை மத்திய பஸ் நிலையம் எதிரே துவங்கி விட்டது ஓவியக் கண்காட்சி. ஆயிரக்கணக்கில் நவீன ஓவியங்கள். ஹைகூ கவிதைகள். கூடவே அரசியலில் மதம் கலந்து விட்டதைக் காட்டும் கார்ட்டூன்கள். "ஓவியம் வெறும் காட்சி அல்ல. மொழி, உலகப் பொது மொழி" – சொன்னது ட்ராட்ஸ்கி மருதுவும் தமிழ் நாடனும்தான்!

"என்னதான் கவனமா பார்த்தும் நாலஞ்சு ஓவியங்களை 'சுட்டுட்டாங்க' சார். வாஜ்பாய் பற்றிய கார்ட்டூனை 'கட்' பண்ணியே எடுத்துட்டாங்க. அப்புறம்தான் நாலு ஓவியத்துக்கு ஒரு ஆள் காவல் நிற்கிறோம்" என்றார் கண்காட்சிப் பொறுப்பாளர் ஒருவர்.



● மாநாட்டில் த.மு.எ.ச தவிர்த்து, கலந்து கொண்ட வெளி வட்டார எழுத்துப் பிரமுகர்கள் பட்டியல் எக்கச்சக்கம். ஜெயகாந்தன், சிற்பி பாலசுப்பிரமணியம், தொ.மு.சி., தி.க.சி., வல்லிக் கண்ணன், சு. சமுத்திரம், திலகவதி, கோவை ஞானி.




• கல்கி நுழைவாயில்



• த.மு.எ.ச. வரலாறு நூல் வெளியீடு

பெரும்பாலானவர்கள் கலை இலக்கியம் சார்ந்து அரசியல் விஷயங்களையும் அங்கங்கே தொட்டுப் பார்த்தனர். பத்திரிகையாளர்கள் உட்பட பிரதிநிதிகளும் ஒரே ஒருவரிடம் மட்டும் சமகால அரசியல் சூழல் பற்றிய சொற்பொழிவை எதிர்பார்த்துக் கிடந்தனர். அவர் சீதாராம் யெச்சூரி. அவரிடம் புறப்பட்டதோ, முழுக்க முழுக்க உலகளாவிய கலை இலக்கியம் பற்றிய




• எருமை மேல் நாய்!

பேச்சு! இஸங்களின் மோதல். நோபல் பரிசு பெற்ற இலக்கியவாதிகள் பெரும்பாலும் மார்க்சிய சித்தாந்தவாதிகள் என்பதற்கான புள்ளி விவரங்கள்.

● மாநாட்டின் முகப்புக்கு கல்கி நுழைவாயில், அரங்குக்குப் புதுமைப்பித்தன் அரங்கம், கலை இரவுத் திடலுக்கு உடுமலை நாராயணகவி திடல் என்றெல்லாம் பெயர்கள். எழுத்தாளர்கள் மாநாட்டிலும் கலை இரவிலும் எங்கும் யாரிடமும் இவர்கள் பற்றிய வெளிப்பாடு காணோம். புதுமைப்பித்தன் குறித்து மட்டும் தொ.மு.சி. சில வரிகள் பேசினார். சிற்பி பாலசுப்பிரமணியம் மட்டும் வரவேற்புரையில் புதுமைப் பித்தனோடு கல்கியையும் இணைத்துப் பேசினார்.

"கல்கியை, பொன்னியின் செல்வன் படைத்தவராக மட்டும் பார்க்கக் கூடாது. அவர் அதில் காட்டிய காவிரிக்கரையையும், அங்கு நடந்த சைவ, வைஷ்ணவச் சண்டையை சித்திரித்து, அந்தக் காலகட்டத்து வரலாற்றுப் பதிவினைச் செய்திருப்பதையும், இம் மாநாட்டில் நினைவு கூர்ந்தே ஆக வேண்டும். அவருக்கு இது நூற்றாண்டு விழா. த.மு.எ.ச விற்கு வெள்ளி விழா. அது தான் முகப்பே கல்கி நுழைவாயிலாய்த் திகழ்கிறது" என்றார்.

● 'ஹை-லைட்' கடைசி நாள் இரவு நடந்த மத நல்லிணக்கக் கலை இரவுதான். மக்களிடமிருந்து மக்களுக்காக எடுத்துக் கொடுக்கப்பட்ட கலை. மாநாட்டுக்கு ஆயிரம் பேர் என்றால், கலை - இரவுக்கு இன்னொரு 'டிஜிட்' சேரும் போல் பெருகின மக்கள் வெள்ளம்! திறந்த வெளிச் சாலையில் உட்கார, நிற்க, நடக்கத் தடமில்லை. திடீரென்று அவ்வளவு கூட்டத்திலிருந்து புறப்பட்ட 'பாடை'! அங்கிருந்தே மேடைக்கு ஓடும் கலைஞர்கள். பிணத்திற்குப் பூத்தூவல். கிராமிய மணம் ததும்பும் வசனங்கள். கடைசியில் பிணமே எழுந்து பேச, 'மயானம்' நாடகம் ஆடியன்ஸுக்கு அதிர்ச்சி வைத்தியம்! அதைவிட, ஆண்களை விஞ்சி சுழன்று சுழன்று ஆடி குட்டிக் கர்ணம் அடித்த பெண்களின் தப்பாட்டம் ஏக பிரமிப்பு! மீசை முருகேஷின் தாளவாத்தியம் ஒரு பக்கம், ஐ. லியோனியின் நகைச்சுவைப்



# நம்பித்தான் ஆக வேண்டும்!

கோவிந்தாச்சார்யா காரை விட்டு இறங்கி அரங்கினுள் நுழையும்போது அவர் கூடவே ஒரு குரங்கும் நுழைந்து, அவர் மேடைக்குச் சென்று அமர்ந்தவுடன் அவரது அருகிலேயே அமர்ந்து கொண்டது! பி.ஜே.பி. கோவிந்தாச்சார்யா அல்ல; இவர் வேறே!

பெங்களூரில் உடுப்பியைச் சேர்ந்த கோவிந்தாச்சார்யா பகவத்கீதை சொற்பொழிவு நிகழ்த்தினார். அவரே எழுதியுள்ள கன்னட மொழியிலான வால்மீகி ராமாயண நூல் வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.

புத்தகங்களை வெளியிட கோவிந்தாச்சார்யா கட்டை எடுத்தபோது குரங்கு அதனை அவரிடமிருந்து வாங்கி தானே முடிச்சை அவிழ்த்து வண்ணக் காகிதங்களைப் பிரித்து புத்தகத்தை வெளியிட்டது. பிறகு நிகழ்ச்சியைக்கான வந்திருந்த சுமார் 350 பேர்களில் ஒருவராக அமர்ந்து கொண்டு, கோவிந்தாச்சார்யாவின் ஆன்மீகச் சொற்பொழிவு முடியும் வரையில் பிறருக்கு ஏதும் தொல்லை தராமல் கேட்டு விட்டுச் சென்று விட்டது!

பெங்களூர் ப. மூர்த்தி

---

பேச்சு இன்னொரு பக்கம். (சற்று நிற்க: லியோனி திரும்பத் தம் தாய்வீடு த.மு.எ.ச வில் வலுவாய்ப் பின்னிப் பிணைந்து விட்டாராம். இச்சங்கத்தின் துணைத் தலைவர் ஆகியிருக்கிறார்). டைரக்டர் அகத்தியன் பேசிய தன் சினிமா வாழ்க்கை வரலாறுக்கு, ஆடியன்ஸிடமிருந்து கிண்டலாய் விசில் சத்தம். மனிதர் 'டென்ஷனாகி' நன்றி சொல்லிக் கீழே வந்து விட்டார்.

● கலை இரவு மேடையில் அரசியலுக்கு இடமுண்டா? இங்கே உண்டு. சங்கரய்யா, நல்லகண்ணு, வடிவேலு, பீட்டர் அல்போன்ஸ். பீட்டர், ஒட்டுமொத்தமாய் சமகால அரசியல் தலைவர்களின் சுயநலப் போக்கை ஒரு பிடி பிடித்தார். "நேற்றுப் பேசியதை இன்று மாற்றிப் பேசும் அமைச்சர்களிடமிருந்து நாடு எப்படிக் காப்பாற்றப் படப் போகிறது? வேதனையோடு பேசுகிறேன். இச் சூழலில் இந்த நாட்டு மக்கள் எங்களைக் கூட நம்பத் தயாராயில்லை. எங்களுக்கு இல்லாத நம்பகத் தன்மை உங்களிடம் (கலைஞர்களிடம்) இருக்கிறது."

● கோவை குண்டு வெடிப்பில் பெருத்த சேதம் அடைந்த கடை அதிபர்கள் செகத் அலி, T.P. கிருஷ்ணன் (ஷோபா சில்க், ராஜேந்திரா டெக்ஸ்) இருவரும் மேடைக்கு வந்து கட்டிப் பிடித்துக் கொண்டதும், ஒருவர் மாற்றி ஒருவர் சால்வையை மாறி மாறிப் போட்டுக் கொண்டதும் கரையாதோர் நெஞ்சையும் கரைய வைத்தது.

"அவர் என்னை அப்பா என்றுதான் அழைப்பார். அவர் மனைவிதான் என் புது வீட்டிற்கு வந்து பால் காய்ச்சினார். எரிப்புக்கும்... வெடிப்புக்கும்... காரணம் எங்களுக்குள்ளிருந்த போட்டி மனோபாவம்தான் என்று சிலர் பிரசாரம் செய்தபோதுதான் உண்மையிலேயே வெடித்துப் போனோம்." நெக்குருகி அவர்கள் பேசியதில் கலங்கியது கூட்டம். சேதமடைந்த தொழில் மீண்டும் நடக்கிறது. மாநாடு நடத்த நன்கொடை தரும் அளவுக்குப் பெருகியிருக்கிறது.

● விடிய விடிய நடப்பதாக இருந்த கலை இரவு, இரண்டரை மணியுடன் 'கட்'. பன்னிரண்டு மணி வரைதான் காவல் துறை அனுமதி. இருந்தாலும் நிகழ்ச்சியின் போக்கில் காவல் துறையே அதனுடன் ஒன்றிப் போய் விட்டது போலும். கூட்டம் கலைந்து திருவிழா போல் திரும்பிச் செல்லும் வழியெங்கும் போலீஸ் வான்கள். காக்கி உடுப்புகள். மஃப்டியில் இருந்த ஸ்பெஷல் பிராஞ்ச் ஆபீஸர் ஒருவரை நெருங்கியபோது, "இது மாதிரி ஒரு பத்து நிகழ்ச்சி போட்டா போதும். எங்களுக்கு நிறைய வேலை குறையும்" என்றார்.


— கா.சு. வேலாயுதன்

# தேவதா உச்சாடனம்

## (பூஜா உபதேசம்)

எவர் எவர் என்ன தரத்தவராயினும்-அவரவர் உடலில் ஆக்க சக்திகள் இருக்கத்தான் செய்கின்றன. அவற்றை ஆய்ந்தெடுத்து ஆக்க சக்தி கொடுத்து ஊக்குவித்துவிட்டால் - உலகில் எந்தக் காரியத்தையும் உறுதியுடன் ஜெயங் கொள்ள முடியும். அதன் அடிப்படை வித்துதான் **தேவதா உச்சாடனம்.** பெய்யும் மழையை நிறுத்திடவும், பெய்யா மழையை வருவிக்கவும் ஏற்ற சித்துக்களை ஏற்படுத்திடும் பூஜையிது. இதனைத் தவறாது செய்து மனதினை சக்திமயமாக மாற்றிவிடில் - எடுத்த காரியம் எதுவாக இருப்பினும் வெற்றி கண்டு வியக்கலாம். அக்கால சித்தர்கள் ஆக்கி வைத்த அழியாக்கலை எதையும் ஆக்கும் ஆற்றல் பெற்ற அரிய சக்தியைத் தரும் பூஜை. கோடி கோடியாக செல்வம் பெற குபேரன் செய்த பூஜையிது. அதே அற்புத குபேரத்துவம் பெற்றிட இலங்கேஸ்வரன் ராவணன் செய்த பூஜை இது. இதனை செய்து உரிய உயர் செல்வ நிறைவு பெறுகின்ற விதி அமைப்பு உடையோர் இதனை உபதேசம் பெற்று உயர்ந்தே தீருவர். இன்றைய நாளில் இவ்வரிய பூஜை கற்றார் இல்லையோ என ஐயுறும் வேளையில் அநேக ஆன்மீக பெரியவர்களின் வேண்டுக் கோளுக்கிணங்க இதனை உபதேசம் பெற ஜாதக அமைப்பு உடையாருக்கும் அருள் சக்தியை கெடுக்கும் தீய சக்திகளான - மதுபானம் செய்தல், புகை பிடித்தல், பொடி, புகையிலை போடுதல் ஆகிய தீய பழக்கங்கள் இல்லாதாருக்கும், பரிசீலித்து இதனை உபதேசம் செய்ய இசைந்து இந்த விளம்பரத்தை பிரசுரிக்கின்றோம். எனவே இவ்வரிய பூஜை கற்றிட உரிய விதி அமைப்பு பெற்றவர்களின் கண்களில் தான் இந்த விளம்பரம் தென்படும். உரிய காலத்தில் மனு செய்து கொள்ளும் ஆர்வமும் வாய்ப்பும் ஏற்படும். அவ்வித அமைப்பு இருந்து இந்த உபதேசம் பெற்றுவிடில் இவ்வுலகில் ஒரு கோடீஸ்வர வாழ்வடைவது உறுதி. எனவே 12.7.99 தேதிக்குள் ஜாதக நகலுடன் மனு செய்து கொள்ளுங்கள். அத்தேதி தவறிடில் பின் வேண்டாம். ஏனெனில் கடவுள் அனுமதி இல்லை என்று பொருள். வாழ்வில் செல்வ உயர்வு பெறுகின்ற 16 பாக்கியங்களை பெற்று உயருகின்ற விதி அமைப்பு இருப்பின் உறுதியாக உரிய காலத்தில் மனு செய்து கொள்ளும் கடவுள் அருள்கிட்டும்.

(இதனை பெண் இனத்தாரும் கற்று உரிய நலனை உடனடியாகப் பெறலாம்)



பிரபல ஜோதிடர், ஜோதிட ஆசிரியர்,

**ஸ்ரீமத் ஜெயவீர தேவா, யோகி**

இராஜயோக பயிற்சியாளர்

பிளாட் எண்: 204, அண்ணா நகர்,

மதுரை–625 020.

தொலைபேசி: 533412, 650576

# வட்டமேஜை

'காபந்து அரசின் கால்பந்தாட்டம்' என்ற தலையங்கம் படித்தேன். அனுதாப அலை வீசி வரும் மத்திய அரசுக்கு, அத்துமீறிய செயல் கூடாது என்பதைச் சுட்டிக்காட்டி, எச்சரிக்கை விடுத்த விதம் மிகச் சிறப்பாகவே இருந்தது.
கும்பகோணம், எஸ்.கே. மூர்த்தி.

'சாட்டையடித் தீர்ப்பு' துணைத் தலையங்கம் நல்ல இடித்துரை. இவையெல்லாம் போயஸ் ராணியை எதுவும் செய்யாது. தேர்தலுக்குள் தண்டனை கிட்டும் வகையில் ஒன்றிரண்டு வழக்காவது முடிய வேண்டும். நடக்குமா?
மதுரை-9, இரா. கல்யாணசுந்தரம்.

அரசு ஊழியர்கள் என்றாலே 'கையூட்டு' பெறுபவர்கள், எந்த வகையிலாவது தமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்பவர்கள் என்ற பரவலான மக்கள் எண்ணத்துக்கிடையே கே.கே. ஏகாம்பரம் போன்ற அரசு ஊழியர்களும் இருக்கிறார்கள் என்பது ஓர் ஆறுதல்.
திருவாரூர், ஆரூர் அரசு.

## தேர்தலுக்கு முன் தண்டனை கிடைக்குமா?

'புதிய வோட்டணி!' நல்ல டைட்டில்! 'இப்படியிருக்கலாம் இவர்கள் சந்திப்புகள்!' கற்பனைக் கட்டுரை செமஜாலிதான் என்றாலும், சுர்ஜித் - பாசு சந்திப்பு கற்பனை டாப்!
தூத்துக்குடி-2, சிவராமசுப்பிரமணியன்.

நல்லகண்ணு பற்றிய கட்டுரை மனதைத் தொட்டது. இப்படிப்பட்ட உண்மைத் தியாகிகளைக் கல்கி மூலம்தான் தெரிந்து கொள்ள முடிகிறது.
திருத்தங்கல், எ. சிதம்பரம்.

அண்மையில் "ராஜஸ்தான்" படம் பார்த்தேன். இன்று உங்கள் விமர்சனம் கண்டேன். மிகவும் சரியாக இருந்தது. பாராட்டுக்கள்.
மும்பை-19, ஜான் சாமுவேல்.

'அப்படி என்ன அவசரமாம்...?' என்னும் தலைப்பிலான பேட்டிக் கட்டுரை நான் ஆவலுடன் எதிர்பார்த்த சிறப்புக் கட்டுரைகளில் ஒன்று! சில வருடங்களுக்கு முன், குறித்த நேரத்தில் கிடைக்க வேண்டிய எனது தட்டெழுத்துத் தேர்வுச் சான்றிதழ் ஒன்றரை மாதம் கால தாமதமாகத் தபாலில் எனக்குக் கிடைத்தது. அதன் விளைவு எனது நிறுவனத்தில் எனக்குக் கிடைக்க வேண்டிய கிளார்க் பதவி பறிபோனது. இக்கட்டுரை இச்சம்பவத்தைத்தான் எனக்கு உடனே நினைவுபடுத்தியது.
திருச்சி-16, எம். காமராஜ்.

### தி.மு.க.காரரின் ஆக்கிரமிப்பை உறுதி செய்யும் ஒரு விளக்கம்

கல்கி 16.5.99 இதழில் வெளியான 'தலைவருக்கு ஷாக் தரும் கட்சிக்காரர்கள்' கட்டுரைக்கு ஒரு விளக்கம். நங்கநல்லூர் ஸ்ரீ அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயிலுக்கு வழங்கப்பட்டுள்ள நிலம், அரசே வழங்கியது. 80-ம் ஆண்டிலேயே முக்கால் ஏக்கர் நிலத்தை அரசு வழங்கியிருந்தாலும், குளம் சுத்தம் செய்யப்பட்ட பிறகுதான், அரசால் அளிக்கப்பட்டு முழுமையாக வழங்கப்பட்டது. அந்த நிலம் இப்போது புதிதாகக் கொடுக்கப்பட்டதல்ல.

1996-ல் தி.மு.க. நபரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு, பிறகு நகராட்சியால் இடித்துத் தள்ளப்பட்ட இடம், அரசால் கோயிலுக்குக் கொடுக்கப்பட்ட மேற்படி நிலம்தான். அதே நபரால் மீண்டும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டது பற்றி மாவட்ட ஆட்சியருக்கு முறையிட்டோம். அவர், ஆக்கிரமிப்பை அகற்றித் தருமாறு வட்டாட்சியருக்கு உத்தரவிட்டுள்ளார்.
நங்கநல்லூர், சு. முத்துமணி,
செயலர், ஸ்ரீஅர்த்தநாரீஸ்வரர் பக்த சமாஜம்

### திருத்தம்

கல்கி 30.5.99 இதழில் ஓரிரவு; இன்னொரு இரவு என்ற கட்டுரையில் மஹாபெரியவாள் ஜெயந்தி தினம் வைகாசி விசாகம் என தவறாக வெளியாகி விட்டது. வைகாசி அனுஷம் என்று திருத்திக் கொள்ள வேண்டுகிறோம். தவறுக்கு வருந்துகிறோம்.
– ஆசிரியர்.

# நாசகார நாசிர்!




• கார்கில் - எல்லைப் பகுதி

இந்திய - பாகிஸ்தான் எல்லைப் பகுதி கார்கில் ஜம்மு - காஷ்மீரில் இருக்கிறது. இங்கே சுமார் நாநூறுக்கும் மேற்பட்ட தீவிரவாதிகளை பாகிஸ்தான் அனுப்பி வைத்திருக்கிறது. இந்தத் தீவிரவாதிகள் புஷ்ட்டு மொழி பேசும் ஆப்கானிஸ்தான்காரர்கள் என்று சொல்லுகிறார்கள். இப்படிச் செய்யத் தூண்டியவர் மத அடிப்படைவாதியும், முன்னாள் ஐஎஸ்ஐ தலைவருமான ஜெனரல் ஜாவேத் நாசிர். பாகிஸ்தான் குருத்வாரா பிரபந்தக் கமிட்டியின் தலைவர்! (பஞ்சாபில் உள்ளது போல, பாகிஸ்தானி லும் புகழ் பெற்ற குருத்வாராக்கள் உள்ளன.)

இவரை பிரபந்தக் கமிட்டியின் தலைவராக அரசு நியமித்த உடனேயே, காலிஸ்தான் இயக்கத்தை ஆதரிக்கும் பணக்கார சீக்கியர்கள் உள்ள லண்டனோடு தொடர்பு கொண்டார். ஆப்கானிஸ்தானில் உள்ள தீவிர மத அடிப்படைவாதிகளுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டார்.



• நவாஸ் ஷரீஃப்

இந்தியாவிலுள்ள சீக்கியர்கள் எல்லாம், ஜாவேத் நாசிரை குருத் வாரா பிரபந்தக் கமிட்டி தலைவராக நியமித்ததை எதிர்த்துக் கடுமையாக ஆட்சேபம் தெரிவித்தார்கள். பஞ்சாப் முதல்வர் பிரகாஷ் சிங் பாதல் வாஜ்பாயுடன் லாகூர் போனபோது அவருக்கு ஆட்டுக்குட்டியெல்லாம் வழங்கிக் கௌரவித்தவர்கள், அவர் இதற்கு ஆட்சேபம் எழுப்பியபோது, கண்டு கொள்ளவே இல்லை! சீக்கிய குருத்வாரா பிரபந்தக் கமிட்டி தலைவராக ஒரு சீக்கியரை அல்லவா நியமித்திருக்க வேண்டும்! ஒரு முஸ்லிமை, அதிலும் முன்னாள் ஐஎஸ்ஐ. தலைவரையா நியமிப்பது என்று இந்திய சீக்கிய சமூகம் கண்டனக் குரல் எழுப்பியிருக்கிறது. ஆனால் யு.கே., யு.எஸ்.ஏ., கனடா ஆகிய நாடு களில் வசிக்கும் சீக்கிய தீவிரவாதிகளின் ஆதரவைப் பெற்று, பஞ்சாபில் மறுபடி குழப்பம் விளைவிக்க இதுதான் நல்ல வழி, சரியான

சந்தர்ப்பம் என்று பாகிஸ்தான் அதிபர் நவாஸ் ஷரீபை நம்ப வைத்திருக்கிறார் ஜாவேத் நாசிர்.

ஜாவேத் நாசிர் பேநசிர் புட்டோவுக்கு வேண்டாதவர். காலிஸ்தான் இயக்கம் தீவிரமாக இருந்தபோது, இந்தியாவில் கலகம் உண்டாக்க நினைத்த இவரை பேநசிர் புட்டோ ஆதரிக்கவில்லையாம். அதுவுமல்லாமல் அவரை வீட்டுக்கும் அனுப்பி விட்டார் பேநசிர். இந்தக் காரணங்களால் இவர் இப்போது நவாஸ் ஷரீபுக்கு வேண்டப்பட்டவர் ஆகிவிட்டார்!

நவாஸ் ஷரீபுக்கு பாகிஸ்தானிலேயே இப்போது எதிர்ப்பு உருவாக ஆரம்பித்திருக்கிறது. பொருளாதாரம் ஒரே சிக்கலில் இருக்கிறது. பலுசிஸ்தானிலும், வட மேற்கு எல்லைப் பகுதியிலும் அரசியல் குழப்பங்கள் தோன்றியிருக்கின்றன. பாகிஸ்தான் முஸ்லிம் லீகில் இப்போது நிலவி வரும் அதிருப்தி வெளிப்படையாகத் தலைகாட்ட ஆரம்பித்துவிட்டது. ஷரீப் குடும்பத்தினரின் லஞ்ச வழி சொத்துக் குவிப்பு பற்றி, பிபிசியின் டீவி. குழு வேறு படமெடுத்துத் தள்ளிக் கொண்டிருக்கிறது.

போதாததற்கு, முன்னாள் அமைச்சரும் இன்னாள் பத்திரிகையாளருமான நஜாம் சேதியின் கைது வேறு! தமது குடும்பத்தினரின் பிஸினஸ் வசதிகளுக்காக பாகிஸ்தானிய வங்கிகளில் இருந்து பெற்றுக் கொண்ட கடன்களைத் திரும்பச் செலுத்தவே இல்லை நவாஸ் ஷரீப். லண்டன் உட்பட ஏராளமான இடங்களில் சொத்துச் சேர்த்திருக்கிறார் என்று எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு. (இத்தனைக்கும், பிரதமராகப் பதவி ஏற்றபோது மிஸ்டர் கிளீன் என்று தம்மை எல்லோரும் நினைக்கிற மாதிரி வேஷம் போட்டு அதில் ஓரளவு வெற்றியும் கண்டார்!) இப்போது, 'உங்களுக்கு ஒரு நியாயம். பேநசிருக்கு ஒரு நியாயமா?' என்று எதிர்க்கட்சிகள் கேட்கின்றன. அதனால், இப்போது உள்நாட்டில் மக்களின் கவனத்தைத் திசை திருப்ப கார்கில் பிரச்னையை விட்டால் வேறு வழியில்லை என்ற முடிவுக்கு வர, நவாஸ் ஷரீபை ஆட்டி வைக்கிறார் ஜெனரல் ஜாவேத் நாசிர்!

காஷ்மீர் பண்டிட்டுகள் வசிக்கும் பகுதிகளிலிருந்து அவர்களை விரட்டும் பணியில் ஓரளவு வெற்றி கண்ட பின், தோடா, ரஜவுரி, பூஞ்ச் போன்ற மலைப் பகுதிகளில் இருக்கும் இந்துக்களைத் தீவிரவாதக் கும்பல் மூலம் வீடு-வாசலை விட்டு ஓட்டும் பணியைத் தொடர்ந்தது ஷரீப் அரசு. காரணகர்த்தா ஜாவேத் நாசிர்தானாம்.

இப்போது அதன் அடுத்த கட்டம்தான் கார்கில் அதிரடி என்கிறார்கள். இவ்வளவு தூரம் பாக். ஊடுருவ, கணிசமான காலம் ஆகியிருக்கும். அத்தனை நேரமும் இந்திய உளவுத் துறை என்ன செய்தது? என்ற கேள்வியும் எழுகிறது. இந்திய விமானப்படை, தீவிரவாதிகளை வீழ்த்தி விட்டது என்று தகவல்கள் வந்தாலும் பிரச்னை இப்போதைக்கு ஓயாது என்றுதான் சொல்கிறார்கள்.

**— சித்தார்த்**



"இருந்தாலும் தலைவிக்கு இப்போ தன்னம்பிக்கையா?"
"ஏன்?"
"தனி கோர்ட் செல்லும்னு சுப்ரீம் கோர்ட் சொல்லிடுச்சேன்னு கேட்டா, 'தனி கோர்ட் செல்லும்னா, அப்ப தனியார் கோர்ட்டும் செல்லும்'னு மறுபடி வாதாடி, தானே ஒரு கோர்ட் அமைக்க யோசிக்கறாங்களாம்!"
— ஜக்கு



"கடைக்காரரே! அரிசில ஒரே புழுவா இருக்குதே!"
"ஏசியாண் அரிசிதானே கேட்டீங்க. அட்ஜஸ்ட் பண்ணிக்கங்க!"
— போலன்

'நேரு பிரதமராக இருந்தபோது அணைக்கட்டுகள் கட்டினார். மு.க. ஸ்டாலின் மேயராக இருந்து, மேம் பாலங்கள் கட்டி வருகிறார். அதனால் ஸ்டாலின் இந்தியாவின் பிரதமராக வர வேண்டும்' என்று சென்னை மாநகர கவுன்சிலர் ஒருவர் கவுன்சில் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்.

இந்தக் கணக்கில் பார்த்தால் நம் அரசியல் கட்சிகள் ஒவ்வொன்றும் தங்கள் தலைவர் ஒருவரைப் பிரதமராக்க யோசனை சொல்ல மாட்டார்களா என்ன? இதோ, நாம் முன் கூட்டியே அவர்களது பேச்சைக் கற்பனை செய்து விட்டோம்.

# இவர்கள் மட்டும் பிரதமர் ஆகக் கூடாதா?

### பீட்டர் அல்ஃபோன்ஸ் – த.மா.கா :

தலைவர் மூப்பனாரைவிட பிரதமர் பதவிக்கு ஏற்றவர் வேறு யாருமே இல்லை. வாரத்தில் 433 பஞ்சாயத்துத் தலைவர்களை நேரில் பார்த்து, மாசத்தில் 1,31,425 தொண்டர்களைக் களத்தில் சந்தித்து, அவர்கள் சொல்லுவதைக் கேட்டு அதிகம் குழப்பம் அடையாமல் கொஞ்சமாகக் குழம்பிப் போய், அடுத்தக் கட்ட நடவடிக்கையாக இன்னும் 2,15,438 தொண்டர்களைச் சந்தித்தும் புதுக் குழப்பம் ஏதும் அடையாதவர் எங்கள் தலைவர். இப்படி லட்சக் கணக்கான அடிமட்டத் தொண்டர்களின் கருத்துக்களைக் கேட்டு, தமது கருத்து என்ன என்பதையே மறந்து விடும் அளவுக்கு மற்றவர் எண்ணங்களுக்கு மதிப்புக் கொடுப்பவர்!

சோனியா எங்கள் கட்சிக்குத் தலைவராக இல்லாவிட்டாலும் கூட, அவர் கட்டளைக்காகக் காத்திருக்கிறேன் என்று, பிரிந்து வந்து மூன்று வருடம் ஆன பிறகும் கூடச் சொல்லிக் கொண்டிருக்கும் விசுவாசம் மிக்கவர்தான் எங்கள் தலைவர். அவர் பிரதமர் ஆனால், தினசரி 10, ஜன்பத் இல்லம் சென்று, சோனியா பேச்சைக் கேட்டு இந்தியா முழுக்க ராஜீவ் ஆட்சியையும், தமிழகத்தில் மட்டும் காமராஜர் ஆட்சியையும் அமைப்பார்.


### தி.சு. கிள்ளிவளவன் – தமிழக ராஜீவ் காங்கிரஸ் :

கேட்கிறவர்களுக்கு எல்லாம் காஸ் கனெக்ஷன். அப்ளை செய்தவர்களுக்கு எல்லாம் அங்கேயே பெட்ரோல் பங்க் என்று மாநிலம் முழுக்க ஆயிரக் கணக்கில் அள்ளிக் கொடுத்திருப்பவர் வள்ளல் வாழப்பாடியார். அவர் மட்டும் பிரதமர் ஆனால், தபால் ஆபீஸ் மாதிரி பெட்ரோல் பங்குகளும், ஒயின்ஷாப் மாதிரி காஸ் ஏஜென்சிகளும் முக்குக்கும் மூலைக்குமாக இயங்கி மக்களுக்குச் சேவை செய்யும். தமிழ் நாட்டில் பாலும் தேனும் ஓடுகிறதோ இல்லையோ, பெட்ரோலும் டீசலும் பெருக்கெடுத்து ஓடும்.

'கூட்டணி ஆட்சி என்று வந்துவிட்டால் கொள்கைகளுக்கு அங்கே இடமில்லை' என்று இவரைவிட அப்பட்டமாகச் சொன்ன தலைவர் வேறு யார் இருக்கிறார்கள்? எனவே, இவர் பிரதமர் ஆனால், கொள்கை-குறிக்கோள் என்று அலட்டிக் கொள்ளாமல் எல்லாருக்கும் நல்லவராக இருப்பார்.

### கா. காளிமுத்து – அ.இ.அ.தி.மு.க. :

பா.ஜ.க. ஆட்சிக் கவிழ்ப்புக்கு 42 சூட்கேசுகள் மட்டுமே டில்லிக்குக் கொண்டு சென்றார் எங்கள் புரட்சித் தலைவி. பிரதமர் பதவி ஏற்றால், அதைப் போல நூறு மடங்கு சூட்கேசுகள் அவருக்குத் தேவைப்படும். சூட்கேஸ் இண்டஸ்ட்ரி அதனால் பெரிதும் வளர்ச்சி அடையும். பிரதமரின் ரேஸ் கோர்ஸ் சாலை இல்லத்தில் உடன் பிறவா சகோதரி சசிகலாவும், ஆயிரக் கணக்கான சூட்கேசுகளும் மட்டுமே இருக்க முடியும். எனவே புரட்சித் தலைவி வழக்கம் போல மௌரியா ஷெரட்டன் ஓட்டலிலேயே தங்குவார். அதனால் வாடிக்கையாளர் அங்கு தங்குவது முடியாது போகும். அவர்கள் எல்



லாம் வேறு ஓட்டல்களைத் தேடிப் போகும் போது மற்ற ஓட்டல்களின் பிஸினஸ் பெருகும். இந்த நன்மைகளுக்காகவே புரட்சித் தலைவிக்கு பிரதமர் பதவியைத் தங்கத் தட்டில் வைத்து வெள்ளிக் கரங்களால் வழங்கலாம்.

## ஜி.கே. மணி – பா.ம.க. :

ஒரு காலத்தில், வெட்டுங்கள் மரத்தை என்று எங்கள் தலைவர் சொன்னவுடன், மரத்தை வெட்டி ஓரத்தில் கூடப் போடாமல், சாலை நடுவில் போட்டுச் சாதனை படைத்தவர்கள் நாங்கள். இன்றைக்கு அதே டாக்டர் ஐயா, மரங்களை நடுங்கள் என்று கட்டளை இட்டவுடன், அவர் முழு மரங்களை நடச் சொல்லவில்லை; செடியைத்தான் நடச் சொல்லுகிறார் என்று புரிந்து கொண்டு, குட்டிக் குட்டிச் செடியாக நிறைய நட்டு வைத்திருக்கிறோம். அவை இன்னும் இருபது வருடங்களில் பெரிய பெரிய மரங்களாக வளர்ந்து, டாக்டர் ஐயா பிரதமர் ஆனவுடன், 'வெட்டுங்கள்' என்றால் வெட்டத் தயாராக இருப் போம். வெட்டுவதற்குக் காசு கேட்க மாட்டோம். அந்தச் செலவு அரசுக்கு மிச்சமாகும் என்று ஆணித்தரமாகச் சொல்ல விரும்புகிறோம்.

## திண்டிவனம் ராமமூர்த்தி – இ. காங்கிரஸ் :

சோனியாதான் இந்தியாவின் நிரந்தரப் பிரதமர். இத்தாலி மக்கள் அவரை ஏற்றுக் கொண்டால், இத்தாலியில் கூட அவர் ஆறுமாதம் பிரதமராக இருக்கலாம். மீதி ஆறு மாதம் இந்தியாவில். இதற்கு வேண்

## TV கார்னர்

### விமர்சிப்பவர், டீவி தொடர் எழுத்தாளர் ரமணீயன்

முன்னேயெல்லாம் சீரியல்களுக்கு மட்டும் தான் 'தொடரும்' போட்டுக் கொண்டிருந்தார்கள். அப்புறம் பாடல் ஆல்பங்களுக்குத் 'தொடரும்' போட ஆரம்பித்தார்கள். அப்பாஸும், அந்த அழகான பெண்ணும் (ப்ரீத்தி?) காதலித்துக் கல்யாணம் செய்து கொள்ளும் பாடல். இப்போது விளம்பரங்களுக்கும் 'தொடரும்'! ஒரு கோப்பை குளிர்பானத்துக்காக டெண்டுல்கர் வேஷத்தில் கிரிக்கெட் மைதானத்துக்குள் நுழைந்துவிடும் ஷாருக்கானை 'பாட்' செய்ய உள்ளே அனுப்பிவிடுகிறார் காப்டன். அதிர்ச்சியுடன் விழிக்கிறார் ஷாருக். விளம்பரத்தில், தொடர்ச்சியும் சுவையாகவே இருந்தது.



'மகளிர் மட்டும்' படம் (விஜய்). 'பஞ்சமி' (சன்) இரண்டையும் பார்த்தபோது ஒரு குழப்பம் ஏற்பட்டது.

ஒரே ஊர்வசியால் எப்படி ஒன்றில் வெளுத்து வாங்க முடிகிறது, மற்றதில் சொதப்ப முடிகிறது? பஞ்சமியைத் தயாரிப்பதும் அவரே. ஒருவேளை உபரிப் பொறுப்பின் சுமை, நடிப்பின் சிறப்பை மங்கடித்து விட்டதோ?

நம்மவர்கள் நன்றாகச் செய்கிறார்கள் என்பது சந்தோஷமான விஷயம்.

டிராவிடும், கங்கூலியும் ஸ்ரீலங்கா பந்து வீச்சை சட்னி செய்து கொண்டிருந்தது கண் கொள்ளாக் காட்சிதான். நம்மூர் ராபின்சிங் ஐந்து விக்கெட் வீழ்த்தி, பாய்ந்து விழுந்து பந்தைத் தடுத்தது அதை விட சந்தோஷம்.

He is worth his weight in Gold என்று காவஸ்கர் பாராட்டியபோது திறமைக்கு வயசு ஒரு தடை இல்லை என்ற உண்மை நிரூபணமாயிற்று.

போனவாரம் நள்ளிரவு தாண்டிய ஒன்றரை மணிக்கு Star World பார்த்தேன்.

'Do it yourself Mr. Bean' என்று ஒரு தொடர்.

அறைக்கு பெயிண்ட் அடிக்க முனையும் ஹீரோ பலவகையில் முயன்று, கடைசியில் ஓர் உத்தி கண்டு பிடிக்கிறான். அறையில் இருக்கும் பொருள்களை எல்லாம் மூடிவிட்டு, பெயிண்ட் டப்பாவில் ஒரு யானை வெடியைச் செருகி, திரியைப் பற்றவைத்துவிட்டு கதவை மூடிக் கொண்டு வெளியே ஓடிவிடுகிறான்!

கொஞ்சநேரத்தில் வெடிச்சத்தம்! சந்தோஷத்துடன் அறைக்கு ஓடுகிறான். வெடியில் சிதறிய பெயிண்ட் சுவரில் சீராகப் பரவியிருக்கிறது!

திட்டம் வெற்றி. சந்தோஷத்துடன் எல்லாப் பக்கமும் திரும்புகிறான். ஒரு சுவரில் மட்டும்.... மறு ஒளிபரப்பு வரும். என்ன நடந்தது என்பதை நீங்களே பார்த்துக் கொள்ளுங்கள்.

தொகுப்பு : **ஜி.எஸ்.எஸ்.**

டிய சட்டத் திருத்தத்தை கபில் சிபலிடம் சொன்னால், அவரே செய்து விடுவார். சரத் பவாரும், சங்மாவும், தாரிக் அன்வரும் இத்தாலியில் காலடிகூட எடுத்து வைக்க முடியாது. எங்களுக்குள் திண்டிவனம் கோஷ்டி, அன்பரசு கோஷ்டி, குமரி அனந்தன் கோஷ்டி, எம்.பி. சுப்பிரமணியம் கோஷ்டி எல்லாம் இருப்பது உண்மைதான். (முன்பு பிரபு கோஷ்டி கூட இருந்தது. இப்போது அவர் அட்ரசே இல்லை!) ஆனால் பிரதமர் பதவி என்றால் எங்கள் கோஷ்டி ஒரே கோஷ்டி – அது சோனியா கோஷ்டி தான். இதுவே எங்களைப் பொறுத்தவரை பெரும் சாதனை. கோஷ்டிகளும் வேஷ்டிகளும் அப்படியே இருக்க, சோனியா பிரதமர் ஆவதுதான் முறை.

### சந்திரலேகா – ஜனதா கட்சி :

எங்கள் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி பிரதமர் ஆனால் வேறு அமைச்சர்கள் யாருமே அமைச்சரவையில் இருக்க மாட்டார்கள். எனவே அரசாங்கத்துக்கு லாபம். என்னைத் தவிர வேறு தொண்டர்கள் குறிப்பிட்டுச் சொல்லும்படி இல்லாததால் பொதுக் கூட்டச் செலவும் மிச்சம். இதை விட நல்ல காரணம் வேறு வேண்டுமா? இட்லி ஷாப் பிரச்னை முதல் இஸ்ரோ ஏவுகணைப் பிரச்னை வரை எல்லாவற்றையும் சுவாமியே தீர்த்து வைப்பார். போலீஸ் துறைச் செலவு குறைச்சல்!

### செஞ்சி ராமச்சந்திரன் – ம.தி.மு.க. :

ஆங்கிலத்திலும் தமிழிலும் ஆங்காரத்தோடு பேசும் அடலேறு எங்கள் தலைவர் வைகோ. பிரச்னைகள் என்று வந்தால் சந்திக்கவும், சமாளிக்கவும் தெரிந்தவர். கலைஞரையும், அவர் குடும்பத்தாரையும் கூட்டம் கூட்டமாகத் திட்டித் தீர்த்துவிட்டு அவரையே சந்திக்கவில்லையா? ஜெ. அணியிலிருந்து தி.மு.க. அணிக்குத் தாவ வேண்டிய பிரச்னை வந்தபோது அழகாகச் சமாளிக்கவில்லையா? 'தனிக்குடித்தனம் போன மகன் அப்பாவைப் பார்க்க வந்தது போல் உணர்ந்தேன்' என்று 'டச்'சிங்காகப் பேசவில்லையோ..! பிரதமரான பிறகும் இப்படிப் பிரமாதமான உதாரணங்கள் தந்து பாக். ஊடுருவலைக் கூட சமாளிப்பார்!

— **சாருகேசி**



# பத்து ரூபாய் பரவசம்!

எனக்குத் தெரிந்த கோவை நகர மில் அதிபர் ஒருவர். இரண்டு பிள்ளைகள் அவருக்கு. வசதியான குடும்பம். இரண்டு பிள்ளைகளுக்கும் பெரிய இடங்களில் சம்பந்தம் பேசி, விமரிசையாகக் கல்யாணம் செய்து கொடுத்தார். கையோடு, பாகப்பிரிவினை கேட்டார்கள் பிள்ளைகள். மொத்த சொத்தையும் இரண்டாகப் பிரித்துக் கொடுத்து விட்டார். அதைத் தொடர்ந்து அப்பாவையும் அம்மாவையும் யார் வைத்துக் கொள்வது என்ற பிரச்னை எழுந்தது. இரண்டு பேரையும் ஒருவரே வைத்துக் கொள்ள வேண்டாம் என்பதில் இருவரும் கருத்து ஒற்றுமை கொண்டிருந்தார்கள்.

கடைசியில் அப்பாவை ஒரு பிள்ளையிடமும், அம்மாவை ஒரு பிள்ளையிடமுமாக வைத்துக் கொள்ளுவது என்று கலந்து பேசி முடிவெடுத்தார்கள்.

தாம் பெற்று வளர்த்த பிள்ளைகள், பெற்றவர்களையே பாரமாக நினைக்கிறார்களே என்ற ஏக்கம், பெரும் மனவருத்தத்தை அளித்தது அவர்களுக்கு. இந்த வருத்தத்தை அவர்கள் வெளியிலும் சொல்ல முடியாத இக்கட்டான சூழ்நிலை. அந்தச் சமயத்தில் ஹார்ட் அட்டாக் வந்து, அப்பா மரணமடைந்தார்.

அப்பாவின் இறுதிச் சடங்குச் செலவுகளை இரண்டு மகன்களும் சமமாக ஏற்றுக் கொண்டனர். அடுத்து அம்மா யார் வீட்டில் இருப்பது என்ற கேள்வி எழுந்தது.

"அப்பா, என் வீட்டில்; அம்மா உன் வீட்டில் என்பது நம் முடிவு. இப்போது அப்பா போய் விட்டதால், தொடர்ந்து அம்மாவை நீயே வைத்துக் கொள்" என்றார் ஒரு மகன்.

'இரண்டு பேரும் உயிருடன் இருந்த போது அந்த ஏற்பாடு. ஆனால், இப்போது அம்மா மட்டுமே உயிருடன் இருப்பதால், ஆளுக்குப் பதினைந்து நாள் வைத்துக் கொள்ள வேண்டும்!' என்பது இன்னொரு மகனின் வாதம். கடைசியில் ஆளுக்கு இரண்டு வாரம் என்று முடிவானது!

காடாறு மாதம், நாடாறு மாதம் என்பது போல அலைக்கழிக்கப்பட்ட அம்மா, நரக வேதனை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டு செத்தே போனார்.

அதற்குரிய சடங்குகளில் ஒன்றாக, சுமார் ஐந்நூறு குடும்ப நண்பர்கள், உறவினர்களை அழைத்து சாப்பாடு போட ஏற்பாடு செய்திருந்தார்கள் இரண்டு மகன்களும்.

அந்த வீட்டுக்குப் போகவே எனக்கு மனமில்லை. ஆனாலும் போனேன். இருவரையும் தனியே அழைத்து, அவர்கள் தவறுகளைச் சுட்டிக்காட்டி, இப்படிப்பட்டவர்கள் போடும் சாப்பாட்டை சாப்பிடுவதே பாவம்! எனவே நான் சாப்பிடப் போவதில்லை' என்று சொல்லி விடைபெற்றேன்.

அவர்கள் அழைப்பை நான் நிராகரித்து விட்டு, அவர்கள் வீட்டுக்குப் போகாமலேயே இருந்திருக்கலாம். ஆனால், அப்போது அவர்களது தவறைச் சுட்டிக்காட்டும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருக்காதே!

**'உதவும் கரங்கள்' வித்யாகர்**



**"தலைவரே, உதிர்ந்த ரோமம் ஒன்று சோதுன்னு நாம பேசியிருக்கோம். எப்படி அந்தாளை மறுபடி கட்சில சேர்த்துக் கறது?"**

**"விடுய்யா. 'விக்' செஞ்சி வெச்சுக்கிட் டோம்னு சொல்லிடலாம்."**

**– ஜக்கு**

இரண்டு மகன்களிடமும் பணம் இருந்து என்ன பலன்! நல்ல மனம் இல்லையே!

ஒரு தடவை கோயமுத்தூருக்கு, வேனில் போய்க் கொண்டிருந்தேன். விழுப் புரம் அருகில், ஒரு கடையில் டீ குடிப் பதற்காக நிறுத்தினோம். டீ குடித்து விட்டுப் புறப்படும் சமயத்தில், எங்கள் வேன் அருகில் கொஞ்ச நேரமாகவே நின்று கொண்டிருந்த ஐம்பது வயது மதிக்கத்தக்க ஒரு பெரியவர், என்னிடம் வந்தார். "ஆதர வற்ற குழந்தைகள், முதியவர்கள், பெண்கள் ஆகியோருக்கு அடைக்கலம் கொடுக்கும் அமைப்புதானே உதவும் கரங்கள்?" என்று எங்கள் வேனில் எழுதப்பட்டிருந்த பெய ரைச் சுட்டிக்காட்டிக் கேட்டார். 'ஆமாம்' என்று நான் விடையளித்தவுடன், 'நீங்கள் தானே அதை நடத்தி வருகிறீர்கள்? உங் களைப் பற்றியும் பத்திரிகைகளில் படித் திருக்கிறேன். ரொம்ப நல்ல காரியம் செய்து வருகிறீர்கள்! உங்களைப் போன்றவர்களை, இன்றைய உலகில் பார்ப்பதே ரொம்ப அரிது...' என்று பாராட்டிக் கொண்டே போனார். கடைசியில் ரொம்ப தயக்கத் துடன் தனது அழுக்கடைந்த பனியனைத் தூக்கி, இடுப்பில், வேட்டியில் வைத்திருந்த பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் கொடுத்து 'நான் ஏழைதான்! இதுக்கு மேல் கொடுக்க வசதியில்லை! இந்தப் பத்து ரூபாயை நான் கொடுத்தால் வாங்கிக் கொள்வீர்களா?' என்று கனிவான குரலில் கேட்டார்.

"உங்கள் பணம் பத்து ரூபாயாக இருக்க லாம். ஆனால் உங்களுடைய மனசு எத் தனை பெரிசு!" என்று நெகிழ்ச்சியுடன் அவ ரது கரங்களைப் பிடித்துக் கொண்டு சொன் னேன்!

சென்னையின் பிரபல ஓட்டல் ஒன் றில் சுமார் நாற்பது வருட காலம் உழைத் தவர். இப்போது வயது எழுபத்தி இரண்டு. திருமணமே செய்து கொள்ளாமல், இருந்து விட்டவர். சொந்தம் என்று சொல்லிக் கொள்ளும்படியாக அவருக்கு யாரும் இல்லை.

வேலையிலிருந்து ஓய்வு பெற்று விட்ட நிலையில், தனியாக வாழ ரொம்ப சிரமப் பட்டார். தம் இறுதிநாட்களைக் கழிப்பதற்கு நிம்மதியான ஓர் இடம் தேடிக் கொண்டு உதவும் கரங்களுக்கு வந்தார்.

நாங்கள் அவரைச் சேர்த்துக் கொண் டோம். மனநிம்மதியுடன் அவர் இப்போது இருக்கிறார்.

அந்தப் பெரியவர், தமது நாற்பது ஆண் டுக் கால உழைப்பில், சேமித்தது எவ்வளவு தெரியுமா? சுமார் இரண்டரை லட்சம் ரூபாய். அதையும் உதவும் கரங்களுக்கே நன் கொடையாக அளித்து விட்டார்!

அவர் அளித்த நன்கொடையை, பொது வான செலவுகளுக்குப் பயன்படுத்தாமல், நாங்கள் நடத்திக் கொண்டிருக்கும் பள்ளிக் கூடத்தில், வகுப்பறைகள் கட்டி, அவற்றுக்கு அந்தப் பெரியவர் பெயரையே சூட்டப் போகிறோம்!

சந்திப்பு : **பாரதி**



**"பெண் பார்க்கப் போனீங்களே, ஏன் இப்படித் தலைதெறிக்க ஓடி வர்றீங்க?"**


**"முதல்ல நாம ஒண்டிக்கு ஒண்டி மோதிப் பார்க்கலாம். அப்புறம் மத்த விஷயங்களைப் பேசலாம்னு சொல்லுது அந்தப் பொண்ணு."**

**- கைபர்**

கூடம் முழுவதும் குழந்தைகள் நிரம்பியிருந்தனர். இத்தனை குழந்தைகளும் தன் பொறுப்பில் என்ற எண்ணம் தயாளனுக்கும் பெருமிதத்தை அளித்தது. யாராவது உதவி செய்தால் தேவலாம்தான். ஆனால் "இதெல்லாம் உங்கள் பாடு" என்பது போல் மனைவி சுந்தரி தன் அக்காள் வீட்டுக்குச் சென்று விட்டாள். கிராதகி.

தயாளன் கனிவுடன் குழந்தைகளைப் பார்த்தார். 'தன்னை நம்பி விடப்பட்ட குழந்தைகள். பொறுப்பாக கவனித்துக் கொள்வதாலா அல்லது பணம் வாங்கிக் கொள்ளாததாலா என்று தெரியவில்லை, குழந்தைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகமாகி வருகிறது.

சென்னையின் பிரபல கல்லூரியில் பிரின்சிபலாக இருந்து பல முரட்டு மாணவர்களைக் கூட வழிப்படுத்திய தான் இன்று சின்னச் சின்னக் குழந்தைகளை கவனித்துக் கொள்வது கொஞ்சம் முரணாகவே பட்டது.



ஒரு குழந்தைக்கு ஜலதோஷம். மூக்கை உறிஞ்சியது. இருமல் வேறு. 'ஆபத்து. வைரஸ் கிருமிகள் பிற குழந்தைகளுக்கும் பரவி விடுமே'. தயாளன் சுத்தமானதொரு துண்டை எடுத்து அதன் மூக்கைத் துடைத்தார். பிறகு அந்தக் குழந்தையை வேறொரு அறையில் உட்கார வைத்து அதற்கெதிரே சில பொம்மைகளை வைத்து விட்டு மீண்டும் வெளியே வந்தார். 'உடம்பு சரியில்லேன்னா அதை உடனே கவனிச்சுதான் ஆகணும். எல்லாம் தானாகச் சரியாயிடும்னு விட்டுவிடுவது தப்பு இல்லையா?' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டார். "தப்பு மட்டுமில்லை. அயோக்கியத்தனமும் கூட" என்று

# நேற்று வாழ்ந்தவர்

அருண் சரண்யா

சிறு திருத்தமும் செய்து கொண்டார்.

கல்லூரி முதல்வராக இருக்கும்போது தயாளனுக்கு ஏக கவனிப்பு. ஒருநாள் ஜுர மென்றால் கூடப் போதும் – ஆங்கிலப் பேரா சிரியர் சிவமணி டாக்டரையே கல்லூரிக்கு வரவழைத்து விடுவார். "வேர் ஆரோக்கியமாக இருந்தாத்தானே கிளைகளுக்கு வாழ்வு?'' என்பார் உணர்ச்சிக் கரகரப்போடு.

திடீரென்று சில வசவுக் குரல்களும் அதைத் தொடர்ந்து இரண்டு அழுகைக் குரல்களும் கேட்டன. தயாளன் பரபரத்தார். போர்க் கால நடவடிக்கை எடுக்க வேண் டும். இல்லையென்றால் இந்தக் குழந்தைகளின் சண்டை பெரி தாவதோடு, இந்த ஒலம் மற்றக் குழந்தைகளுக்கும் பரவிவிடும்.

அருகே போனவுடனேயே அந்த இரு குழந்தைகளும் ஒரே சமயத்தில் மற்றவனை சுட்டிக்காட்டி, "அவன் என்னை அடிச்சுட்டான்'' என்றன. இருவரில் பெரிய சிறுவனைப் பார்த்தபோது ஓர் அப்பாவித்தனம் தென் பட்டது. இவன் 'பதிலுக்கு தான்' அடித்திருப்பான் என்று தோன்றியது. மனோதத்துவம் அறிந்தவர் அவர். தன்னை யாரும் ஏய்க்க முடியாது என்பது அவருக்குத் தெரியும். இரு குழந்தைகளுக்கும் சாக்லெட்டு கள் தந்து சமாதானப் படுத்தினார். பெரிய வனின் பாக்கெட்டில் ஒரு அதிகப்படி சாக் லெட்டை மற்றவன் அறியாமல் வைத்தார். அவன் முகத்தில் கள்ளத்தனமான புன்னகை ஒன்று மலர்ந்ததைப் பார்த்துத் திருப்தியாக இருந்தது.

திருப்தி தரும்படியான நிகழ்ச்சிகள் இப் போதெல்லாம் மிக அரிதாகி விட்டன. ஓய்வு பெற்றதிலிருந்து கை ஒடிந்தது போல் இருக் கிறது. ஒருவேளை மனமோ? மகன் எதிர்த்துப்



பேசுவதில்லைதான். ஆனால் மௌனமாக இருந்தும், தான் பேசிக் கொண்டிருக்கும் போதே பாதியில் நகர்ந்தும் அவன் வெளிப் படுத்தும் அலட்சியம் வதைக்கிறது.

போன வருடம் இந்நேரம் தனக்கு எவ் வளவு டிமாண்ட்! காரில் போகும்போது கதவு களிலுள்ள கண்ணாடிகளைத் திறக்க முடியாது. சிக்னலில் வண்டி நிற்கும்போது எவனாவது தலையை உள்ளே நீட்டி "சார் என் பையனுக்கு உங்க காலேஜிலே ஒரு சீட்" என்பான். கல்லூரி யில் தன்னை வரிசையில் நின்று தரிசிப்பார்கள். கெஞ்சும் குரல், அசட்டுச் சிரிப்பு, கண்ணீர். சாஷ்டாங்க நமஸ்காரமும். பல சமயம் சிபா ரிசுக் கடிதங்கள். இடது கைவிரலால் அவற்றை ஒதுக்கி விடுவார்.

தகுதி உள்ள மாணவர்களை அழைத்து ஒவ் வொருவராக ஆழமாக உற்றுப் பார்ப்பார். அதுவே போதும், அந்த மாணவன் நன்கு படித்து, கல்லூரியில் புகழை வளர்ப்பானா அல்லது கோஷ்டி சேர்த்துக் கொண்டு ஆசிங் கங்களில் இறங்கி கல்லூரியின் பெயரைக் கெடுப்பானா என்பதைத் தெரிந்து கொள்ள. அவரது சர்வீஸில் இந்த உள்ளுணர்வு ஒரு முறை கூடத் தவறியதில்லை.

நான்கு வயதுச் சிறுவன் ஒருவன் ஒற்றை விரலை நீட்டினான். முகத்தில் 'அவசரக்களை' தென்பட்டது. வீட்டிலிருந்த ஒரே பாத்ரூமில் வேறொரு சிறுமி அப்போதுதான் நுழைந் திருக்க, சடாரென்று சிறுவனைத் தூக்கிக் கொண்டு வாசற்புறமாகச் சென்றார். குழந் தைக்குத் தோஷமில்லை.

வீட்டு வாசல் ஓரமாகவே அவனை உட்கார வைத்தபோது எதிர்வீட்டுப் பெண் அவரை வியப்போடு பார்ப்பது தெரிந்தது. அது பற்றிக் கவலைப்படாமல் காரியம் முடிந்ததும் சிறு வனை உள்ளே அழைத்துச் சென்றார்.

'ஏதோ தெருவையே அசுத்தப்படுத்தி விட் டது போல் என்னை விசித்திரமாகப் பார்க் கிறதே இந்த எதிர் வீட்டுப் பெண்!' மூக்கு சற்றே பருத்திருந்த அவளைப் பார்த்தபோது தன் மருமகளின் நினைவு வந்தது தயாள னுக்கு. அவளுக்கும் கொழுகொழு மூக்கு. இப்படியிருந்தாலே பெரியவர்கள் ஒரு பொருட் டாகத் தெரியமாட்டார்களோ?

**ஓ**ய்வு பெற்ற சில நாட்களிலேயே வேலை யைத் தவிர வேறு சிலவற்றையும் தொலைத்தது போல் இருந்தது. கோட் சூட் மட்டுமல்ல, உள்ளாடைகளைக் கூட இழந்து நிற்பது போல் படுகிறது. முக்கியமாக, எதிர்ப்புகளை லேசான முகச் சுழிப்பு மூலமாக மட்டுமே காட்டி வந்த மனைவி, அவற்றைச் செயல்களாகவும், சொற்களாகவும் காட்டத் தொடங்கியபோது.

"ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் உங்க வீட்டுக்கு வந்துடுவோம்" என்று பிரிவுபசாரம் முடிந்ததும் கூறிய இங்கிலீஷ் சிவமணியும், வேதியல் ராமதுரையும், புள்ளியியல் குமார ராஜாவும் ஒருமுறை கூட அப்படி வரவில்லை. வழியில் ஒருமுறை பார்க்க நேர்ந்தபோது கூட, ''எப்படியிருக்கீங்க சார்? சௌக்கியம் தானே?" என்று கேட்டுவிட்டு அவர் பதிலுக் குக் காத்திராமல் நடந்து கொண்டேயிருந்ததில் அவருக்குச் சீற்றம். தனக்கு ஆமாம் போட்ட பயல்களெல்லாம் இன்று தன்னைப் பற்றி நினைத்துக் கூடப் பார்க்காததில் ஆக்ரோஷம். போஸ்ட்மேன் கூட அவரிடம் இந்தமுறை பொங்கல் இனாம் கேட்கவில்லை. "உங்க மகன் இருக்கும்போது வந்து வாங்கிக்கறேன் சார்" என்றபடி நகர்ந்து விட்டான். 'அடேய், எனக் குக் கைநிறைய பென்ஷன் வருதுடா. பணம் எனக்குப் பிரச்னையில்லே' என்று கத்தத் தோன்றியது.

**நி**னைவுகளை உதறிக் கொண்டார். குழந் தைகளைப் பார்த்து "நான் இப்போ ரைம்ஸ் சொல்வேன். நீங்களெல்லாம் திருப்பிச் சொல் லணும்'' என்றார். தொடர்ந்து ''ட்விங்கிள் ட்விங்கிள் லிட்டில் ஸ்டார்'' என்று அவர் பாட, எல்லாக் குழந்தைகளும் திரும்பிக் கூறின, அல்லது கூற முயற்சித்தன. ஒரே ஒரு சிறுவன் மட்டும் மௌனமாக இருந்தான். வேகமாக அவனிடம் நடந்தார்.

''உனக்கென்ன அவ்வளவு பிடிவாதம்? இனிமேலாவது நான் சொல்வதைத் திருப்பிச் சொல்லணும் என்ன?'' என்றார். பதில் கூறாமல் அந்தச் சிறுவன் அவரை வெறித்துப் பார்க்க, அவருள் அக்னி தோன்றியது. "எனக்கு மதிப் புத் தராத அளவுக்கு உனக்குத் திமிரா?" என்ற படி நெருங்கினார். பளார் பளாரென்று அவனை அறைந்தார்.

சத்தம் கேட்டு ஓடிவந்த எதிர்வீட்டுப் பெண் அவரைத் தடுத்தாள். "என்ன அங்கிள் சுவரைப் போட்டு இப்படி அடிக்கிறீங்களே. கைவலிக்கல்லையா உங்களுக்கு?" என்று விலக் கினாள். பிறகு ''ஆமா, கொஞ்சம் முன்னே எதுக்காக வாசல் பக்கம் வந்து ஏதோ விசித் திரமாக அபிநயமெல்லாம் பிடிச்சீங்க? என்ன ஆச்சு உங்களுக்கு? வீட்டிலே ஆன்ட்டி இல் லையா?"

தயாளன் பதில் சொல்லவில்லை. அங்கிருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண் டார். அவர் சாப்பிடுவதற்காக சுந்தரி வைத்து விட்டுப் போயிருந்த கஞ்சி ஆறிக் கொண்டிருந் தது. கோபம் பொங்க கூடத்தைப் பார்த்தார். அது காலியாக இருந்தது. ●

அ

ஸம்ஹிதாகாரம் ஸம்ஹிதாகாரம் என்று இரண்டு அகாரம், இரண்டு வடிவு உண்டு. ஸம்ஹிதை என்றால் சேர்த்துச் சொல்வது. அஸம்ஹிதை என்றால் பிரித்துச் சொல்வது.

ஸம்ஹிதையைச் சொல்லிக் கொண்டேயிருக்க வேண்டும்! இடையிலே மூச்சுவிடுவது தெரியாமல் வாக்யம் முடிவே இல்லாது தொடரும்.

அஸம்ஹிதை என்றால் வாக்ய கிரந்தம். வாக்யம் வாக்யமாக முடியும். சொல்வது அழகாகச் சொல்லலாம். ஆனால் இதுதான் கஷ்டம்!

சம்ஹிதை நன்றாக ஓடும். 'மேல் வரும் வாக்யம் என்ன?' என்று சந்தேகம் வராது. அதனால்தான் வேதாத்யயனம் பண்ண கற்றுக்கொள்கிற குழந்தைகளுக்கு முதலில் சம்ஹிதை சொல்லி வைப்பார்கள்.

பிரணவம் – ஓம்காரம் இருக்கிறதே... அதனுடைய ஸம்ஹிதாகாரம் எதுவென்றால் 'ஓம்' என்று சொல்வது. அப்போது அ, உ, ம வெளியிலே தெரியாது. அதையே பிரித்துச் சொன்னோமானால் அ, உ, ம என்று பிரிக்க வேண்டும்.

ஏக பதமாகவும் இருக்கும், த்ரியக்ஷரமாகவும் இருக்கும் என்கிறார் சுவாமி தேசிகன், ஸார ஸாரம் என்கிற ரஹஸ்யத்திலே... ஓம்காரத்தினுடைய ஆகிருதியை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிறார். மூன்று அக்ஷரமாகவும் ஒரே அக்ஷரமாகவும் வருவது அது. அதை மேலே சுருக்க வேண்டுமென்றால் முடியாது. இது தான் உயிர் முடிச்சு!

வேதம் அனைத்துக்கும் வித்து, வேதம் அனைத்துக்கும் பீஜம் எதுவென்றால் பிரணவம்தான்.

பிரணவத்தை விவரித்தால் வியாகிருதி, வியாகிருதியை விவரித்தால் காயத்ரி, காயத்ரியை விவரித்தால் எல்லா வேத மந்திரங்களும், எல்லா மந்திரங்களும் காயத்ரிக்குள்ளே அடக்கம். காயத்ரி வியாக்ருதிக்குள்ளே அடக்கம். வியாக்ருதி பிரணவத்துக்குள்ளே அடக்கம்!

உலகம் யாவையும் தாமுளவாக்கலும், நிலைபெறுத்தலும், நீக்கலும் என்று கம்பராமாயணத்திலே காப்புச் செய்யுளிலே பேசினான் கம்பன். உலகத்தைப் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய மூன்று காரியங்களையும் பண்ணுகிறான் அவன். அவன் எங்கே இருக்கிறான் என்றால் சுருதிக்கு சிரஸில் இருக்கிறான்.

சுருதிக்கு சிரஸ் எது...? உத்தமாங்கம் எது? நம் சரீரத்துக்கு உத்தமாங்கம் எது? சிரஸ் தான்! வேதத்துக்கு உத்தம அங்கம் பிரணவம். சுருதி சிரஸ் எதுவென்றால் பிரணவம்.

திருவேங்கடமலைமேல் ஸ்ரீநிவாஸன் இருக்கிறானே... அவன் எங்கே இருக்கிறான் என்பதை பாஷ்யகாரர் ராமானுஜர் பிரும்ம ஸூத்ர பாஷ்யத்திலே ஆரம்பத்திலே சொல்கிறபோது – 'அந்த ஸ்ருதிக்கு சிரஸாக இருக்கும்படியான பிரணவத்திலே, ஓம்காரத்திலே பிரகாசிக்கிறானே' என்கிறார். 'யாதொரு பிரும்மம் உண்டோ அந்த ஸ்ரீநிவாஸனிடத்திலே என்னுடைய புத்தியானது பக்தியுடன் எபபோதும் நிலைத்து நிற்கட்டும்' என்கிறார்.

பிரணவப் பொருளாய் பரமாத்மா விளங்குகிறான். பிரணவத்திலே பிரகாசிக்கிறான்.

அப்படியானால் அகரோ விஷ்ணு வாசக: என்று ஏற்படுகிறதாயில்லையா! சமஸ்த வேதப் பொருளாய், உயிர் முடிச்சாய் பரமாத்மா இருக்கிறான்.

அ, உ, ம என மூன்று அக்ஷரமாகப் பிரிவதாகச் சொன்னேன். பராசர பட்டர் என்ற ஆசார்யர் இந்தப் பிரணவத்தை விவரிக்கிறார்:

அ என்கிற அக்ஷரத்தினாலே விஷ்ணு சொல்

முக்கூர் லக்ஷ்மிநரசிம்மாச்சார்யார்




லப்படுகிறான். உலகத்தைப் படைத்து, காத்து அழிக்கின்ற அவன் தன்மை அ என்கிற அக்ஷரத்திலே இருக்கிறது. அ என்கிற தாதுவுக்கு ரக்ஷிப்பது என்று பொருள். அதனால் ரக்ஷிப்பவனான பரமாத்மா ஓம்காரத்திலே அ என்கிற அக்ஷரத்திலே இருக்கிறான்.

அடுத்து உ என்கிற அக்ஷரம். இதற்கு இரண்டு பொருள் ஏற்படுகிறது. உ என்றால் மஹாலக்ஷ்மி. மஹாலக்ஷ்மியுடன் கூடியவனாக அவன் இருக்கிறான். மஹாலக்ஷ்மியுடன் கூடிய விஷ்ணு என்று இதற்கு அர்த்தம்.

இன்னொரு அர்த்தம் இருக்கிறது இந்த 'உ'வுக்கு. 'அ' என்கிற அவனுக்கே என்ற அர்த்தத்தை அது காட்டுகிறது. அவனுக்கே என்னும்போது, மற்றொன்றை அல்ல என்றும் சொல்கிறது. அதாவது, 'அகார வாச்ய பூதனான அவனுக்கே' என்பதை 'உ' என்கிற அக்ஷரம் சொல்கிறது.

'அவனுக்கே உரியவன் யார்...?' என்று கேட்டால், அதைத்தான் 'ம' என்கிற அடுத்த அக்ஷரம் உணர்த்துகிறது. 'ம' என்கிற அக்ஷரத்துக்குப் பொருள் என்னவென்றால், அறிவை உடையவனான ஜீவாத்மா என்று அர்த்தம். இந்த ஜீவாத்மா விஷ்ணுவுக்கே, விஷ்ணுவின் பொருட்டே! மற்றொன்றின் பொருட்டு அல்ல... என்பது ஸ்பஷ்டமாகத் தெரிகிறது.

'அ' என்று சொல்கிறபோதே லக்ஷ்மியோடு கூடிய நாராயணன் என்றுதான் அர்த்தம். நாராயணனைச் சொல்கிறபோது



***"என்னது? உங்க கடற்கரைக் காதல் தினங்களை நினைவுபடுத்தற விதமா குழந்தைக்குப் பேர் வெச்சிருக்கியா?"***
***"ஆமா! சுண்டல்ப்ரியா."***

***— ரம்யா***

லக்ஷ்மியையும் சேர்த்துச் சொல்லச் சொல்லியதனாலே, உ என்பதற்கு இரண்டாவதாக ஓர் அர்த்தம் சொல்லப்பட்டது. அவனுக்கே என்ற அர்த்தம். ம என்பது ஜீவாத்மா. இந்த ஜீவாத்மா லக்ஷ்மியோடு கூடிய விஷ்ணுவுக்கே என்பது பொருளாகிறது.

**ஜீ**வாத்மா என்பது இருபத்தைந்தாவது தத்துவம். அக்ஷரங்களிலேயும் இருபத்தைந்தாவதாக வருவது ம. நியூமராலஜி என்பது இப்போது ஏற்பட்டதல்ல...ஆதியிலிருந்தே இருக்கிறது. எழுத்தை எண்ணால் எழுதுவது. எண்ணை எழுத்தால் எழுதுவது... இப்படி...

ம என்பது ஜீவாத்மாவைக் குறிக்கும் என்று சொன்னார்கள் ஆசார்யர்கள். இன்னொரு விதமாக ஜீவ தத்வம் என்பது இருபத்தைந்தாவது தத்வமாகிறது. அதாவது, பிரகிருதி, மகது, அகங்காரம் என மூன்று; பஞ்சதன்மாத்ரைகள் ஐந்து; பஞ்ச பூதங்கள் ஐந்து; இந்த்ரியங்கள் பதினொன்று (ஞானேந்த்ரியம் ஐந்து, கர்மேந்த்ரியம் ஐந்து, மனம் ஒன்று ஆக பதினொன்று) என மொத்தம் இருபத்திநாலு– பிரகிருதி தத்வம் என்று இவற்றுக்குப் பெயர்.

இந்த பிரகிருதி தத்வத்தைக் காட்டிலும் வேறாக இருக்க்க் கூடியவன் இருபத்தைந்தாவது தத்வம் ஜீவாத்மா. இது இரண்டைக் காட்டிலும் வேறாக இருக்கக் கூடியவன் இருபத்தாறாவது தத்வமான பரமாத்மா!

இதைத்தான் 'எண்ணிலும் இருப்பான்' என்றார் ஆழ்வார். நம் மனத்தில் எண்ணும் போதும் இருப்பான். ஓடி வரக் கூடியவன். எண்ணும்போது இருபத்தைந்தாவது தத்வமான அ உ ம விலும் இருப்பான்!

**ஆ**கையினாலே இந்தப் பிரணவத்தாலே என்ன பொருள் கிடைக்கிறது என்றால், எம்பெருமான் விஷ்ணுவுக்கே, லக்ஷ்மியுடன் கூடிய ஸ்ரீயஃபதியான நாராயணனுக்கே இந்த ஜீவன்.

இந்தப் பிரணவம் எங்கேயிருந்து வந்தது? சர்வ வேதத்திலிருந்தும் வந்தது. சர்வ வேத சாரம் என்ன...? 'அவன் திருவடிக்கே நாம்' என்பதே.

முழுமையான வேதத்தை ஒரு வாக்கியத்திலே எழுது என்றால் எம்பெருமானான நாராயணன் திருவடிக்கே இவன் என்பது தான் வேதம் அனைத்திலும் தேறிய பொருள்.

இதைத்தான் சுவாமி தேசிகன் பரமார்த்த ஸ்துதி என்ற சுலோகத்திலே சொல்கிறார்: 'ஆகம புங்கவன்' என்கிறார் அவனை. 'யக்ஞத்திலே, ஹோம குண்டத்திலே பிரகாசிக்கக் கூடியவனே! உன்னை குண ஞானிகள், உயர்ந்த தபோ ஞானிகள், ஆசார்யர்கள் எல்லோரும் என்ன சொன்னார்கள் தெரியுமா...? நீயே முதலில் இருக்கிறாய். முதலிலிருந்து ரக்ஷணம் பண்ணுகிறாய் என்று அவர்கள் சொன்னார்கள். எந்தெந்த இடத்திலே நீ முன்னே இருக்கிறாய்...? ஓம்காரத்திலே நீ முன்னே இருந்து ரக்ஷிக்கிறாய். அதே மாதிரி பார்த்தனுடைய தேர்த்தட்டிலே முன்னே உட்கார்ந்து கொண்டிருக்கிறாய்...'

## அருள்வாக்கு

**ரொ**ம்பவும் controversial- ஆன (சர்ச்சைக்கிடமான) புஸ்தகம் எழுதின் ஒரு வெள்ளைக்காரர் என்னிடம், 'உங்கள் கோயில்களில் என்ன இப்படி ஒரே சத்தமும் கூச்சலுமாயிருக்கே?'' என்று கேட்டபோது நான் இதைத்தான் சொன்னேன். ''சர்ச்சில், மசூதியில், புத்தவிஹாரத்தில் silent prayer செய்கிறதுபோலக் கோயிலில் செய்யணும் என்பது முக்ய உத்தேசமில்லை; எங்களுக்கு ஏகாந்தத்தில் த்யானம்தான் முக்யம். த்யானம், கூடிப் பிரார்த்தனை சொல்லி வழிபடுவது ஆகியவற்றிற்காகக் கோயில் இல்லை. ராஜா நம்மை ரக்ஷிக்கிறான் என்பதற்காக அவனுக்கு அரண்மனை, அலங்காரம், பரிவாரம், படாடோபம் எல்லாம் கொடுக்கிறோம்; வரியும் கொடுக்கிறோம் அல்லவா? அதே மாதிரி ஸர்வ லோக ராஜாவாக, ஸர்வ கால ரக்ஷகனாக

பகவான் அர்ஜுனனுக்கு முன்னே உட்கார்ந்திருக்கிறான். அவனுக்குப் பின்னாலே அர்ஜுனன். 'அ' முன்னே; அவனுக்கே 'ம' அவனுக்குப் பின்னால்.

அ உ ம இந்த அர்ஜுன ரதத்திலே நமக்கு அழகாகத் தெரிகிறது. அதனால்தான் அர்ஜுனனுடைய ரதம் இருக்கிறதே, அது பிரணவ ஸ்வரூபம். அதை தியானம் பண்ணினாலே பிரணவம் எப்படியிருக்கிறது என்பது நமக்கு ஸ்பஷ்டமாகத் தெரியும்.

பிரணவத்திலே உள்ளே இருந்து கொண்டு, உச்சரிக்கக் கூடியவர்களுடைய உள்ளுக்குள்ளே காம, க்ரோத, லோப, மோக, மதமாத்சர்யம் என்கிற துர்க்குணங்களை நிவர்த்தித்து, அவர்களுக்கு நல்ல குணங்களைக் கொடுத்து உயர்த்துகிறான் பரமாத்மா.

அதே போல் அர்ஜுனனுடைய தேர்த்தட்டிலே முன்னே இருந்து, துரியோதன, துர்சாதன, கர்ண, சகுனி போன்றவர்களை அழிக்கிறான். அழிப்பதற்காக அங்கே முன்னே இருந்தான்.

ராமாயணத்திலேயும் இதைக் காட்டுகிறான் பரமாத்மா!

தண்டகாரண்ய வனத்திலே அவன் முன்னே போகிறான். அப்புறம் மஹாலக்ஷ்மி சீதை போகிறாள். அப்புறம் லக்ஷ்மணன் போகிறான்.

அந்த ஸ்லோகத்தை வர்ணித்துச் சொல்லி 'ஹா!' என்று ஆச்சர்யத்துடன் முடிக்கிறார் வால்மீகி. தமிழில் 'அம்மா!' என்கிற மாதிரி 'ஹா' ஆச்சர்யத்தைக் குறிக்கும் - 'ஆயிரம் ராமர் நின் கேள் ஆவரோ தெரிகில் அம்மா!' என்று பரதனைக் குறித்து ஆச்சர்யப்பட்ட மாதிரி. அந்த மாதிரி 'ஹா!' என்கிறார் வால்மீகி இந்த தண்டகாரண்யக் காட்சியை.

ஏன் அப்படிச் சொல்கிறார்?

எல்லோரும் பிரணவத்தை, ஓம்காரத்தைக் கேட்கலாம். ஆனால் அதைப் பார்க்க முடியுமா?

அர்ஜுனனுடைய தேர்த்தட்டிலே அது நிற்பதைப் பார்க்கிறோம்.

ஓம்காரம் நடப்பதை எங்கேயாவது பார்க்க முடியுமா என்றால் இங்கே தண்டகாரண்யத்திலே அந்தப் பிரணவம்-ஓம்காரம்-நடக்கிறது!

ராமன் முன்னே நடக்கிறான். அ என்கிற அக்ஷரத்துக்குப் பொருளாக இருக்கிறான். அவனை அடுத்து மஹாலக்ஷ்மி 'உ' என்கிற அக்ஷரத்துக்குப் பொருளானவள் போகிறாள். இவர்களுடைய திருவடியிலே கைங்கர்யம் பண்ணும்படியான ஜீவாத்மா லக்ஷ்மணன் கடையிலே போகிறான்! அ, உ, ம நடந்து போகிறது பாருங்கள்!

ஆகையினாலே பிரணவமே இந்த சுலோகத்திலே இருக்கிறது.

(தொடரும்)

---

இருக்கப்பட்ட பகவானுக்குப் பொன்னையும் பூவையும் கொடுத்து பெரிசாகக் கோயில் கட்டி வைத்து, மேளதாள விமரிசைகளோடு உத்ஸவம் செய்யவே, community thanksgiving-ஆக (ஸமூஹ நன்றியறிவிப்பாக) collective offering-ஆக (கூடிக் காணிக்கை செலுத்துவதாக) எங்கள் ஆலய வழிபாட்டு முறை அமைந்திருக்கிறது. இங்கே அமைதியை எதிர்பார்த்து முடியாது. அமர்க்களம், ஆரவாரம், மேளதாளம், கண்டாமணி, அதிர்வேட்டு இருக்கத்தானிருக்கும். அமைதியாக த்யானம் பண்ண அவரவர் வீட்டிலும் பூஜாக்ருஹமுண்டு. ஆற்றங்கரை, குளத்தங்கரை உண்டு" என்று சொன்னேன்.



இப்படிச் சொன்னதால் கோயிலில் அவரவர்களும் இரைச்சல் போட்டுக் கொண்டு, அரட்டை அடித்துக் கொண்டிருப்பதற்கு லைஸென்ஸ் தந்ததாக அர்த்தமில்லை. சாஸ்த்ரோக்தமாக அனுமதிக்கப்பட்டிருப்பவற்றை, பூஜைகளை - மணி அடிப்பது, வேத கோஷம், தேவாரம், பஜனை, மேளம், புறப்பாட்டில் வெடி இவற்றைத்தான் நான் சொன்னது.

இந்த மாதிரி சாஸ்த்ரோக்தமான சப்தங்களுக்கே மௌன த்யானத்தில் ஒருத்தனை ஈடுபடுத்துகிற அபூர்வமான சக்தி உண்டு. இம்மாதிரி சப்தங்களுக்கு நடுவிலேயே ஸந்நிதானத்தில் சிறிது கண்ணை மூடிக் கொண்டால், அல்லது தக்ஷிணாமூர்த்திக்கு எதிரே ஜபம் பண்ண உட்கார்ந்து கொண்டால், சட்டென்று ஒரு லயிப்பு உண்டாகிவிடும்.

**— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்**

# அனுகூல்

"இதற்கு ஏதாவது பெயர் கியர் இருக்குமே..." நிகுன்ஜ்பாபு இயல்பாகக் கேட்டார்.

"ஆம் ஐயா... ஏன் இல்லாமல்...?"

"அப்படியானால், இதை என்ன பெயர் சொல்லி அழைக்கலாம்...?"

"அனுகூல்...!"

கல்கத்தாவின் நெரிசலான சௌரங்கியில், ஏறத்தாழ ஆறு மாதம் முன்புதான் திறக்கப்பட்ட எந்திர மனிதன் - ரோபோ விற்கும் கம்பெனி. அத்தகைய ரோபோ ஒன்றை வேலைக்காரனாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பது நிகுன்ஜ் பாபுவின் நீண்டநாள் ஆசை! இப்போது தான் அதன் வியாபாரம் அதிகரித்து விட்டதே! எனவே, தன் ஆசையைத் தீர்த்துக் கொள்ள நிச்சயித்து விட்டார்.

அவர் ரோபோவை உற்றுப் பார்த்தார். எந்திரம்தான்; என்றாலும் முகமெல்லாம் மனிதனைப் போலவே இருந்தது. நல்ல அழகு எனக் கூற முடியாது. எனினும் வயது இருபத்திரண்டுக்கு மேல் மதிக்க முடியாது.

"இதால் என்னென்ன வேலைகளைச் செய்ய முடியும்...?"

கடைக்காரர் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே, நம்பிக்கையுடன் சொன்னார்: "ஒரு சாதாரண வேலையாள் செய்யும் அத்தனை வேலைகளையும் செய்து விடும்... சமைக்க மட்டும் வராது... ஆனால் ஒன்று. வீட்டிற்குள் செய்வதை மட்டும்தான் செய்யும். கடைக்குப் போய் சாமான் வாங்கி வர இதால் முடியாது... இன்னொன்று... இதைக் கொஞ்சம் மரியாதையுடன் நடத்த வேண்டும். குறைந்த பட்சம் 'நீ, வா, போ...' என்று அழைக்கலாம். அலட்சியமாகவோ, அல்லது 'வாடா... போடா...' என்றோ யாரும் தன்னை அழைப்பது இதற்குப் பிடிக்காது..."

"இதே மரியாதை அதனிடமிருந்து கிடைக்கும் அல்லவா...?"

"கண்டிப்பாக. அதனிடமிருந்து எந்தத் தொந்தரவும் இருக்காது. ஆனால் ஒன்று... இதன் மீது நாம் கை நீட்டி விட்டால், இதால் பதிலுக்கு எதையும் செய்ய முடியும்... பொறுமையாக இருக்க முடியாது..."

"அத்தகைய சந்தர்ப்பம் வராது! அப்படியே வருவதாக வைத்துக் கொள்ளுங்கள்... அது என்ன செய்யும்?"

"அது பழிக்குப் பழி வாங்கி விடும்... எப்படித் தெரியுமா? வலது கை ஆள் காட்டி விரல் வழியாக உயர் அழுத்த மின்சாரத்தை நம்மீது பாய்ச்சி விடும்"

"இறப்பே ஏற்பட்டுவிடும்படியாகவா...?"

"ஆம்....சட்டம்கூட இதில் ஒன்றும் செய்ய முடியாது. ஏனெனில், உயிருள்ள மனிதனைத் தான் சட்டத்தால் தண்டிக்க முடியும்... எந்திரத்தை அல்ல..."

"அதனிடம் மனம் போன்ற எதுவும் கிடையாதல்லவா...?"

மனிதனால் முடியாத பல விஷயங்களை அவை புரிந்து கொள்கின்றன... ஆனால் இக்குணம் எல்லா ரோபோக்களிடமும் சம அளவில் இருப்பதில்லை. அதெல்லாம் அதை வைத்திருக்கும் மனிதர்களைப் பொறுத்தது. அந்தக் குணங்களை அவை வாய்ப்புக் கிடைக்கும்போது வெளிப்படுத்தும்..."

நிகுன்ஜ்பாபு ரோபோவிடம் கேட்டார். "அனுகூல், என் வீட்டுக்கு வந்து வேலை செய்வதில் உனக்கு ஏதும் தடை இல்லையே?"

"எப்படி இருக்க முடியும்...?" என்றது அனுகூல். நீலக் கோடிட்ட அரைக் கைச் சட்டை. கறுப்பு டிராயர். தலையை வலப் பக்கம் வகிடெடுத்து வாரியிருந்தது. உதடுகளின் ஓரத்தில் சதா தவழும் புன்னகை... முகமும் தனித்தன்மையுடன் நம்பிக்கையூட்டும் விதம் இருந்தது.

நிகுன்ஜ்பாபுவின் வீடு 'சால்ட் லேக்' பகுதியில் இருந்தது. விசாலமான பங்களா. அவர் திருமணம் செய்து கொள்ளவில்லை. ஆனால், மாலை நேரங்களில் தினசரி அவரது நண்பர்கள் அவர் வீட்டில் சீட்

டாடுவதற்காக வந்து கூடுவார்கள். அந்த நண்பர்கள் எந்திர மனித வேலைக்காரன் பற்றி திருப்தி தெரிவித்திருந்தனர்.

"கட்டளை இடுவதற்கு வாயைத் திறப்பதற்குள் என் வீட்டு ரோபோ எங்களுக்குக் கீழ்ப்படிகிறது'' என்ற மன்சுகானி என்ற நண்பர் "அது வெறும் எந்திரம் மட்டுமல்ல. அதன் மண்டைக்குள் மூளையும், மார்புக்குள் மனமும் இருக்கின்றன..." என்றார்.

அனுகூல் அழைத்து வந்த ஏழாம் நாள் நிகுன்ஜ்பாபுவுக்கும் இதே எண்ணம்தான் ஏற்பட்டது. ஆச்சரியப்படும் விதம் அனுகூல் வேலை செய்தது. வேலைகளுக்கு இடையே யுள்ள ஒற்றுமை வேற்றுமைகள் மற்றும் அவசியங்களை அது புரிந்துகொண்டது. குளிப்பதற்கு வெந்நீர் தயார்ப்படுத்து என்று எஜமான் சொன்னால் போதும், கூடவே அது சோப்பு மற்றும் துண்டையும் எடுத்து வைத்தது.

நிகுன்ஜ்பாபு - அனுகூல் இடையே ஆத்மார்த்தமான நிரந்தர நட்பும் உறவும் ஏற்பட்டிருந்தன. பாபு சொல்வதற்கு முன்பே, அது அவரது வேலைகளைச் செய்து வந்தது. நிகுன்ஜிடம் ஆச்சர்யம். ரோபோ கம்பெனியின் மிஸ்டர் பௌமிக் கூறியிருந்தார் - 'சில ரோபோக்கள் மூளையைப் பெற்றிருக்கும். அதற்குச் சிந்திக்கும் திறன்கூட இருப்பதுண்டு'- அனுகூல் நிச்சயம் அந்த வகை ரோபோவாகத்தான் இருக்க வேண்டும்..

அனுகூலுடன், வேலைகளைப் பற்றி அல்லாமல், இதர விஷயங்களைப் பற்றியும் பேசிப் பார்த்தார். அதனுடைய விசாலமான, ஆழ்ந்த அறி

# சத்யஜித்ராய்

## ஹிந்தி வழித் தமிழில்: ஜெய்ராம்ஜி

வைக் கண்டு அவரிடம் ஆச்சர்யம். விளையாட்டு, பயாஸ்கோப், தியேட்டர், நாடகம், நாவல் என்று பல விஷயங்களைப் பற்றி அனுகூலால் பேச முடிந்தது. உண்மை இது தான். இந்த விஷயங்கள் பற்றியெல்லாம், அனுகூலுக்குத் தெரிந்ததில் பாதி கூட, நிகுன்ஜ்பாபுவுக்குத் தெரியாது. இது போன்ற எந்திர மனிதர்களைத் தயாரிக்கும் மனிதர்களை நாம் பாராட்டியே ஆக வேண்டும். மிகச் சிறிய எந்திரத்தினுள் எத்தனை அறிவை நிரப்பியுள்ளனர்!

நல்ல நேரம் - காலம் எல்லாம் என்றென்றும் நிலைத்திருக்குமா என்ன? அனுகூல் வந்த ஓராண்டுக்குள், நிகுன்ஜ்பாபு தனது செயல்களில் பல தவறான நடப்புகளைக் கைக் கொண்டு, பணத்தை இழக்கத் தொடங்கி விட்டார். அனுகூலுக்காக அவர்



மாதா மாதம் அதை வாங்கிய கம்பெனிக்குத் தவணைப் பணம் கட்ட வேண்டியிருந்தது. இதுவரையில் அதைத் தேதிப்படிக் கட்டி விட்டார். இனி ஒரு மாதம் அவர் தவணை கட்டாவிட்டால்கூட, அனுகூலை அவர்கள் திரும்ப எடுத்துச் சென்று விடுவார்கள். எப்படியோ சமாளித்து வந்தார்.

ஆனால், எல்லாக் கணக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் நிலை குலைந்து விட்டது. அந்த நேரம் பார்த்து, நிகுன்ஜ்பாபுவின் மூன்றாவது சித்தப்பா நிவாரன் பானர்ஜி வந்து சேர்ந்து விட்டார் – 'சந்தன் நகரில் தனியாக இருக்க விரும்பவில்லை. உன்னுடன் சில நாள் தங்கலாம் என்று வந்துவிட்டேன்...?' – அவர் இப்படி அடிக்கடி வந்து நிகுன்ஜ் பாபுவுடன் தங்குவது புதிதல்ல. வழக்கம் தான். நிகுன்ஜ்பாபுவின் தந்தை இறந்து வெகு காலம் ஆகிவிட்டது. மூன்று சித்தப்பாக்கள். அவர்களில் எஞ்சியிருப்பது நிவாரன் மட்டுமே! மிகுந்த சிடுசிடுப்புப் பேர்வழி. வக்கீல் வேலை பார்த்து நிறையப் பொருள் ஈட்டியதாகக் கேள்வி... ஆனால் வெளியில் தெரியாது. உண்மையில் அவர் ஒரு கருமி!

"சித்தப்பா... வரத்தான் வந்தீர்கள்... சில நாள் கொஞ்சம் மகிழ்ச்சியாக இருந்து விட்டுப் போங்களேன்..." என்றார் நிகுன்ஜ் பாபு.

"ஆனால் ஒரு விஷயம்... அதை நான் ஆரம்பத்திலேயே கூறி விட வேண்டியது அவசியம்... என்னிடம் ஒரு வேலையாள்... அனுகூல் என்று பெயர்... உங்களுக்கும் தெரிந்திருக்கும்... கல்கத்தாவில் இப்போதெல்லாம் பல ரோபோ கம்பெனிகள் இயங்கி வருகின்றன..."

அதற்கு நிவாரன் பானர்ஜி, "ஆம்... தெரியும்... பத்திரிகை விளம்பரம் பார்த்தேன்..."

"இந்தப் புது எந்திர வேலையாள் அனுகூலை 'நீ' என்று மட்டுமே அழைக்க வேண்டும். தான் 'வாடா, போடா' என்று அழைக்கப்படுவதை, அவன் விரும்ப மாட்டான்..."

"விரும்ப மாட்டானா...? அப்படியானால், அவனுடைய விருப்பு – வெறுப்புக்கு ஏற்பத் தான், நான் இங்கு நடந்து கொள்ள வேண்டுமா...?"

"நீங்கள் மட்டுமல்ல... யாராக இருந்தாலும் சரிதான்... ஆனால் அவனுடைய எந்த வேலையிலும் உங்களுக்கு எவ்விதக் குறையும் தெரிய வராது..."

"ஹும்! கடைசியில் இவ்வித இடைஞ்சலில் ஏன் போய்ச் சிக்கினாய்...?"

"இவன் மிகப் பெரிய வேலைகளையெல்லாம் செய்கிறானே...!"

"அப்படியானால் சரி... ஒருதடவை அவனைக் கூப்பிடு... குறைந்த பட்சம் அறிமுகமாவது செய்து கொள்கிறேன்..."

நிகுன்ஜ்பாபு குரல் கொடுத்தார். அனுகூல் உடனே வந்து நின்றான்.

"இது என் மூன்றாவது சித்தப்பா..." என்ற நிகுன்ஜ்பாபு, "இப்போது இவர் சில நாள் நம்முடன் தங்கியிருப்பார்..."

"உத்தரவு..."

"ஓ கடவுளே...! மிக நன்றாக வங்காளி மொழி பேசுகிறானே...!"

நிவாரன் பானர்ஜி வந்த பிறகும் நிகுன்ஜ் பாபுவின் நிலைமையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. மாறாக, மாலை நேர நண்பர் கூட்டமும் கலைந்து விட்டது. ஒருபுறம் வயதான சித்தப்பா எதிரில் காக வைத்துச் சீட்டாட முடியவில்லை. அடுத்ததாக, அவர் இங்கு எத்தனை நாள் தங்கப் போகிறார் என்பதும் புரியவில்லை. அதற்குக் காரணம் ஒன்றும் இருந்தது. அனுகூல் விஷயத்தில் அவரிடம் ஒருவித அற்புத மனநிலையும் ஏற்பட்டிருந்தது. யந்திர மனிதனால் அவர் ஒருவிதத்தில் ஈர்க்கப்பட்டிருந்தார். அனுகூல் மிகப் பெரிய வேலைகளை எல்லாம் செய்வதை அவர் நிராகரிக்கவில்லை. அதேநேரத்தில், வேலையாளுக்கு மரியாதை தருவதையும், அவனுடன் சரிசமமாகப் பழகுவதையும் அவரால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. ஒருநாள் கேட்டும் விட்டார். "உன் வேலைக்காரனால் எனக்கு அடிக்கடி பல இடையூறுகள் ஏற்படுகின்றன, நிகுன்ஜ் பாபு..."

"ஏன் சித்தப்பா...?" சஞ்சலத்துடன் கேட்டார் நிகுன்ஜ்.

"அன்றொரு நாள் கீதை ஸ்லோகங்களை




உரக்கச் சொல்லிக் கொண்டிருந்தேன். அந்தப் போக்கிரி ரோபோ என்ன செய்தது தெரியுமா? என் ஸ்லோகப் பாராயணத்தில் தப்பு கண்டு பிடிக்கிறது... தவறாகவே இருக் கட்டுமே! அதைச் சுட்டிக்காட்டுவது வேலை யாளின் வேலையா...? இது மிக மோசமான நிலைமை இல்லை...? கன்னத்தில் ஓங்கி ஒரு அறை கொடுக்க வேண்டும்போல் ஆத்திரம் வந்தது எனக்கு... சிரமப்பட்டு அடக்கிக் கொண்டேன்..."

"அப்படியெல்லாம் அதை அறைந்து விடாதீர்கள் சித்தப்பா... அது மிகவும் ஆபத்தாகப் போய் முடிந்து விடும்... அதன் மீது கை நீட்டுவதே கூடாது! இனிமேல், அனுகூல் இருக்கும்போது, ஸ்தோத்திரம் சொல் வதையே விட்டு விடுங்கள். அதன் எதிரில் வாய் திறக்காமல் இருப்பதுதான் உத்தமம்..."

நிகுன்ஜ்பாபுவின் நிதி நிலைமையில் சற்றும் முன்னேற்றமில்லை. அனுகூலுக்காக மாதம் இரண்டாயிரம் கட்டுவது அவருக்கு மிகவும் சிரமமாகி விட்டது. ஒருநாள், அனு கூலை அழைத்து தன் நிலைமை எல்லா வற்றையும் ஒளிக்காமல் எடுத்துக் கூறினார்.

"அனுகூல், இப்போதெல்லாம் என் தொழில் மிகவும் மந்தமடைந்து விட்டது. இதெல்லாம் உனக்கே தெரிந்ததுதான்... உன்னிடம் எனக்கு அளவு கடந்த அன்பு ஏற்பட்டு விட்டது. இன்னும் எத்தனை நாள் உன்னை நான் என் வீட்டில் வைத்துக் கொண்டிருப்பேனோ தெரியாது..."

"இது பற்றி என்னைக் கொஞ்சம் யோசிக்க விடுங்கள்..."

"எந்த விஷயம் பற்றி...?"

"உங்களது நிதி நிலைமையில் நான் ஏதேனும் மாற்றம் செய்ய முடியுமா என்பது பற்றித்தான்..."

–இந்த உரையாடலுக்குப் பிறகு இரண்டு மாதங்கள் கழிந்து விட்டன. செய்தித் தாளை வைத்து விட்டு, ஒரு கோப்பை தேநீர் வாங்கிக் குடிப்பதற்காக அவர் அனுகூலுக் குக் குரல் கொடுக்க இருந்தபோது, அதுவே அவர் எதிரில் வந்து நின்றது.

"என்ன அனுகூல்...? என்ன விஷயம்...?"

"ஒரு பயங்கர விபத்து நடந்து விட்டது எஜமான்...!"

"என்ன ஆயிற்று...?"

"நிவாரன் பானர்ஜி ஜன்னல் ஓரம் நின்று, ரவீந்திரநாத் எழுதிய 'வர்ஷாருது' பற்றிய ஒரு பாடலைத் தப்பும் தவறுமாக முணுமுணுத்துக் கொண்டிருந்தார். நான் வீட்டைச் சுத்தம் செய்து கொண்டிருந்தேன். என்னால், அவர் செய்த தவறுகளைப் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. நான் அவரைத் திருத்த முயன்றேன். உடனே அவருக்குக் கோபம் வந்ததே பார்க்க வேண் டும்...! ஒரே அறை... என்னை அவர் அறைந்து விட்டார்... அடுத்தக்கணம், என் இயல்புப்படி, என்னிடம் அவரைப் பழிக்குப் பழி வாங்கியே தீர்வது என்ற வேகம்... அவரை நான் பழி வாங்கி விட்டேன்..."

"பழிக்குப் பழியா...? என்ன சொல்கிறாய் அனுகூல்...?"

"ஆம் ஐயா! அவருடைய தொப்புளில் உயர்சக்தி மின்சாரத்தைப் பாய்ச்ச வேண் டியதாகி விட்டது! என்னை மன்னித்து விடுங்கள்..."

"அப்படியானால்...?"

"அவர் இப்போது உயிருடன் இல்லை...! நான் அவரை எனது மின்சக்தியால் தாக்கிய அதேசமயத்தில், அருகில் வேறு எங்கோ இடி வேறு விழுந்திருக்கிறது..."

"ஆமாம்... நானும் கேட்டேன்..."

"ஆகவே, அவருடைய இறப்பிற்கான உண்மையான காரணம் எது என்பதை, நீங்கள் யாருக்கும் கூற வேண்டிய அவசியம் இருக்காது..."

"ஆனால்...?"

"நீங்கள் கவலைப்படாதீர்கள்... இந்த விபத்தால் உங்களுக்கு நன்மையே ஏற் படும்..."

அப்படித்தான் நடந்தது. அதற்கு இரண்டு நாள் கழித்து, வக்கீல் பாஸ்கர் போஸ் நிகுன்ஜ்பாபுவுக்கு ஃபோன் செய்து சொன் னார் – "நிவாரன் பானர்ஜி தனது சொத்து முழுவதையும் தன்னுடைய அண்ணன் மகனுக்கு – அதாவது, நிகுன்ஜ்பாபுவாகிய உன் பெயருக்கு உயில் எழுதி வைத்துள் ளார்...!"

பதினொன்றரை லட்சம் ரூபாய்!




Printed and published by K. Rajendran at the Bharathan Press on behalf of Bharathan Publications Private Limited. Editor : Mrs. Seetha Ravi
Address : 47, Jawaharlal Nehru Road, Ekkaduthangal, Chennai - 600 097.
Telephones : Editorial : 2345624; Circulation Manager; Subscription and Advertisement : 2345623;
Chief Administrative Officer : 2345622; Fax : 2345621
Annual Subscription : India Rs. 250/-; Overseas Rs. 1900/- (Air Mail)
Half Yearly Subscription : India Rs. 125/-; Overseas Rs. 950/- (Air Mail)


Registered with the Registrar of Newspaper of India under No. 1041/57 * Registered
No. TN / MS (S) M4392 /99* Licensed to post without prepayment under PMG's Licence
No. TN / MS/ (S) 161 * Registered as a Newspaper in Srilanka
சரவணா
ஸ்டோர்ஸ்
தங்க நகைகள்,
பட்டுப் புடவைகள்
அணியும் நாளெல்லாம்
ஆனந்த திருநாளே!
சரவணா ஸ்டோர்ஸ்
தங்க நகைகள் ஜவுளிகள் பாத்திரங்கள்
ரெங்கநாதன் தெரு, தி.நகர், சென்னை – 600 017.